
கல்கி
KALKI 28.8.94 ரூ. 3.00
ஃபாஷன் தலைநகர் திருப்பூர்!

ஹுப்ளியில் நடந்தது என்ன?

துப்பாக்கிச் சூடு நடத்துகிற அளவுக்கு ஹுப்ளியில் என்ன பிரச்னை?

கர்நாடக மாநிலத்தின் வடமேற்குப் பகுதியில் உள்ளது ஹுப்ளி நகரம். அந்த நகரின் நடுவில், சுமார் ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் ஒரு மைதானம் உள்ளது. அதை ஈத்கா மைதானம் என்று சொல்வார்கள். அதற்குக் காரணம், வருடத்தில் இரண்டு முறை, ரம்ஜான் (ஈத்) மற்றும் பக்ரீத்தின் போது, முஸ்லீம்கள் அங்கே தொழுகை நடத்துவார்கள். அவர்கள் ஏன் அங்கே தொழ வேண்டும்? மசூதியில் தொழலாமே! சரியான கேள்விகள்தான்.

விஷயம் என்னவென்றால் பண்டிகைகளின் போது எல்லா முஸ்லீம்களுமே, மசூதியில் தொழ இடமிருக்காது. அதற்காகத்தான் இது போன்ற ஈத்கா மைதானங்கள் நமது நாட்டில், பெரும்பான்மையான நகரங்களிலும், ஏன் கிராமங்களிலும் கூட உண்டு. அந்த மைதானத்தில் ஒற்றைச் சுவரால் மசூதி வடிவத்தைக் கட்டியிருப்பார்கள்.



ஹுப்ளி மைதானத்திலும் இதே நிலை தான். அந்த மைதானத்தில் சிறுவர்கள், கிரிக்கெட் விளையாடுவதிலிருந்து, பெரிசுகள் மாலை வேளையில் காற்று வாங்குவது வரை எல்லாம் நடந்து கொண்டு தானிருந்தன, லோக்கல் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. ஆட்கள் மூக்கை நுழைக்காத வரை.

நான்கு வருடங்களுக்கு முன் துவங்கியது சுசமுசா. "அந்த மைதானத்தின் பெயர் ஈத்கா மைதானம் அல்ல; ராணிசென்னம்மா மைதானம்தான். சென்னம்மாவுக்குச் சிலையும், ஒரு வளைவும் அங்கிருக்கிறது. ஆகவே அதை ஈத்கா மைதானம் என்று இருப்பதை மாற்றி, சென்னம்மா மைதானம் என்றழைக்க வேண்டும்" என்றது ஹுப்ளி - தார்வார் கழகம் என்ற அமைப்பு. ஆர்.எஸ். எஸ்ஸின் முன்னணி அமைப்பு இது.


கிட்டூர் ராணி சென்னம்மா என்பவர் ஜான்சி ராணி போன்று அந்தப் பகுதியில் ஆண்டு கொண்டிருந்தவர். ஆர்.எஸ்.எஸ் ஸும் பா.ஜ.கவும், பிரச்னையைக் கிளப்பவே, மைதானத்திற்கு வேலி போட்டுப் பாதுகாக்கத் துவங்கியது அஞ்சுமான் என்னும் இஸ்லாம் அமைப்பு. "எங்களுக்கு 99 வருட குத்தகைக்கு மைதானம் விடப்பட்டிருக்கிறது" என்கிறது அந்த அமைப்பு. "மைதானத்தில் கடைகளைக் கட்டி வாடகைக்கு விட முயன்றார்கள்; அதற்கு நகராட்சி தடை விதிக்க வேண்டும்" என்கிறார்கள் பா.ஜ.கவினர். விவகாரம் இப்போது கோர்ட்டில் இருக்கிறது.

இந்த நிலையில் கடந்த இரண்டு வருடங்களாக அந்த மைதானத்தில் சுதந்திர தினத்தன்று தேசியக் கொடி ஏற்றியே தீருவோம் என்று பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தனர் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.கட்சியினர். 92-ம் ஆண்டு இப்படி அறிவித்த போது கடுமையான பதற்றம் உண்டாகிக் கலவரங்களும் நடந்தன. அதனால் சென்ற ஆண்டு கொடியேற்றத் தடைவிதித்தது கர்நாடக அரசு. இந்த வருடம் தடையை மீறி உயிர்ப் பலி வரை கொண்டு சென்று விட்டார்கள் பா.ஜ.க.வினர்.

இந்த ஆண்டு அரசின் தடையையும் மீறி பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்குக் கொடியேற்ற வேண்டிய அவசியம் என்ன வந்தது? காரணம் இல்லாமல் இல்லை. கர்நாடகத்தில் இந்த வருடம் சட்டமன்றத் தேர்தல் வருகிறது. அதில் வோட்டுப் பிடிக்கத்தான் இந்த நாடகம். நாம் பலமுறை சொன்னது போல, நல்ல கொள்கைகளை உடைய பா.ஜ.க. அவைகளைச் சொல்லி மக்களைக் கவராமல் மதவெறியைத் தூண்டிக் கவர நினைப்பது நாட்டின் துரதிர்ஷ்டமே!

- கௌசல்யா

ஃபாஷன் தலைநகர் திருப்பூர்!



• புது பஸ் நிலையத்தின் மாடல்

'திருப்பூருக்குச் செல்பவன் திரும்பி வர மாட்டான்' என்ற பேச்சு வழக்கு தப்பர்த்தத்துக்கு இடம் தர வேண்டியதில்லை. வழக்கு உருவாகக் காரணம், வேலை வாய்ப்பு. அதனால்தான் 'அந்தச் சின்ன ஊரை (திருப்பூரை) நான் ஒருமுறை காண வேண்டும்!' என்று கூறியிருக்கிறார் நிதியமைச்சர் மன்மோகன் சிங்.


இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பனியன் போன்ற உள்ளாடைகள், டீ ஷர்ட்டுகள், விளையாட்டு வீரர்களுக்கான ஆடைகள் ஆகியவற்றில் 85 சதவிகிதத்தைத் திருப்பூர்தான் ஏற்றுமதி செய்கிறது. அதாவது ஆண்டுக்குச் சுமார், 2,200 கோடி ரூபாய்! "இந்த ஆண்டு 2500 கோடி ரூபாயை எட்டியிருக்க வேண்டும்! இடையில் ஏற்பட்ட நூல் விலையேற்றம் - தட்டுப்பாடு - காரணமாக அது முடியாமல் போய்விட்டது!" என்கிறார், திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் ஆர்.எம். சுப்ரமணியம்.

"உழைக்கத் தயாராயிருக்கும் யாருக்கும் பிழைப்புத் தந்து, அவர்கள் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்துகிற ஊர்தான் திருப்பூர்!" என்கிறார் அவர். இந்தத் 'திருப்பம்' பாண்டவர்கள் காலத்திலேயே நடந்திருப்பதாகச் சொல்கிறார்கள்.

பாண்டவர்கள் அஞ்ஞாத வாசம் செய்த போது, விராடபுரத்தில் தங்கியிருந்ததாக மகா பாரதம் சொல்கிறது. அன்றைய விராடபுரம்தான் திருப்பூருக்கு அருகிலிருக்கும் இன்றைய தாராபுரம். பாண்டவர்கள் தங்கியிருந்த இடத்தை, தனது ஒற்றர்கள் மூலம் அறிந்த துரியோதனன், விராட மன்னனின் எதிரியான இரிகர்த்த தேச மன்னன் சுதர்மனின் உதவியோடு பசுக்களை வசப்படுத்தினான். அப்படி அவன் வசப்படுத்தி, வடதிசையில் ஓட்டிச் சென்ற பசுக்களை, விராட இளவரசன் உத்தரன் துணையோடு அர்ஜுனன் போரிட்டுத் திருப்பிக் கொண்டு சென்றான். அப்படி அர்ஜுனன் பசுக்களைத் திருப்பிய இடம் தான் 'திருப்பூர்' என்று அழைக்கப்படலாயிற்று என்று சொல்லப்படுகிறது.

திருப்பூரில் ஒரு திருப்பம்!

அதன் பிறகு கொடி காத்த குமரனின் தியாகத்தால் திருப்பூர் அனைத்திந்திய அளவில் புகழ் பெற்றது என்றாலும் தொழில் ரீதியாக 1935 - ல் தான் திருப்பூரில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. அதுவரை அரைக்கைச் சட்டைகள், டிரவுசர்களை ஒரு குடிசைத் தொழிலாகச் செய்து



• எல்லாம் கம்ப்யூட்டர் மயம்



• திருமதி செல்வி சக்திவேல்



• மேம்பாலம் : என்று முடியும்?



• கண்ணைக் கவரும் நகராட்சிப் பூங்கா

வந்த திருப்பூரில், அப்போதுதான் முதன் முதலாகக் கையினால் இயங்கும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டன. அதன் பிறகும் ஒரு நீண்ட இடைவெளி. அறுபதுகளில்தான் பின்னிய உள்ளாடையான பனியன் தயாரிப்பு துவங்கப்பட்டது. அதன் தரம் மிளிர மிளிர ஒரு வழியாக 78 - ல் முதன் முதலாகத் திருப்பூர் தயாரிப்புகளுக்கு ஏற்றுமதி ஆர்டர் கிடைத்தது. பிறகென்ன! இன்றைக்கு இந்தியாவிலிருக்கும் பின்னலாடைத் தயாரிப்பு யூனிட்டுகளில் தொண்ணூறு சதவிகிதம் திருப்பூரில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதனால் சுமார் இரண்டு லட்சப் பேருக்கு வேலை வாய்ப்பு! தாராளமான பணப்புழக்கம்.

பணப்புழக்கம்...

எந்த அளவுக்குப் பணப்புழக்கம்? "திருப்பூர்வாசி ஒருவர் கொடை ரோட்டில் பழங்கள் வாங்கிக் கொண்டு நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்தார். எண்பது ரூபாய் போக, மீதி இருபது ரூபாயைப் பழக்கடைக்காரர் திருப்பிக் கொடுத்தார். திருப்பூர்வாசியோ, 'அதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்!' என்று சர்வ சாதாரணமாகச் சொல்லிவிட்டு வந்து விட்டார்!" என்று திருப்பூரின் பணப்புழக்கத்திற்கு ஓர் உதாரணம் சொல்கிறார், வாசகர் என். குமாரசாமி.

"நான் கல்லூரியில் பட்டப் படிப்புப் படித்து விட்டு, அரசாங்க வேலைக்காக மனு எழுதிப் போட்டுக் கொண்டு காத்திருக்கவில்லை. உடனடியாக ஒரு பனியன் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தேன். இன்று எனது உழைப்பின் மூலம் உயர்ந்து, மாதம் நான்காயிரம் ரூபாய்க்குமேல் சம்பாதித்துக் கொண்டிருக்கிறேன்!" என்று சந்தோஷமாகச் சொல்கிறார் குமாரசாமி.

"இப்படியொரு அபாரமான முன்னேற்றத்திற்குத் திருப்பூர் மக்களின் கடுமையான உழைப்பும் நேர்மையும்தான் காரணம்!" என்கிறார் திருப்பூரிலுள்ள டாக்டர் முருகநாதன். இவர் திருப்பூர் தமிழ்ச் சங்கத்தின் தலைவருங்கூட.



• புதிய புதிய டிசைன்கள்....

மாசுபட்ட நிலத்தடிநீர்....

திருப்பூர் ஒரு தொழில் நகரமாக உருவாக உருவாக வந்தாரையெல்லாம் வாழ வைத்துக் கொண்டிருப்பது உண்மைதான். அதே சமயத்தில் இங்குள்ள சாயத் தொழிற்சாலைகளால் திருப்பூரிலுள்ள நொய்யலாறு மாசுபட்டுப் போனது மட்டுமல்ல; நிலத்தடி நீரும் சுத்தமாக மாசுபட்டு விட்டது. அதனால் திருப்பூரைச் சுற்றியுள்ள கிராமங்களின் விவசாயம் முழுமையாகவே பாதிக்கப்பட்டு விட்டது

• ஆறுமுகம்



• டாக்டர் முருகநாதன்



• சாமியப்பன்



என்பதும் மறுக்க முடியாத உண்மையாகத்தான் இருக்கிறது.

உதாரணத்திற்கு, "நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்? டீயா, காப்பியா (காப்பி திருப்பூர் வாசிகளுக்குக் கட்டுப்படியாகும்!) கூல்டிரிங்கா?" என்று திருப்பூரிலுள்ள ஓர் இல்லத்தரசி நம்மைப் பார்த்துக் கேட்கும் போது. "அதெல்லாம் வேண்டாம், அம்மணி! குடிப்பதற்குக் கொஞ்சம் பச்சைத் தண்ணீர் மாத்திரம் கொடுங்கள் அதுவே போதும்!" என்று சொல்லிவிட்டால், அவ்வளவுதான்! உண்மையிலேயே அந்த அம்மணி தம்ளரில் பச்சைக் கலரிலுள்ள தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்து விடுவார். அந்த அளவுக்குத் திருப்பூரின் நிலத்தடிநீர் சாயப்பட்டறைகளின் காரணமாக மாசு படிந்து கிடக்கிறது.

"இத்தனை ஏன்? இங்குள்ள காற்றிலுங் கூட கலப்படம்தான்! என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு" என்கிறார் டாக்டர் முருகநாதன். "பஞ்சு தொடர்பான தூசிகள் இங்குள்ள காற்றில் அதிகம் கலந்திருப்பதால், இங்குள்ளவர்களுக்குச் சளி, ஆஸ்துமா, மூச்சுத் திணறல் போன்ற வியாதிகள் வருவது மிகவும் சகஜமான ஒன்றாகி விட்டது என்பதை மறுக்க முடியாது!" என்கிறார் அவர்.

பட்டறையாளர்களின் பதில்

திருப்பூரிலுள்ள நிலத்தடி நீர் மாசுபட்டுப் போனதற்கும், விவசாயம் பாதிக்கப்பட்டதற்கும் முழுக்க முழுக்க சாயப்பட்டறைகள் தான் பொறுப்பு என்கிற நிலையில் அவர்கள் இதற்கு என்ன பதில் சொல்கிறார்கள்?

"எங்கள் சாயப்பட்டறைகளிலிருந்து வெளியேறும் அசுத்த நீரை நாங்கள் சுத்திகரித்து அனுப்புவதற்குத் தயாராயிருக்கிறோம். அதற்கான சுத்திகரிப்பு இயந்திரங்களை நிறுவுவதிலும் நாங்கள் இப்போது முனைப் போடு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்!" என்கிறார், திருப்பூர் சாயப்பட்டறையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ். சாமியப்பன்.

கடந்த 86 - ம் ஆண்டே சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், மாசு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை நிறுவ வேண்டும்

• வீதிகளெல்லாம் தோண்டப்படுகின்றன...



என்று சாயப்பட்டறையாளர்களிடம் அறிவித்த போதும் ஏன் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை?


"அப்போது சுமார் பதினைந்து சாயப்

பட்டறைகள்தான் இருந்தன என்பதாலோ என்னவோ, அரசும் எங்களுக்கு ஒரு தேதியை நிர்ணயித்து, அதற்குள் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்திவிட வேண்டும் என்று வரையறை ஏதும் செய்யவில்லை. அதனால் பட்டறையாளர்களும் அதையொரு முக்கியமான விஷயமாகக் கருதவில்லை. ஆனால் இன்றைய நிலை அப்படியில்லை. இன்று சுமார் 550 சாயப்பட்டறைகள் இயங்குகின்றன. அதனால் சுற்றுச் சூழல் பாதிப்பும் அதிகரித்துள்ளது என்பதை நாங்களும் உணர்ந்து செயல்படுகிறோம்!" என்கிறார் சாமியப்பன்.

இதிலும் அரசு ஒரு குளறுபடி செய்துள்ளது என்கிறார் அவர். "முன்பு ஒவ்வொரு சாயப்பட்டறைக்காரரும் அவரவர் பட்டறையிலிருந்து வெளியேறும் நீரை அவரவரே சுத்திகரிப்பு இயந்திரங்களை நிறுவிச் சுத்திகரித்து அனுப்ப வேண்டும். அதற்கான செலவுகளில் 50 சதத்தை மான்யமாகவும் 40 சதத்தை நீண்டகாலக் கடனாகவும் தருவதாக அரசு கூறியது. நாங்களும் சந்தோஷமாக ஒப்புக் கொண்டோம். இப்போதோ, சாயப்பட்டறைகளைத் தொகுதி தொகுதியாகப் பிரித்து, ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும் என்று அரசு கூறுகிறது. இதனால் ஒவ்வொரு பட்டறையிலிருந்தும் சுத்தகரிப்பு நிலையமுள்ள இடத்திற்குக் குழாய்களின் மூலம்தான் மாக நீரைக் கொண்டு செல்ல முடியும் என்பதால், குழாய்களுக்கான செலவுகள் இப்போது கூடுதலாக உள்ளது. முன்பு சொன்ன ஐம்பது சதம் மான்யம் என்பதிலும் அரசு குறைத்துக் கொண்டு பின் வாங்குகிறது. இதனாலும் எல்லாப்பட்டறையாளர்களையும் ஒருமித்த கருத்துக்குக் கொண்டு வந்து சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதில் தாமதமாகிறது!" என்கிறார் சாமியப்பன்.

"அரசு முன்பு அப்படிக் கூறியது உண்மைதான். இன்று ஐநூறுக்கும் மேற்பட்ட பட்டறைகள் வந்து விட்ட நிலையில், ஒவ்வொரு வரும் தனித்தனியாகச் சுத்திகரிப்பு நிலையம் அமைத் தால், அனைவருமே தங்கள் சுத்திகரிப்பு நிலையங்களை இயங்கச் செய்கிறார்களா என்பதைக் கண்காணிப்பது கஷ்டம். சிலர் இயங்கச் செய்யாமலேயே இருக்கக் கூடும். அதனால், பட்டறைகளைத் தொகுதி தொகுதியாகப் பிரித்துப் பொதுவான சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்கச் சொல்கிறது அரசு. அதனால், கண்காணிப்பும் சரியாகச் செய்ய முடியும். தவறுகளே நடக்காதல்லவா!" என்கிறார் திருப்பூர் தொகுதி எம்.எல்.ஏ.வான பழனிசாமி.

• சுற்றுச் சூழலைப் பாதிக்கும் சாயப்பட்டறை...



நன்றி! நன்றி!!

திருப்பூர் நகரத்தைப் பற்றி மெகா கட்டுரை எழுதுவதற்காகக் கடிதம் எழுதி விஷயங்களைத் தந்துதவிய ஏராளமான திருப்பூர் வாசக-வாசகிகளுக்கும் வெளியூரிலிருந்தாலும் தங்கள் திருப்பூர் அனுபவம் பற்றி மறக்காமல் எழுதியனுப்பியவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி. அத்தனை பேரும் திருப்பூரின் ஏற்றுமதிச் சாதனையோடு குடிநீர்ப் பிரச்னை, போக்குவரத்து நெரிசல், சுற்றுச் சூழல் பாதிப்பு ஆகியவை பற்றித்தான் குறிப்பிட்டு எழுதியிருந்தார்கள் என்பதால் அத்தனை பேரின் பெயர்களையும் தனித் தனியாகப் பிரசுரிக்க இயலவில்லை; வருந்துகிறோம். - ஆசிரியர்

எங்களுக்கும் பொறுப்பு உண்டு!

"எப்படியிருந்தாலும் எங்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. நாங்களும் இங்குதான் வாழ்கிறோம் என்பதால் சுற்றுச்சூழல் பாதிப்பு எங்களுக்கும்தான். எனவே கூடிய விரைவிலேயே சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுச் செயல்படத் துவங்கிவிடும் என்பதற்கு நாங்களே உறுதியளிக்கிறோம்!" என்கிறார் சாமியப்பன்.

இப்படிப்பட்டதொரு சூழ் நிலையில் நகரின் குடிநீர் வசதி மிகவும் சிறப்பாக இருக்க வேண்டாமா? 1963 - ல் அன்றைய நகராட்சித் தலைவர் கே.என். பழனிச்சாமிக் கவுண்டர் போட்ட முதல் குடி நீர்த்திட்டத்திற்குப் (இந்த நன்றிக் கடனுக்காக இவருக்கு மட்டுமே திருப்பூரில் சிலை வைத்திருக்கிறார்கள். வேறு எந்த அரசியல் தலைவருக்கும் திருப்பூரில் சிலையே கிடையாது!) பிறகு 83 - ல் போடப்பட்ட இரண்டாவது குடிநீர்த் திட்டம் இன்னமும் கூட முடிவடையாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

"83 - ல் திட்டம் அறிவிக்கப்பட்டது என்றாலும் அதற்கான நிதி உடனடியாக ஒதுக்கப்படாமல்தான் இருந்தது. அண்மையில் தான் முழுமையான நிதி ஒதுக்கப்பட்டது. அதன் பிறகு கிடுகிடுவென வேலை

நடந்து இப்போது முடியும் தருவாயில் இருக்கிறது!'' என்கிறார் எம்.எல்.ஏ. பழனிசாமி.

"இந்த இரண்டாவது குடிநீர்த் திட்டத்தில் 21,000 வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு வழங்கலாம். அதில் இப்போது ஆறாயிரம் இணைப்புகள் வழங்கப்பட்டு விட்டன. மீதியும் பகுதி பகுதியாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன!'' என்கிறார் நகராட்சி கமிஷனர் கணேசன்.

தாமதம் ஏன்?

அதில் ஏன் இத்தனை தாமதம்? "இதற்கு அரசும், அதிகாரிகளும் நிச்சயம் காரணமில்லை. காரணம், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மட்டும் புதிய பொறியாளர்களையும் ஊழியர்களையும் வேலைக்கமர்த்த முடியாது. இருக்கிறவர்களை வைத்துக் கொண்டுதான் வேலையை முடித்தாக வேண்டும். அப்படி நடந்து கொண்டுமிருக்கிறது!'' என்கிறார் எம்.எல்.ஏ.

குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்ட இடங்களிலும் சரிவரக் குடிநீர் கிடைப்பதில்லை என்று பொது மக்கள் கூறும் புகார்களையும் ஒப்புக் கொள்கிறார் கமிஷனர். "காரணம், புது பைப்லைன்கள் போடப்படும் போது, அது ஒரு வழியாக 'செட்' ஆவதற்குச் சில வாரங்களாவது பிடிக்கும். அதுவரை சில சில்லறைப் பிரச்னைகள் அவ்வப்போது வந்து கொண்டுதான் இருக்கும். அதையெல்லாம் நாங்கள் உடனடியாகச் சரிசெய்து கொண்டிருக்கிறோம். குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்கப்படாத இடங்களுக்கெல்லாம் லாரிகளின் மூலம் குடிநீர் வழங்கிக் கொண்டிருக்கிறோம். எப்படியானாலும் நாளொன்றுக்குத் தலா 75 லிட்டரிலிருந்து 110 லிட்டர் வரை வழங்கிக் கொண்டுதானிருக்கிறோம்!'' என்கிறார் கமிஷனர்.

திருப்பூரில் பணப் புழக்கம் அதிகமாக இருப்பதாலும் தொழிலாளர்களின் உழைப்பு நேரத்தை முதலாளிகள் வீணடிக்க விரும்புவதில்லை என்பதாலும் இங்கு இரண்டு சக்கர வாகனங்களின் புழக்கம் எக்கச்சக்கம். (இத்தனை சின்ன ஊரில் பன்னிரண்டு பெட்ரோல் பங்குகள்!) ஆனால் சாலை வசதி?

நெரிசல் மிகுந்த சாலைகள்!

"திடீரென்று ஓரிடத்தில் விபத்து நேர்ந்து விட்டால் சம்பந்தப்பட்டவர்களை ஆஸ்பத்திரிக்கு அழைத்து வருவதற்கு எவ்வளவு நேரமாகும் என்பதைக் கண்டறிவதற்காக மருத்துவர்களாகிய நாங்கள் ஒரு சர்வே செய்தோம். ஒரு குறிப்பிட்ட ஒரு கட்டடத்தில் விபத்து நேர்ந்து விட்டதாகச் செய்தி கிடைத்ததும், உடனடியாக உதவிக்குழு அந்த இடத்திற்கு விரைந்தது. ஆனால் அந்த உதவிக் குழுவால் உடனடியாக அங்கே போய்ச் சேர முடியவில்லை. தாமதமென்றால் அப்படியொரு தாமதம். காரணம் சாலை வசதி. அதனால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்தான்!'' என்கிறார் டாக்டர் முருகநாதன்.

"இது மாதிரியான அசௌகரியமும் நெரிசலும் தாற்காலிகமானதுதான். ஏனெனில் இப்போது தொலைத் தொடர்புத் துறையினர் நவீனப்படுத்துவதற்காக வேண்டி ஆங்காங்கே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அதோடு நகராட்சி நிர்வாகமும் குடிநீர் இணைப்புக் குழாய்கள் போடுவதற்கான வேலைகளைச் செய்து கொண்டிருப்பதால் சாலைகள் ஆங்காங்கே தோண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த வேலைகள் முடிவடைந்ததும் எல்லாம் சீராகிவிடும்!'' என்கிறார் கமிஷனர் கணேசன்.

போக்குவரத்து நெரிசலுக்கு இது மட்டும்



• கணேசன்

— கமிஷனர் பேட்டி

"திருப்பூர் நகரின் சாக்கடை வசதிகள் அத்தனை சிறப்பாக இல்லையே?'' என்று நகராட்சி கமிஷனர் கணேசனைச் சந்தித்துக் கேட்டோம்.

"உண்மைதான். இதற்குக் காரணம் மக்களிடையே விழிப்புணர்ச்சி இல்லாததுதான். இங்குள்ள பலபேர் வீடுகளைக் கட்டும் போது நகராட்சியிடம் லே-அவுட் ஒப்புதல் பெறாமலேயே அவர்களிஷ்டத்திற்குக் கட்டி விடுகிறார்கள். பிறகு நாங்கள் கோர்ட், கேஸ் என்று போகிற போது, நான்கைந்தாயிரம் ரூபாய் என்று கோர்ட் போடுகிற அபராதத்தைக் கட்டி விடுகிறார்கள். அதனால் நகராட்சியால் ஒன்றும் செய்ய முடியாமல் போகிறது. நகராட்சியிடம் லே-அவுட் ஒப்புதல் பெற்றால் நாங்கள் சாக்கடை வசதி போன்ற வசதிகளையும் கணக்கில் கொண்டு ஒப்புதல் தர முடியும். பிறகு கழிவுநீர் வெளியேறுதலும் சுலபமாக இருக்கும்.''

"ஒரு வேளை நகராட்சியிடம் லே-

"பொதுமக்களும் நகராட்சியோடு ஒத்துழைக்க வேண்டும்!"

அவுட் ஒப்புதல் பெறுவதில் நீண்ட தாமதம் ஏற்படுவதால்தான் அவர்கள் அப்படிச் செய்கிறார்களோ, என்னவோ!"

"இல்லை. நிச்சயமாக நாங்கள் தாமதம் செய்வதேயில்லை!"

"நாங்கள் நகரைச் சுற்றிப் பார்த்த போது தெருக்களில் ஆங்காங்கே குப்பை கூளங்கள் குவிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தோம்! ஏன் தினமும் சுத்தம் செய்வதில்லையா?"

"தினமும்தான் செய்கிறோம். ஆயினும் தொழிலாளர்களின் எண்ணிக்கை போதவில்லை என்பதையும் ஒப்புக் கொண்டு, இன்னொரு விஷயத்தையும் இங்கே சொல்ல விரும்புகிறேன். குப்பைகளை அகற்றிய மறு நிமிடமே இங்கு குப்பைகளைக் கொட்டுகிற பழக்கமும் இருக்கிறது. முடிந்தவரை குப்பைகளை அகற்றுவதற்கு முன்பே தங்கள் வீட்டுக் குப்பைகளைக் கொண்டு வந்து கொட்டினால் தெருக்கள் சுத்தமாக இருக்கும் என்பதை மக்கள் உணர வேண்டும்!"

"இங்குள்ள தமிழ்ச் சங்கம் நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் தயாராயிருந்தாலும் கலையரங்க வசதிகள் ஏதும் இல்லையாமே?"

"இங்குள்ள டவுன் ஹாலை ஒரு சந்தர்ப்பத்தில் போலீஸ் துறையினர் பயன்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். இப்போது அதைக் கலையரங்கமாக்கி மக்களின் பொழுது போக்கு நிகழ்ச்சிகளுக்குத் தருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம். விரைவில் ஏற்பாடு செய்து விடுவோம். பொது மக்களின் பொழுது போக்கிலும் நகராட்சி ஆர்வம் கொண்டிருக்கிறது என்பதற்குச் சாட்சி நகராட்சி நிர்வகித்து வரும் பூங்கா. பிருந்தாவனம் மாதிரி பூங்காவில் மின்விளக்கு அலங்காரங்கள் செய்து, இசையையும் ஒலிபரப்புகிறோம். குழந்தைகள் வனவளம் பற்றித் தெரிந்து கொள்வதற்காக அது பற்றிய ஓவியங்களையும் சுவர்களில் வரைந்துள்ளோம். நீங்கள் அவசியம் பாருங்கள்; அசந்து விடுவீர்கள்!" என்றார் கமிஷனர்.

உண்மைதான். பூங்காவின் மின்விளக்கு அலங்காரம் நிஜமாகவே பாராட்டும்படிதான் இருக்கிறது.

தானா காரணம்? கடந்த ஒன்றரை ஆண்டுகளாகக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் ரயில்வே மேம்பாலம்தான் முக்கிய காரணம் என்பது திருப்பூர்வாசிகளின் ஏகோபித்த குற்றச்சாட்டு. "மேம்பாலத்தின் இருபுறங்களிலும் போடப்பட வேண்டிய இணைப்புச் சாலை வேலைகள் ஏறத்தாழ முடிவடைந்து விட்டன. இனி இருபுறங்களையும் இணைக்கும் பாலத்தைக் கட்டும் பணி, முழுக்க முழுக்க ரயில்வே செய்ய வேண்டியது. அதுவும் வரும் ஜனவரிக்குள் செய்து முடிக்கப்பட்டுவிடும். பிறகு போக்குவரத்துப் பிரச்னையே இருக்காது!" என்கிறார் எம்.எல்.ஏ. பழனிசாமி.

பணம் சம்பாதிக்கப் பட்டம் எதற்கு?


திருப்பூர் நகரின் எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்து போகக்கூடிய பிரச்னைகள்தான் என்றாலும் இங்குள்ள பின்னலாடைத் தொழிலகங்களில் வேலை செய்யும் குழந்தைத் தொழிலாளர் பிரச்னை மட்டும் நீடித்துக் கொண்டுதான் இருக்கும்.

"இதற்கு ஒரு விடிவு காலமே கிடையாது. காரணம் பதினைந்து பதினாறு வயதுச் சிறுவன் கூட வேலை கற்றுக் கொண்டு வாரம் இருநூறு முந்நூறு ரூபாய் சம்பாதிக்கூடிய நிலைதான். பட்டப்படிப்பு படித்த குமாஸ்தாக்களை விட, பள்ளிப் படிப்பைக் கூட முடிக்காத சிறுவர்கள் அதிகமாகச் சம்பாதிக்க முடியும் என்பதைக் கண்கூடாகக் காணும் பெற்றோர்கள், எப்படித் தங்கள் குழந்தைகள் தொடர்ந்து படிக்க வேண்டும் என்று ஆசைப்பட முடியும்? அதனால்தான் பத்துப் பன்னிரண்டு வயதிலேயே வேலைக்கு அனுப்பி விடுகிறார்கள்!" என்கிறார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பூர் வட்டச் செயலாளர் ஆறுமுகம்.

"சாயப்பட்டறை போன்ற தொழிலகங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு அங்கு உபயோகப்படுத்தும் இரசாயனப் பொருள்கள் காரணமாகத் தோல்வியாதிகள் வருகின்றன!" என்னும் ஆறுமுகத்தின் குற்றச்சாட்டை சாயப்பட்டறையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளரான சாமியப்பன் மறுக்கிறார்.

"கையுறை போன்ற பாதுகாப்புச் சாதனங்களை நாங்கள் தொழிலாளர்களுக்கு வழங்குகிறோம். தொழிலகங்களின் சுத்தத்தை எங்கள் சங்கம் வலியுறுத்துகிறது. எனவே, வருகிற தோல் வியாதிகளுக்கெல்லாம் சாயப்பட்டறைகளைப் பொறுப்பாக்கக் கூடாது. வேண்டுமானால்

— எம்.எல்.ஏ. பேட்டி



திருப்பூர் தொகுதி எம்.எல்.ஏ. (அ.இ.அ.தி.மு.க.)வான பழனிசாமி நகரப் பிரச்னைகள் பற்றியும் எதிர்காலத் திட்டங்கள் பற்றியுமான விவரங்களை விரல் நுனியில் வைத்திருக்கிறார் என்பது ஆச்சரியம். அவரைச் சந்தித்த போது....

"திருப்பூர் நகருக்கான இரண்டாவது குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகும் கூட நாளுக்கு நாள் தொழில் அபிவிருத்திகள் நடந்து கொண்டே வருவதால் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பிருக்கிறதல்லவா?"

"ஆம். அதற்காகத்தான் பவானி கூடுதுறையிலிருந்து இருநூறு கோடி ரூபாய்ச் செலவில் குடிநீர் கொண்டு வரும் கூட்டுக் குடிநீர்த் திட்டமொன்றை மூன்றாவது திட்டமாகச் செயல்படுத்த வுள்ளோம். அது நிறைவேற்றப்படுகிற போது, வழியோர கிராமங்கள் பயனடைவதோடு, இங்குள்ள தொழிலகங்களுக்கான நீரையும் நகராட்சியால் வழங்க முடியும். அதனால் தொழிலதிபர்கள் தங்கள் தொழிலகங்களுக்கான சுத்தமான நீரை விலை கொடுத்து வாங்குகிற நிலைமையும் மாறும்!"

"திருப்பூர் நகரின் பேருந்து பஸ் நிலையம் எப்போது அமைக்கப் படும்?"

"அது நான்கு கோடி ரூபாய்த் திட்டம். பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இன்னும் ஓராண்டில் முடிவடைந்து விடும் என்று நினைக்கிறோம். அந்த பஸ் நிலையத்தின் அமைப்பு இதுவரை தென்னிந்தியாவிலேயே இல்லாத அமைப்பு. பஸ் நிலையத்துக்குள் செல்லும் பஸ்கள் சுரங்க வழியாகத்தான் செல்லும்; வெளியே வரும். அதனால் பஸ் நிலையத்தின் சுற்றுப்புறங்களில் பூங்காவை நிர்மாணிக்கவுள்ளோம். அதோடு, பஸ் நிலையத்தின் தரைத்தளக் கட்டடத்தில் எந்தக் கடைகளையும் கட்டி நாங்கள் வாடகைக்கு விடப்போவதில்லை. அப்படி விட்டால், அந்தக் கடைக்காரர்கள் தங்கள் கடைக்கு வெளியிலேயும் ஆக்ரமித்துக் கடைகளை விஸ்தரிப்பார்கள்; அதனால் பயணிகளின் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படும் என்பதால் எந்தக் கடையானாலும் அதை முதல் மாடியில் தான் வைக்க அனுமதிக்கப் போகிறோம்!"

"இங்குள்ள அரசு ஆஸ்பத்திரி நகரை

எங்கள் தொழிலகத்தைச் சுற்றிப் பாருங்கள்!" என்று சுற்றிக் காண்பிக்கிறார் சாமியப்பன்.

பின்னலாடைத் தொழிலகங்களில் வேலை பார்க்கும் சுமார் இரண்டு லட்சம் தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பெண்கள்தான். எம்ப்ராய்டரி போன்ற வேலைகளெல்லாம் கம்ப்யூட்டர் மயமாக்கப்பட்ட நவீன தொழில் நுட்பத்தில் செய்யப்படுவதால் பெண்களுக்கான தொழிலக வேலைகளும் மிகவும் இலகுவாகிக் கொண்டு வருகின்றன.

"இவற்றோடு டீ ஷர்ட்டுகளுக்கான புதிய புதிய எம்ப்ராய்டரி டிசைன்களெல்லாம் கம்ப்யூட்டர் சாப்ட்வேரில் உருவாக்கப்பட்டு, கம்ப்யூட்டர்களின் கட்டளைப்படி எம்ப்ராய்டரி மெஷின்கள் இயங்குவதால் எல்லாம் கச்சிதமாக இருக்கின்றன. ஒரு சட்டைக்கும் இன்னொரு சட்டைக்கும் இம்மியளவும் வித்தியாசமின்றி ஒரே டிசைனை எம்ப்ராய்டர் செய்ய முடிகிறது. இதனால் வெளிநாடுகளிலுள்ள நுகர்வோரைச் சுலபமாகக் கவரவும் திருப்திப்படுத்தவும் முடிகிறது!" என்கிறார்கள் நாம் சந்தித்துப் பேசிய பல ஏற்றுமதியாளர்களும். (இந்த நிலையில் ஃபேஷன் டிசைனிங் தொழில் நுட்பப் படிப்பு இப்போதுதான் அண்ணா பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்படுகிறது என்பது ஆச்சரியம்!)

பெண்களின் பங்கு...

இந்த ஏற்றுமதி வியாபாரங்களில் பெண்களின் பங்கு என்பது வெறும் தொழிலாளர்கள் என்கிற நிலையோடு மட்டும் நின்று விடவில்லை. நிர்வாகத்திலும் அவர்களின் பங்கு அதிகரித்துக் கொண்டே வருகிறது.

"இது காலத்தின் கட்டாயம்!" என்கிறார்

"திருப்பூரின் வளர்ச்சிக்கு மத்திய அரசும் உதவவேண்டும்!"

விட்டுத் தள்ளியிருப்பதால் அதற்கு பஸ் நிலையம் அருகில் ஒரு அவுட் பேஷண்ட் சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது வரவேற்கப்பட வேண்டிய விஷயம்தான். ஆனால், மருத்துவமனைக்கு எதிரிலேயே ஒரு விபத்து நடந்தால் கூட அங்கிருந்து இந்த ஓ.பி. சிகிச்சைப் பிரிவுக்கு வந்து அனுமதி வாங்கிச் சென்றால்தான் மருத்துவமனையில் சேர்த்துக் கொள்கிறார்களாமே? இது அபத்தமாக இல்லையா?"

"இது அபத்தம் என்பது உண்மைதான். எனவே, மருத்துவ மனையிலும் ஒரு ஓ.பி. சிகிச்சைப் பிரிவு தேவைதான். அங்கு தேவை என்று கேட்டால், உடனே இங்குள்ளதை எடுத்து அங்கே வைத்து விடுவார்கள். எனவே, இங்குள்ளதும் செயல்பட்டு, மருத்துவமனையிலும் புதிதாக ஒன்று செயல்படுகிற மாதிரி செய்ய வேண்டும். இதை மிகவும் டிப்ளமாடிக்காகச் செய்ய வேண்டும். இல்லையென்றால் அதிகாரிகள் விதிகளின் அணிவகுப்பைக் காட்டி முட்டுக்கட்டை போட்டுவிடுவார்கள். நிச்சயம் செய்கிறோம்."

"இது தொழிலாளர்கள் நிறைந்து வாழும் நகரமாக இருந்தாலும் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் ஏதும் கட்டிக் கொடுக்கப்படவில்லையே?"

"இப்போது தொழிலாளர்களுக்காக 253 ஏக்கர் நிலத்தை வீட்டு வசதி வாரியம் கையகப் படுத்தியிருக்கிறது. ஆயினும் வீடுகளைக் கட்டித் தரப் போவதில்லை. வெறும் மனைகளாகவே விற்பனை செய்யப் போகிறார்கள். அப்படிச் செய்யும் போது குடியிருப்பவர்கள் தங்களுக்குப் பிடித்த மாதிரியான அமைப்புகளில் வீடுகளைக் கட்டிக் கொள்ளலாமே, அதற்காக!"

கடைசியாக ஒரு வேண்டுகோளும் விடுத்தார் எம்.எல்.ஏ. "திருப்பூர் நகரம் ஆண்டுக்கு இரண்டாயிரம் கோடிக்கு மேல் ஏற்றுமதி செய்கிறது. ஏற்றுமதி மூலம் முழுக்க முழுக்க மத்திய அரசுதான் நேரடியாக அந்நியச் செலாவணி பெற்றுப் பயனடைகிறது. இந்தச் சூழ்நிலையில் திருப்பூர் மாதிரியான நகரங்களுக்கு அதனதன் ஏற்றுமதிக்குத் தக்கபடி ஆண்டு தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை மத்திய அரசு நகர வளர்ச்சித் திட்டங்களுக்காகத் தந்தால் இன்னும் எத்தனை உற்சாகமாக இருக்கும். இதை அரசியல் வாதிகளான நாங்கள் வலியுறுத்தும்போது, அந்த கோஷம் அரசியல் சாயங்களால் மங்கிப் போய்விடுகிறது. உங்களைப் போன்ற பத்திரிகையாளர்களும், படித்த அறிஞர்களும் சேர்ந்து இதை வலியுறுத்த வேண்டும்!" என்றார்.

இதோ வலியுறுத்தி விட்டோம்!

பப்பீஸ் நிறுவனத்தின் நிர்வாகிகளில் ஒருவரான திருமதி செல்வி சக்திவேல். "வியாபாரம் என்கிற போது - அதுவும் ஏற்றுமதி வியாபாரம் என்கிற போது ஆண்கள் வெளியூர்களுக்கும் வெளிநாடுகளுக்கும் அடிக்கடி செல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அந்த நேரத்தில் தொழிலகத்தின் நிர்வாகத்தைப் பொறுப்பானவர்கள் யாராவது கவனித்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படும் போது, பெண்களும் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்வது அவசியமாகிவிடுகிறது!" என்கிறார் கடந்த ஏழு ஆண்டுகளாகக் கணவரோடு சேர்ந்து நிர்வாகப் பொறுப்பைக் கவனித்து வரும் செல்வி.

"என் மனைவி நேரடியாகத் தொழிலகத்துக்கு வந்து வேலை செய்வதில்லையே தவிர, இங்கு ஒவ்வொரு நாளும் என்ன நடக்கிறது என்பது அவளுக்குத் தெரியும். நான் ஊரில் இல்லாத சமயங்களில், டெலிபோனில் தொடர்பு கொண்டே எல்லா வேலைகளும் ஒழுங்காக நடக்கிறதா என்பதைக் கண்காணித்து விடுவாள்!" என்கிறார் சாமியப்பன்.


"அடுத்த தலைமுறை பொறுப்புகளை ஏற்கும் போது, பாதிக்குப்பாதி பெண்களின் பங்கு நிச்சயம் இருக்கும்!" என்கிறார் செல்வி.

"திருப்பூர் நகரை ஒரு சாடிலைட் நகரமாக்க உத்தேசித்துள்ளோம்!" என்கிறார் கோவை மாவட்ட கலெக்டர் சி.வி. சங்கர்.

திருப்பூர் நகருக்கு என்ன செய்தாலும் ஒரு முதலீடுதான் என்பதை அரசும் உணர்ந்து கொண்டு செயல்பட வேண்டும் என்பதுதான் நமது ஆசையும்.

— இளங்கோவன்

அட்டை வண்ணப்படமும், படங்களும் : **யோகா**



அம்மா தாயே! ஆதிபராசக்தியே உன் பாதமே கதி! அருள் புரிவாய் தாயே...!
காளிமுத்து
ராபின் மெயன் மீது கர்நாடக போலீசார் வழக்கு
லஞ்ச ஊழல்
உன்னை புதைக்கத்தான் பள்ளம் தோண்டிட்டிருக்கோம்.. சமாத் -தா இடம் பிடிச்சுக்கோ..
லஞ்ச ஊழல் ஒழிப்பு இயக்கம்
இலங்கையுடனே சந்திரிகா பிரத -மரா வந்துட் டாங்க... ஊர்ல அரசி -யல் ஜோரா நடத்துது நீங்க தான்...
சோனியா ஆதரவு காங்கிரசார்
சோனியா காந்தி



கல்கி



1994
ஆகஸ்ட் 28
பவ
ஆவணி 12
மலர் : 53
இதழ் : 4

சுதந்திர தின சோகங்கள்!

நமது குடும்பங்களில் மாமன் - மருமான்; அல்லது அண்ணன் - தம்பிக்குள் விரோதம் இருக்கலாம். ஆனாலும் ஒரு கல்யாணம் என்று குடும்பத்தில் வரும் போது விட்டுக் கொடுக்காமல் இவரும் அழைப்பார்; அவரும் வருவார். கல்யாணக் கலகலப்பில் நடந்ததை மறந்து இருவருமே அன்புடன் பழக, அன்று முதல் உறவு முறை தொடரும்; ரத்த பாசம் வெற்றி பெறும்.

நாட்டின் சுதந்திர தினம் என்பதும் அப்படிப்பட்ட ஒரு கல்யாண தினம்தான். நேற்றுவரை ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பிரிந்து, கருத்து வேற்றுமை காட்டி, கீரியும் பாம்பும் போல் சண்டை போட்டவர்கள் கூட சுதந்திர தினத்தின்போது நெருங்கிவந்து மனம் விட்டுப் பழக வாய்ப்புக் கிட்டு கிறது. காலையில் தேசியக் கொடி ஏற்றுவது தேச பக்தியை உணர்த்த என்றால் மாலையில் ஆளுனரின் தேநீர் விருந்து, ஜனநாயகத்தில் ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் வெறுப்பைக் கக்காமல் தோழமை உணர்வுடன் பழக வேண்டும் என்பதை வலியுறுத்தத்தான். அதோடு, ஊர்ப் பிரமுகர்களையும் அறிஞர்களை யும் சந்திக்க ஒரு சந்தர்ப்பம். அவர்கள் மூலம் மக்களின் கருத்து கணிக்க ஒரு நல்வாய்ப்பு.

இத்தகைய ஒரு நல்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளாமல் முதல்வரும் மற்ற எல்லா அ.தி.மு.க.வினரும் ஆளுனரின் தேநீர் விருந்தினைப் புறக் கணித்தார்கள் என்பதைப் பார்க்க, 'அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது' என்பார்களே, அந்தப் பழமொழிதான் நினைவுக்கு வருகிறது. சிரிப் பதா? அழுவதா? இதுவா தேசபக்தி?

கொடி ஏற்று விழாவோ, ராகு காலத்துக்காக ஒத்திப் போடப்படுகிறது. பஞ்சாங்கம் பார்த்துத்தான் ஆகவேண்டுமென்றால் அதை முன்கூட்டியே பார்த்துத் தொலைத்திருக்கக் கூடாதா? தாற்காலிக 'டூப்' கொடி மரத்தில் கொடி யேற்றிய பிறகு முதல்வர் ஆற்றிய உரையோ, சுதந்திர தினத்தை மறந்து சுய தம்பட்ட உரையாகத் திகழ்கிறது. இவர் உண்ணா நோன்பு இருக்கப் போய்த்தான் பருவ மழை பொய்க்காமல் ஏரி, குளம் நிரம்பி வழிகிறதாம்! இதுவே இவரது நல்லாட்சிக்குச் சான்று பகருமாம்! இதையே இன்னும் சற்று விரிவுபடுத்துவது என்று ஆரம்பித்தால், சூரியன் உதிப்பதே இவர் ஆட்சி கண்டு அதிசயிக்க என்றும், அஸ்தமிப்பதோ, ஏற்பட்ட ஏமாற்றத்தால் வெட்கப்பட்டு முகத்தை மறைத்துக் கொள்ள என்றும் சொல்லலாமே! ஏன், 'பருவ மழை பொய்க்காத தற்கும் காவிரியில் நீர் ததும்பி வருவதற்கும் கடவுளுக்கு நன்றி செலுத்தி அடக்கம் பெறுவோம்' என்று பேசக் கூடாதா?

தமிழ்நாட்டின் கதை இதுவென்றால், கர்நாடகாவில் ஹுப்ளியில் குறிப்பிட்ட மைதானத்தில் கொடி ஏற்ற வேறு தினம் கிடைக்கவில்லையா பி.ஜே.பிக்கு? அல்லது ஆளும் காங்கிரஸுக்குத்தான், 'சுதந்திர தினத்தின்போது இந்தியாவின் எந்தப் பகுதியில் கொடி ஏற்றினால்தான் என்ன' என்று விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருக்கிறதா? அல்லது "அசந்தர்ப்பமாக ஏதும் நேராது; மத உணர்வுகளைத் துன்புறுத்தும் எவ்வித கோஷமும் எழுப்ப மாட்டோம்" என்று உறுதி அளிக்கும் துணிவும் பெருந்தன்மையும் பி.ஜே.பிக்கு இருக்கிறதா? இரு தரப்பிலும், 'நீ என்ன சொல்வது, நான் என்ன கேட்பது' என்ற கர்வமே தலை தூக்க, துப்பாக்கிச் சூடு நடந்து சில உயிர்கள் பலி கொடுக்கப்படுகின்றன! சுதந்திர தேவி உயிர்ப்பலியா கேட்டாள்? மாண்டவர்களுக்காகவும் அவர்கள் மரணத்துக்குக் காரணமான தலைவர்களின் அறியாமைக்காகவும் கண்ணீர் விட்டல்லவோ மௌனமாக அழுகிறாள்!

ஒரு பக்கம் மொய்லியின் ராஜினாமா கோரி கோஷம் எழ, மறுபக்கம் சு.சுவாமி, "பி.ஜே.பி.யின் பின்னணிக் கூடாரமான ஆர்.எஸ்.எஸ்., ஏன் தேசியக் கொடி ஏற்றுவதில்லை!" என்று கேள்வி எழுப்பி, "அதன் டில்லி அலுவலகத்தில் கொடி ஏற்றுவேன்" என்று கூறி, ஊர்வலம் கிளம்புகிறார். அங்கும் பதற்ற நிலை உருவாகிறது. எல்லாமே தேர்தல் ஸ்டண்ட்தான்!

ஆகமொத்தம் நமது தலைவர்கள் நடந்து கொள்ளும் போக்கைப் பார்த்தால், 'இவர்களுக்குச் சுதந்திர தினம் ஒரு கேடா?' என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. சுயநலத்துக்கே தேசபக்தி வேஷம் போட்டு, சுதந்திர தினத்தைக் கூட சுடுகாடு தினமாக்கி விடுகின்றனர். எவ்வளவு சோகம்!

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

Kalki Shopping Page

Kalki Shopping Page

ஒரு காலப் பெட்டகம்



வைரவிழா மலர் வாங்கும் வாசகர்களுக்கு
பல பரிசுகள் காத்திருக்கின்றன:

Lalitha வழங்கும் வைர மோதிரம்
வெள்ளி டீ செட்

NEPC AIRLINES வழங்கும்
விமான டிக்கெட்டுகள்

Nalli
வழங்கும்
பட்டுப் புடவைகள்

Sumeet®
வழங்கும் மிக்ஸிகள்

சில்வர் லைன் வழங்கும் நவநாகரீக ஷர்ட்டுகள்

அறுபது ஆண்டுகளாகத்
தமிழ் மக்களின்
வாழ்க்கையோடு பின்னிப்
பிணைந்த ஒரு நாளேடு,
'தினமணி.' இதன் வரலாறு ஒரு
நாளேட்டின் வரலாறு
மட்டுமல்ல, இந்த
நாட்டினுடைய வரலாறும்
ஆகும்.

தினமணி வைரவிழா
ஆண்டு நிறைவையொட்டி
கடந்த நாட்களின் காலப்
பெட்டகமாகவும், நிகழ்கால
அறிஞர்களின்
படைப்புகளுடனும், எதிர்கால
நம்பிக்கை நட்சத்திரங்களின்
கதைகளோடும் ஒரு
'வைரவிழா மலர்'
வெளிவரவுள்ளது.

* பழைய தலையங்கங்கள், சட்டமன்ற நிகழ்ச்சிகள், கார்டூன்கள்.
* வண்ணப் படங்கள்.
* அரசியல், விஞ்ஞான, இலக்கியக் கட்டுரைகள்.
* புகழ்பெற்ற இலக்கிய கர்த்தாக்களின் அன்றைய, இன்றைய படைப்புகள்.

400 பக்கங்களுக்கு மேல்
எக்காலத்திலும் போற்றிப்
பாதுகாக்கப்பட வேண்டிய
ஒரு பொக்கிஷம். எதிர்காலச்
சந்ததியினருக்குத் தந்திட
வேண்டிய பெரும் செல்வம்.

தினமணி

'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்.'

விவரங்கள்: தினமணி கதிரில்

சுமக்காமல் பெற்ற குழந்தை!



• டாக்டர் கமலா செல்வராஜ்

ஆந்திராவைச் சேர்ந்தவர் அருணா (பெயர் மாற்றப்பட்டுள்ளது). அவர் சில நாட்களுக்கு முன்பு, சென்னை ஜி.ஜி. மருத்துவமனையில் ஓர் அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். குழந்தை கோதுமை நிறம். நிறைய தலைமுடி. ஒண்ணே முக்கால் கிலோ எடை. தாயும் சேயும் நலம்.

அருணா பெற்றெடுத்த ஆண் குழந்தை இப்போது அருணாவிடம் இல்லை. "அவருடைய செயல், இந்தியாவைப் பொருத்தவரை மிக அரிய ஒன்று. "ஷி இஸ் கிரேட்" என்கிறார் டாக்டர் கமலா செல்வராஜ். அப்படி அருணா என்ன செய்திருக்கிறார்?

மகேஸ்வரன் - லட்சுமி தம்பதிகளுக்காக (மீண்டும் ரகசியம் பாதுகாக்கப் பெயர் மாற்றம்) அவர்களின் கருவைத் தம் வயிற்றில் சுமந்து, குழந்தை பெற்று, அவர்களிடம் ஒப்படைத்திருக்கிறார்.

லட்சுமி - மகேஸ்வரன் இருவருக்கும் திருமணமாகிப் பல வருடங்களாகியும் குழந்தைப் பேறு இல்லை. அமெரிக்கா சென்று இரு முறை செயற்கை முறை கருத்தரிப்புக்கு முயற்சி செய்தும் தோல்விதான். இந்தச் சூழ்நிலையில்தான், லட்சுமியின் குறையைத் தீர்க்க, அவருக்காகத் தாமே குழந்தையைப் பத்து மாதம் சுமந்து, பெற்றுத் தர முன் வந்தார் அருணா. லட்சுமியும், அருணாவும் உறவினர்கள். அருணாவுக்கு ஏற்கெனவே ஒரு பெண் குழந்தை உண்டு. இந்த விஷயத்தில், எதிர்ப்பேதும் தெரிவிக்காமல், அருணாவுக்குப் பூரண சம்மதம் தெரிவித்தார், அருணாவின் கணவர்.

டாக்டர். கமலா செல்வராஜ் சொல்கிறார் :


அருணாவை அழைத்துக் கொண்டு, லட்சுமி என்னைச் சந்திக்க வந்தபோது



அடுத்த இதழில்....

●● யானை மேலே ஏறிப் படிக்க வாராங்க....

- கவர் ஸ்டோரி



தமிழ் தெரியுமா, தமிழ்?

ஹிந்துப் பத்திரிகை 'ரிப்போர்ட்டர்ஸ் டயரி'யில் வெளியாகியுள்ள ஒரு சுவாரஸ்யம் :

தமிழ்நாடு அரசு நடத்திய 'பந்த்' சமயத்தில் ஒரு சர்தார்ஜியிடம், நிருபர் சிரமப்பட்டு வார்த்தைகளைத் தேடி ஹிந்தியில் பந்த் பற்றிய அவருடைய கருத்தைக் கேட்டிருக்கிறார். பேட்டி முடிந்த பிறகு அந்த சர்தார்ஜி, 'உங்களுக்குத் தமிழ் தெரியாதா?' என்று நிருபரைக் கேட்டாராம். அதுவும் சுத்தமான தமிழில்! அவர் அடிக்கடி போல்ட், நட் வியாபார விஷயமாக மதுரைக்குப் போய் வருகிறவர். 'தமிழ் தெரியாவிட்டால் எப்படி ஆர்டர் பிடிப்பது என்பதற்காகத் தமிழ் கற்றுக் கொண்டேன்' என்றும் தமிழிலேயே சொன்னாராம்!

- 'வெஸ்'


எனக்கு இனிய ஆச்சரியம். பரிசோதனையின் போது, லட்சுமியின் கரு இணைப்புக் குழாய் பழுதுபட்டிருப்பது தெரிந்தது. லட்சுமியின் கணவருடைய விந்தையும், லட்சுமியின் கருமுட்டையையும் இணைத்து, அருணாவின் கருப்பைக்குள் செலுத்த, வெற்றி கிட்டியது.

தொடர்ந்து மாதாமாதம் செக்-அப் செய்ததில், அருணாவின் வயிற்றில் மகேஸ்வரன் - லட்சுமியின் குழந்தை வளர்ந்தது. எதிர்பார்த்த டெலிவரி தினத்துக்கு இரண்டு மாதம் முன்னதாகவே குழந்தை பிறந்து விட்டது என்றாலும், அது எந்தப் பிரச்னையுமின்றி, டெலிவரி ஆனதில் எனக்கு மகிழ்ச்சி.

லட்சுமியும், அருணாவும் உறவினர்கள் என்பதாலும், அருணா அசாத்திய மான திடமனது உடையவர் என்பதாலும் இவர்கள் விஷயத்தில் எந்தச் சிக்கலும் எழவில்லை. ஆனால் எதிர்காலத்தில், ஒரு பெண்ணுக்காக, அவருக்கு அறிமுகமில்லாத வேறு ஒரு பெண், குழந்தையைப் பெற்றுத் தர முன்வரலாம். அவர் 'கருப்பை வாடகை'யாய் சன்மானமும் கேட்கலாம். அப்போது, சட்டப் பிரச்னைகள் ஏதும் ஏற்படாதிருக்க, எழுத்து மூலமான ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டியது மிக அவசியம்!

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

திண்டுக்கல் கல்கி வாசகர்களே!



செப்டம்பர் 25ம் தேதியிட்ட கல்கி இதழில் உங்கள் நகரத்தின் ப்ளஸ், மைனஸ்களை உள்ளடக்கிய ஒரு சூப்பர் கட்டுரை வெளியிடவுள்ளோம்! அடுத்த ஊர்க்காரர்கள் ஆச்சர்யப்படும்படியான, அல்லது அனுதாபப்படும்படியான உங்கள் ஊரைப் பற்றிய தகவல்களை - யோசனைகளை - **3.9.94** க்குள் எங்களுக்கு எழுதியனுப்புங்கள். நாங்கள் நேரடியாக வந்து பார்த்துக் கட்டுரை எழுதுகிறோம்!

உங்கள் கடித உறைகளின் மேல் **'திண்டுக்கல் நகரம்'** என்று குறிப்பிட தவறாதீர்கள்.


- ஆசிரியர்.

ஸ்ரீகந்தசுவாமி பர்மனென்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1990

பதிவு அலுவலகம் : 60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.

கிளை அலுவலகம் : 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.



பிக்சட் டெபாசிட்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%★

ரொக்கப் பத்திரங்கள்	தொகை	பத்திரங்கள் மதிப்பு	தொகை	பத்திரங்கள் மதிப்பு
36 மாதங்கள்	Rs. 2,925/- Rs. 5,850/-	Rs. 5,000/- Rs. 10,000/-	Rs. 8,775/- Rs. 11,700/-	Rs. 15,000/- Rs. 20,000/-

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15ஆம் ஆண்டுகள்	5ஆம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	10ஆம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	15ஆம் ஆண்டு பெறும் தொகை
Rs. 6,320	Rs. 6,000	Rs. 6,000	Rs. 56,320
Rs. 25,280	Rs. 24,000	Rs. 24,000	Rs. 2,25,280

21% 5 வருடங்கள் ரூ. 50,000/- அதற்கு மேலும்

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வருவாய்
Rs. 7,500	15 Yrs	Rs. 1,25,000
Rs. 9,000	15 Yrs	Rs. 1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வருவாய்
மாதா மாதம் ரூ. 100/-	25 Yrs	Rs. 3,00,000

பென்ஷனர் நலத் திட்டம்

20%

வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்

மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs. 1,000	Rs. 1,184	Rs. 1,430	Rs. 2,000	Rs. 2,535
Rs. 7,500	Rs. 8,880	Rs. 10,725	Rs. 15,000	Rs. 19,010

சேமிப்புத் திட்டம்

வட்டி 10%

காசோலை பெறும் வசதி உண்டு

ரெக்கரிங் டிபாசிட் திட்டம்

டிபாசிட் ரூ.50ன் பெருக்கம்	மாதங்கள் முடிவில் கிடைக்கும் தொகை			
	12 மாதம்	24 மாதம்	36 மாதம்	48 மாதம்
Rs. 50	Rs. 660	Rs. 1,430	Rs. 2,360	Rs. 3,600
Rs. 100	Rs. 1,320	Rs. 2,860	Rs. 4,720	Rs. 7,200

தங்க நகை கடன்

Rs. 3,000 PER 10 GRAM

கடனுக்கு உச்ச வரம்பு இல்லை

வீடுகளின் பேரில் கடன் வழங்கப்படும்

மாத வைப்புக்கான செக்குகள் முன்கூட்டியே வழங்கப்படும்.
தனயோகம் டிபாசிட் திட்டம் 10% குறைந்த அளவு ரூ. 25,000
★ டிபாசிட் காலம் 5 ஆண்டுகள்

சேர்மன் P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
சீனியர் டிரஸ்டி, ஸ்ரீகந்தகோட்டம்,
சென்னை - 3.



பங்குதாரர்களுக்கு மட்டும்
H.O. : Friday Holiday
B.O. : Tuesday Holiday

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி

பாதுகாப்பு பெட்டகம் குறைந்த வாடகைக்கு கிடைக்கும்

SURESH

தகாத உறவுகள் தருகின்ற பாடங்கள்!

திருச்சி நகரை சமீபத்தில் உலுக்கிய சம்பவம்- இரு கல்லூரிப் பேராசிரியர்களின் கொலைகள்.

ஒருவரைக் கொன்றது சொந்த மகனும், மகளும்.

மற்றொன்றில், ஆசிரியரிடம் பயிலும் மாணவியின் கணவர், அவரைக் கொன்று விட்டார்.

தகாத உறவு என்ற சந்தேகமும், அதனால் விளைந்த கோபமுமே இந்த இரு கொலைகளுக்கும் காரணமாய் சொல்லப்படுகிறது.

இதைப் பற்றி, திருச்சி வாழ் நான்கு பெண்மணிகளின் கருத்தைக் கேட்டோம்.

பேபி கண்ணன்:



கூட்டுக் குடித்தனம் சிதைஞ்சு போய் தனிக்குடித்தனமாய் உருமாறியதுதான் இதுக்குக் காரணம்னு சொல்லுவேன்.

இந்தக் காலத்தில் பெண்கள் அதிகமாய் வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டிய நிர்ப்பந்தம்.

தன் மனைவி தனக்கு மட்டும் தான் உரிமைன்ற எண்ணம் ஆண்களுக்கு எப்பவுமே அதிகம்.

வேலைக்குப் போற பெண்கள், தன் கூட அலுவலகத்தில் பணிபுரியும் ஆண்களோடு பழகியே ஆகவேண்டிய சூழ்நிலை.

ஆண், பெண் ஈர்ப்புங்கறது ஆதாம், ஏவாள் காலத்து சித்தம்.

இங்கேதான் பெரியவங்களோட ஆலோசனையும், ஆதரவும் தேவைப்படுது. வீட்டுலே பெரியவங்கன்னு இருந்தாலே சின்னவங்க மனசுல ஒரு கட்டுப்பாடு தானாகவே வந்துடும்.

அடுத்து கடவுள் நம்பிக்கை குறைஞ்சு போனதும் காரணம். போலித்தனமில்லாத உண்மையான தெய்வ நம்பிக்கை உள்ளவங்க பாவ, புண்ணியத்துக்கு நிச்சயம் பயப்படுவாங்க.



வி. செல்வலக்ஷ்மி:

உணர்ச்சிவசப்படுதல் எல்லோரிடமும் உள்ள பலவீனம்தான். ஆனால் மனசைக் கட்டுப் படுத்தி ஆளத்தான் மனுஷனுக்கு ஆறாவது அறிவுன்னு ஒண்ணு இருக்கு. அப்புறம் மிருகத்துக்கும், நமக்கும் என்ன வேறுபாடு?

பேப்பரைத் திறந்தாலே இந்த நியூஸ்னு சொல்றதும் தப்பு. ஜனத்தொகை பெருகியிருக்கு. அதுக்கு ஏத்தபடி இந்த மாதிரி ஒழுக்கக் கேடும் அதிகமாயிருக்கு. நூறு பேருக்கு ரெண்டு பேர் அந்தக் காலத்துல வழிதவறினால், இப்ப ஆயிரம் பேருக்கு இருபது பேராயிருக்கு. அப்போ, வெளிச்சம் போட்டு காட்டலே. இப்ப சாட்டிலைட் துணையோட உலகம் பூரா இதை பரப்புறாங்க. அவ்வளவுதான்.

அவங்க, அவங்களுக்கே நாம் பண்றது சரியா, தவறான்னு நிச்சயம் தெரியும்.

சுயக்கட்டுப்பாடுதான் இதை சரி செய்ய சரியான வழி. அதை மக்கள் மனசுல பதிய வைக்கவும், வளர்க்கவும் படிச்ச பெரியவங்க பாடுபடணும்.

கி.கலைமோஹன்:



இப்பல்லாம், வீட்டிலே வசிக்கறாங்கன்னுதான் சொல்லலாமே தவிர வாழறாங்கன்னு சொல்ல முடியாது. அப்புறம் எங்கேயிருந்து வரும், ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கிட்டு அனுசரிச்சுப் போற சகிப்புத் தன்மையும், அன்பும்?

அடுத்த ஜெனரேஷனைப் பாருங்க, கழுதை மாதிரி பாட மூட்டை சுமக்கறாங்க குழந்தைங்க, பாவம்.

மனித நேயத்தை வளர்க்கவோ,

ரசிக்கவோ கல்விக் கூடங்கள் சொல்லித் தருதா? புத்தியை மட்டும் வளர்த்து என்ன பிரயோஜனம்? புத்தியோட, மனசும் சேர்ந்து பக்குவப் பட்டால்தானே நல்லது? வீட்டுக்குத் திரும்பினாலே எல்லாருமே டிவிக்கு முன்னாடி ஐக்கியமாயிடறாங்க. வீட்டுலே இருக்கறவங்க ஒரு நாளைக்கு பத்து நிமிஷமாவது சேர்ந்து, உட்கார்ந்து, கலந்து, பேசி ஒரு உணர்வுப் பூர்வமான பந்தத்தை உருவாக்கிக் கொண்டால் அதுவே காப்புக் கயிறாய் மாறி மனசை அலைபாய விடாமத் தடுக்கும். சமூக மீறல்களும் இருக்காது.



பி.நிர்மலா:

டி.வி. சினிமாவிலேயெல்லாம் என்ன கொடுக்கறாங்க? இவன் மனைவி அவனை விரும்பறா; அவன், இன்னொருத்தன் மனைவியை விரும்பறான்னு...ப்சு, கண்ணையும் காதையும் பூட்டிக்க வேண்டியிருக்கு.

சிறுவயசுக் காதலைப் பற்றி நிறைய சினிமா. கேட்டால் புரட்சியாம். பதினாறு வயசுப் பொண்ணு ஐம்பது வயசுக் கிழவனை விரும்பறா; நாற்பது வயசுப் பெண்மணி சின்னப் பையனை விரும்பறா.

சமூக உறவுகளில் நஞ்சைப் புகுத்தி, அதை சரிதான்னு எளிமைப் படுத்தற ஆபத்தான விஷயங்கள் டி.வி.யிலும், சினிமாவிலும் வருது. பக்குவமற்ற மனசுள்ள இளசுகள் பார்த்தால் பசக்குன்னு ஒட்டிக்கற மாதிரியா எடுக்கறது!

நல்ல விஷயங்களைப் பத்து தடவை சொன்னால்தான் மனசுல ஏறும். கெட்டதை லேசுபாசா சொன்னாலே புரிஞ்சிடும்.

பத்திரிகைகள் மட்டும் என்னவாம்? சிலதுல வக்ரமான எண்ணத்தைத் தூண்டற கதைகள், அரைகுறை உடையுடன் படங்களின் அணிவகுப்பு. இது போதாதுன்னு, அந்தரங்க நட்பு, கம்பானியன்ஷிப்புன்னு அதிர்ச்சி தரும் விளம்பரங்கள் வேறு.

மீடியா நினைச்சா சமூகத்தை உயர்த்த முடியும். ஆனால் இருக்கறதையும் கெடுக்க வேண்டாம்னு கும்பிட்டுக் கேட்கற நிலை இப்ப!

- பேட்டி: கிருஷ்ணா



இங்கும் ஒரு சட்டசபை!

மனிதனால் முடியாதது எதுவுமில்லை என்று தத்துவம் பேசுகிறவர்களைக் கண்டால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகிற மாதிரி ஒரு கேள்வி கேட்க ஆசைப்பட்டான் ராமசுப்பு. மாமியார் மருமகள் பிரச்னையில் தலையிட்டு, இருவரும் ஏற்றுக் கொள்கிற மாதிரி ஒரு தீர்வைச் சொல்ல முடியுமா என்பதுதான் அந்தக் கேள்வி.

திருமணத்திற்கு ஒப்புக் கொண்ட போது, மனைவி, சினிமா, பீச், ஹோட்டல், தேன் நிலவு போன்ற கிளுகிளுப்பான விஷயங்களை மட்டும் நினைத்துப் பார்த்துத் தலையாட்டி விட்டானே தவிர, மாமியார் - மருமகள் பிரச்னை என்ற ஒன்று எதிர்காலத்தில் பூதாகாரமாகக் கிளம்பி தன்னை உலுக்கப் போகிறது என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை.

தன் தாயும் மனைவியும் ஒத்துப் போகும்படியான விஷயம் உலகத்தில் ஒன்று கூட இல்லை என்று புரிந்த போது அவனுக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

இன்றைக்கு டிபன் இட்லியா தோசையா என்பதிலிருந்து உலகக் கோப்பை கால் பந்து போட்டியில் ஜெயிக்கப் போவது ஜெர்மனியா பிரேஸிலா என்பது வரை சகல விஷயங்களிலும் அப்படி ஒரு கருத்து வேறுபாடு.

வெறும் கருத்து வேறு பாட்டோடு போய்த் தொலைந்தால் கூட ராமசுப்பு இவ்வளவு அதிர்ச்சியடைந்திருக்க மாட்டான். ஒவ்வொரு விஷயத்திலும் அவனை நடுவராக்கி அல்லல் படுத்துவதைத்தான் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

திருமணமான மறுநாளே ஆரம்பித்தது பிரச்னை.

'அம்மா, பல் தேய்ச்சுட்டேன். காப்பி கொடுத்தனுப்பு' - என்று பேப்பரைப் பிரித்தபடியே குரல் கொடுத்த போது, பின்னால் வரவிருக்கும் விபரீதங்களை அறியவில்லை ராமசுப்பு.

'அத்தே.. அவருக்குக் காப்பி வேணுமாம்.'

'காதுலே விழுந்ததுடியம்மா. நான் இன்னும் செவிடு ஆயிடலை. அவசரப்படுத்தினா எப்படி? ஒவ்வொண்ணாத்தானே செய்யணும்?'

'அவர்தான் காப்பி கேட்டார். நான் என்ன எனக்கா கேட்டேன்?'

'யாருக்காயிருந்தா என்ன? இப்ப என்ன, சொல்லிட்டேன்னு இப்படி படபடன்னு பேசறே?'

'நான் பேசறதே அப்படித்தான். இனிமே வேணும்னா வாயை மூடிக்கிறேன்.'

'உன்னை யாரு பேச வேண்டாம்னு சொன்னா? காலங்கார்த்தாலே உன் கூட மல்லுக்கு நிக்கறதுக்கு எனக்கு நேரமில்லை.'

இப்படி ஆரம்பித்து, வாக்குவாதம் வளர்ந்து கொண்டே போயிற்றே தவிர, ராமசுப்புவுக்குக் கடைசி வரைக்கும் காப்பி வரவில்லை.

இருவரும் ராமசுப்புவிடம் நியாயம் கேட்டு ஆதரவை எதிர்பார்த்த போது, அவன் யாருக்கு ஆதரவாகவும் வோட்டளிக்காமல் சமாளித்தான்.

'இதோ பார் உமா, எங்கம்மா வயசானவங்க. நீதான் அவங்களை அட்ஜஸ்ட் பண்ணிகிட்டுப் போகணும்' என்று மனைவியிடமும் 'ஏம்மா... அவ சின்னப் பொண்ணு. அவளுக்கு என்ன தெரியும்? நீதான் அட்ஜஸ்ட் பண்ணிக் கிட்டுப் போகணும்' என்று அம்மாவிடமும் சொன்னானே தவிர யாரும் 'அட்ஜஸ்ட்' செய்து கொள்வதாக இல்லை.

மறு நாளும் ராமசுப்புவுக்குக் காப்பி வரவில்லை.

'நேத்து என்னவோ அப்படி குதிச்சாளே புருஷனுக்கு காப்பி லேட்டாயிடுத்துன்னு. இன்னைக்கு என்ன கேடு? வந்து எடுத்துட்டுப் போக வேண்டியதுதானே' என்று மாமியாரும், 'என் பிள்ளைக்கு காப்பி கொடுக்க எனக்குத் தெரியும்னு நீட்டி முழக்கினாங்களே உங்க அம்மா. இன்னிக்கு எப்பத்தான் கொண்டு வந்து கொடுக்கிறாங்க பார்க்கலாம்' என்று மருமகளும் பரஸ்பரம் பொருமிக் கொண்டு சும்மா இருந்து விட்டார்கள்.

இதன் விளைவாக, வெகு விரைவில் காப்பி சாப்பிடுவது என்கிற கொடிய பழக்கத்

திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டான் ராமசுப்பு.

உப்பு சப்பில்லாத விஷயத்திற்குக் கூட காஷ்மீர் பிரச்னை அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து மோதிக் கொள்ள அவர்களால் எப்படித்தான் முடிகிறதோ என்று வியப்பாக இருந்தது அவனுக்கு.

'கத்திரிக்காய் கிலோ என்ன விலை' என்ற மகா சாதாரண விஷயம் பிரம்மாண்டமாகப் போய்விட்டது ஒருநாள்.

'கத்திரிக்காய் கிலோ எட்டு ரூபாய்க்கு வித்தா என்னதான் சமையல் பண்றது' என்று அலுத்துக் கொண்டாள் ராமசுப்புவின் தாய். சமைக்குத் தவறான தகவல் கொடுத்ததைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை உமாவால்.

'இல்லையே! கத்திரிக்காய் கிலோ ஆறு ரூபாய்க்கு விக்கறானே. எட்டு ரூபாய் எப்படி கேப்பான்?'.

'நான் என்ன பொய்யா சொல்றேன்? மார்க்கெட்டுக்குப் போய்ப் பார்த்தாத்தானே காய்கறி விலை தெரியும்?'


'நீங்க பொய் சொல்றீங்கன்னு நான் சொன்னேனா? ஊரெல்லாம் கிலோ ஆறு ரூபாய்க்குக் கிடைக்கிறது. உங்களுக்கு மட்டும் எவனோ எட்டு ரூபாய்க்கு வித்திருக்கான். அவர் சம்பாதிக்கிற பணம் தண்டமாகப் போகணும்னு இருந்தா அதை மாத்தவா முடியும்?'

'நான் என்ன சொல்லிட்டேன்னு உனக்கு இப்படி வாய் கிழியறது? புருஷன் குடுக்கிற தைரியத்திலே வாய்க்கு வந்தபடி பேசாதே.'

'அவர் உங்க பக்கம்தானே பரிஞ்சிகிட்டுப் பேசறார்? பொண்டாட்டிங்கற விசுவாசமே அவருக்குத் துளிக்கூட இல்லை. அதான் தொட்டதுக்கெல்லாம் என்னைக் குத்தம் சொல்றீங்க.'

சாப்பிட்டுக் கொண்டிருந்த ராமசுப்புவுக்கு சாப்பாடு இறங்கவில்லை. இரண்டு வல்லரசுகளுக்கிடையே மாட்டிக் கொண்ட வளராத நாட்டைப் போல விழித்தான்.

சத்யா



'ஏண்டா? வாயை மூடிக்கிட்டிருந்தா என்னடா அர்த்தம்? கத்திரிக்காய் கிலோ எட்டு ரூபாய்தானேடா விக்கிறது. பொண்டாட்டிக்குப் பயப்படாம நிஜத்தைச் சொல்லு.'

'ஏங்க நேத்துக்கூட ஆறு ரூபாய்தானே சொன்னான்? அம்மாவுக்கு ஜால்ரா போடாம உண்மையைச் சொல்லுங்க.'

இருவரும் சேர்ந்து ராமசுப்புவை உலுக்கினார்கள். நடுநிலையாக இருக்கட்டுமே என்பதற்காக 'கிலோ ஏழு ரூபாய்ன்னு நினைக்கிறேன்' என்று கூறி இருவரது விரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டான்.


ஆபீஸிலும் ராமசுப்புவை வீட்டு விவகாரங்கள் வாட்ட, வேலையில் கவனக்குறைவு ஏற்பட்டு மேலதிகாரிகளின் ஏச்சுக்கு ஆளானான்.

ஒரு நாள், விவகாரம் முற்றி விட்டது. 'என்னை இந்த வீட்டிலே மருமகளா நினைக்க வேண்டாம். மனுஷியாவாவது நினைக்கக் கூடாதா?' என்று உமா தலைவிரிகோலமாக நீதி கேட்டு நெடிய தகராறு செய்தாள்.

'என்னை அவ மாமியாராவா நினைக்கிறா? வேலைக்காரியாத்தாண்டா நினைக்கிறா' - என்று அவன் தாயார் மறியல் போராட்டம் நடத்த வீடே ஸ்தம்பித்தது.

ஆயினும் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று அரசியல் கட்சிகள் அடிக்கடி நடத்தும் பந்த், மறியல் போராட்டங்களின் மூலம் எந்தவொரு நிலையையும் மூச்சுவிடாமல் சகித்துக் கொள்கிற ஒரு பரிபக்குவ நிலையை ஏற்கெனவே ராமசுப்பு பெற்றிருந்த காரணத்தால், இப்போது எந்த விதமான பாதிப்புமில்லாமல் மாமியார்-மருமகள் சண்டையை ரசிக்கக் கற்றுக் கொண்டு விட்டான்.

அறுவை சிகிச்சை இனி தேவையில்லை!



மயக்க மருந்து கொடுத்து அறுவை சிகிச்சை செய்யும் பழைய முறை, பல நாட்களாக மருத்துவ மனையில் தங்கி ஓய்வெடுத்தல், இவையனைத்திற்கும் ஓர் முற்றுப்புள்ளி வைக்கும் நேரம் வந்து விட்டது. சிறுநீரகத்திலும், சிறுநீர்தாரை மற்றும் சிறுநீர்ப்பையிலும் காணப்படும் கற்களை உடலில் எந்தவிதமான கீறலோ அல்லது துளைகளோ இல்லாமல் அதிர்வலைகள் மூலம் கற்களை சிறு துகள்களாக்கி விடலாம்.

இந்த சிகிச்சையை அண்ணா நகரில் உள்ள தமிழ்நாடு சிறுநீரக ஆராய்ச்சி மையத்தில் சிறந்த சிறுநீரியல் வல்லுநர்களால் தொடங்கப்பட்டுள்ள "லித்தோடிரிப்ஸி" சென்ட்டர் எனும் அதிர்வலை மையம் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் முதல் சிறப்பாக தொடங்கப்பட்டு இதுவரை 600க்கும் மேற்பட்ட மக்களுக்கு சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்திருக்கிறது. இதன் செலவோ மிகக் குறைவு. சிகிச்சை முடிந்த மறுநாளே தங்கள் வேலைக்கு உடனே திரும்ப முடிகின்றது.

நீரிழிவு உள்ளவர்கள், இரத்தக் கொதிப்பு மற்றும் இருதய நோய் உள்ளவர்கள் ஆகிய அனைவருக்குமே இம்முறையினால் சிகிச்சை அளிக்கலாம். இவற்றால் அவதியுறும் மக்களுக்கு இந்த அதிர்வலை சிகிச்சை முறை ஒரு வரப்பிரசாதமாகக் கருதப்படுகிறது. தமிழ்நாடு சிறுநீரியல் ஆராய்ச்சி மையம் மிகப் புதுமையான கருவிகளால் திறமையான சிறுநீரியல் வல்லுநர்களின் உதவியுடன் அதிர்வலை சிகிச்சை அளிக்கின்றது.

For further details contact :

Tamil Nadu Urological Research Centre

NO. 50, "D" BLOCK, 3RD STREET, ANNA NAGAR EAST,
MADRAS – 600 102. PHONE : 61 97 69





நாட்டுக்காக

மலையாளத் திரையர்களின் மூளை மொத்தமாகவும் சில்லறையாகவும் எங்காவது கிடைத்தால், வாங்கி வந்து கோடம்பாக்கத்தில் கடை வைக்கலாம். ஒரு அசட்டுத்தனமில்லாமல், அபத்தங்கள் இல்லாமல், வழிசல் இல்லாமல் எப்படித்தான் படம் எடுக்கிறார்களோ!

நுணுக்கமாக ஒரு பிரச்னை - ஒரே பிரச்னை - இந்திய அரசின் கறுப்புப் பூனைப் படையினரின் அன்றாட அல்லாடல்கள் - என்று எடுத்துக்கொண்டு, லகான் கட்டின குதிரை மாதிரி அங்கே இங்கே அலைபாயாமல், ஷூ மேக்கர் லெவி ஸ்பீடில் ஒரு திரைக்கதை அமைத்திருப்பதற்கு முதல் ஸலாம். இறுகின முகத்துடன், மெய்வருத்தம் பாரார் பாடலின் கடைசி ஸென்டன்ஸுக்கு இலக்கணமாக ஒரு இமாலய கம்பீரம் காண்பிக்கும் சுரேஷ் கோபிக்கு இரண்டாவது ஸலாம். (இவர் மட்டும் தமிழுக்கு வந்தால் கமல் - ரஜினிக்கு இடையே ஒரு திரிசங்கு சாம்ராஜ்ஜியம் அமைத்து விடக்கூடிய சாத்தியம் தெரிகிறது!)

மூன்றாவது ஸலாம், கேமராக்காரருக்கு. வெகு வித்தியாசமான ஷாட் கம்போஸிஷன்கள் - பாமரனுக்கும் அந்த வித்தியாசம் புரியும் என்பது விசேஷம்.

ஒரு தீவிரவாதி அகப்பட்டுக் கொள்ள, தீர்ப்பு எழுதப்போகும் ஜட்ஜுக்கு வரும் மிரட்டல்களில் ஆரம்பிக்கிற கதை, சூடுபிடிப்பது, Black Cat சுரேஷ்கோபி, அவருக்குப் பாதுகாப்புக்கு வருகிற இடத்தில்.

பாதுகாப்பில் வருகிற சிக்கல்கள், பாதுகாவலர்களால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் அனுபவிக்கும் சின்னச்சின்ன நெருக்கடிகள், அதன் அவசியத்தை உணராத அறியாமை, அதனால் நேரும் சங்கடங்கள் என்பதாக சின்னச் சின்ன ஷாட்களில் உக்கிரம் மிக்க 'ஹைகூ' வீரியம்.

ஒரு டூயட் இல்லாமல், ஹீரோயினோடு உரசல், வழிசல் இல்லாமல் - சொல்லியே ஆக வேண்டும் - சென்ஸாருக்கு வேலையே வைக்காமல்... கடவுளே, யாராவது டைரக்டருக்கு திருஷ்டி சுற்றிப் போடச் சொல்லுங்கள்.

டப்பிங் படம்தான். ஆனால் நெருடல் நிச்சயம் இல்லை. (ஓரிரு இடங்களில் 'ரோஜா' பாதிப்பு தெரிவது தவிர.)

தேசப்பற்று என்கிற விஷயம் அரை அவுன்ஸாவது ரத்தத்தில் கலந்திருப்பவர்களுக்கு இந்தப்படம் ரொம்பப் பிடிக்கும்.

— ஆர்.பி.ஆர்.

4 கிராம் புத்திசாலித்தனம்

◆

1 தேக்கரண்டி கற்பனைசக்தி

◆

2 கோப்பை நூதன படைப்பு

◆

1 சிட்டிகை ஆர்வம்

ORKAY

AUR KYA?

CONTEST

மலாய் கோஃப்த்தா, காரட் ஹல்வா, முந்திரி பர்ஃபி, சாஹி பக்கோடா... இன்னும் எத்தனை வகைகள் ஆர்கே குலாப் ஜாமூன் மிக்ஸிலிருந்து தயாரிக்க முடியும்?

பரிசுத்திட்ட விதிகள்:


முந்துங்கள்! போட்டி முடிவு தேதி 15, செப்டெம்பர் 1994
உங்களது நுழைவுத்தாளை ஸ்ரீ ராமகிருஷ்ணா டைரி பிலிட். P.B. No. 492, பெங்களூர்- 560 004க்கு அனுப்புங்கள்

முதல் பரிசு ரூ 5000/-

2 - ஆம் பரிசு ரூ 2500/-

3 - ஆம் பரிசு ரூ 1000/-

மேலும் 50 ஆறுதல் பரிசுகள்



ஆர்கே

இன்ஸ்டன்ட் குலாப் ஜாமூன் மிக்ஸ்

இந்திரா பார்த்தசாரதி **9**

வேதபுரத்து வியாபாரிகள்

'தலைவர் என்றால் நாடு... நாடு என்றால் மக்கள்... மக்கள் என்றால் தலைவர்...'

('வேதபுரத்து அரசியல் வாய்பாடு'. தொகுத்தவர் : பேராசிரியர் நவமணி)

நஞ்சுண்டன் இளைஞன்தான்; ஆனால் வயதை நிர்ணயிப்பதுதான் கஷ்டம். இருபத்தைந்தும் சொல்லலாம், முப்பத்தைந்தும் சொல்லாம். ஆனால் முகத்தைப் பார்த்து அல்ல. முகம், குழந்தையினுடையது. ஆயினும், சலனமற்ற கண்கள். முகம் முதிர்ச்சி அடைய மறுத்து விட்டது போல் தோன்றியது.

அபூர்வா அவனையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் அவன் அலுவலகத்தில் அவனெதிரே உட்கார்ந்திருந்தாள்.

"என்ன அப்படிப் பார்க்கறீங்க?" என்றான் நஞ்சுண்டன்.

"உங்க முகத்துக்கும் உடம்புக்கும் சம்பந்தமே இல்லே."

"புரியலே..."

"உங்க முகத்தை ஒரு பால் உணவு விளம்பரத்துக்குச் சுலபமா அனுப்பலாம்."

"உடம்பை?"

"பான்ட், சட்டை விளம்பரம். 'பார்ட்டியா, காஷுவலா? என்ன வேணும் உங்களுக்கு?"

"முகம் குழந்தையாகவே வளராமே இருக்குதுங்கிறீங்க, அப்பொ இது தலையைப் பத்திய விமர்சனமாகவும் வச்சுக்கலாமா?" என்று புன்னகையுடன் கேட்டான்.

"வேதபுரத்து வாசிகளுடைய தலையைப் பத்தி விமர்சனம் செய்ய எனக்கு அருகதை யில்லே" என்றாள் அபூர்வா.

"உரிமை உண்டு, இப்பொ இந் நாட்டுப் பிரஜையாகி விட்டீங்க இல்லையா?"

"இது உங்க ஐடியா... எதுக்காக ஆகச் சொன்னீங்க? வெளிநாட்டுப் பிரஜையா இருக்கிறதிலே எனக்குப் பல சௌகர்யங்கள் உண்டு... இப்பொ...? சிலை வைக்கணுமா, சின்ன சின்ன தப்புக்கெல்லாம் கப்பம்..."

அவள் சொல்லி முடிப்பதற்குள் ஆள் காட்டி விரலை மூக்கில் வைத்து அவன் எச்சரிக்கை செய்தான்.

அவ்வாறு செய்தவாறே அவன் கேட்டான் : "என்ன சௌகர்யங்கள்?"

"குளிக்கிற போது 'பாத்-ரூம்'லே யாரும் எட்டிப் பார்க்க மாட்டாங்க... என் விருப்பத்துக்கு மாறா வப்பாட்டியா வச்சுக்க மாட்டாங்க..."

"இப்பொவே எங்க நாட்டுப் பிரஜைகளுக்கும் அந்தச் சட்டம் இருக்குதே. வப்பாட்டி வச்சுக்கலாம், ஆனா சம்பந்தப்பட்டவங்க விருப்பத்தோடதான்... சம்பந்தப்பட்டவங்க உள்நாடாருக்கலாம், வெளிநாடாகவுமிருக்கலாம். இந்த விஷயம் பத்தி எங்க நாட்டு தர்மம் ரொம்ப கண்டிப்பு..."

புன்னகை. மர்மப் புன்னகை. பெண்ணாய் இருந்தால் 'மானோ லிஸா'வுடன் ஒப்பிடலாம். ஆணுக்கு என்ன சொல்வது?

அவன் எழுந்து சென்று ஜன்னல் திரைச் சீலைகளைச் சற்று விலக்கினான். வெளிச்சம் எட்டிப் பார்த்தது.

அவன் ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டே பல விநாடிகள் கழித்துச் சொன்னான் : "உங்க 'கேஸ்' ஒரு 'வெரி ஸ்பெஷல் கேஸ்' நீங்க தொடர்ந்து உங்க நாட்டுப் பிரஜையாருக்கிறதிலே எங்க அரசாங்கத்துக்கு ஆட்சேபணையில்லே. ரெண்டு வெவ்



ம்வறு உலகங்களைய சௌகர்யங்களையும் நீங்க அனுபவிக்கலாம், இப்படி ரெண்டு நாட்டுப் பிரஜையாருக்கிறதினாலே..."

"உங்க நாட்டுப் பிரஜைங்கிறதினாலே என்ன சௌகர்யம்?"

''தேர்தலுக்கு நிக்கலாம்'' என்று சொல்லிக் கொண்டே அவன் திரும்பினான்.

அவள் ஆச்சர்யத்துடன் அவனைப் பார்த்துக் கூறினாள் : "நான் தம்புசாமி கிட்டே விளையாட்டுக்காகச் சொன்னேன். 'தேர்தலுக்கு நிக்கலாம்'னு... எனக்குத் தேர்தலும் வேணாம், ஒண்ணும் வேணாம். புத்தகம் எழுத வந்தேன்... எழுதிட்டுப் போறேன்."

"எல்லா வகையிலும் அனுபவம் ஏற்பட வேண்டாமா? நீங்க தேர்தல்லே நிக்கறீங்க. தலைவர் அனுமதி கொடுத்தாச்சு."

"வாட் நான்ஸென்ஸ்...?"

"ப்ளீஸ்.. இது என் அலுவலகம். தலைவர் அனுமதி கொடுத்தப்புறம் 'அப்பீலே' கிடையாது... இது எங்க நாட்டு... மன்னிக்கவும் நம்ம நாட்டு தர்மம்..."

அபூர்வா இதை எதிர்பார்க்கவேயில்லை. தலைவரை அவள் இன்னும் சந்திக்கவேயில்லை; ஆனால் அவள் தேர்தலுக்கு நிற்க அவர் இசைந்து விட்டார்! இது யாருடைய யோசனை?

நஞ்சுண்டன் தலைவருடைய வலக்கரமென்று கவியன் சொன்னது அவள் நினைவுக்கு வந்தது. இது உண்மையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், இவ்வளவு சுலபமாக, அவளுக்குக் கட்சி அங்கத்தினர் நியமனமும் குடி உரிமையும் எப்படிக் கிடைத்திருக்கும்? ஆனால் இவனும் தலைவரை நேரில் சந்தித்ததில்லை. அதே சமயத்தில், இந்த அமைப்பினின்றும் ஒதுங்கியவன் போல், பேசுகிறான். புத்தகம் வெளிப்படையாக எழுதத் தனக்கு உதவுவதாகவும் கூறு

கிறான்!

நஞ்சுண்டனின் திட்டந்தான் என்ன?

"நான் தேர்தல்லே நிக்க மறுத்தால்...?" என்றாள் அபூர்வா.

"முடியாது. நீங்க இப்பொ இந்த நாட்டுப் பிரஜை. சட்டத்தின்படி பார்த்தா, ஒரு வருஷக் கடுங்காவலும், ரெண்டு லட்சம் ஃபைன் கட்டும்படியாகவுமிருக்கும்."

"இது அக்கிரமம், அநீதி..."

"உங்க புத்தகத்திலே இதைப் பத்தி எழுதலாம். இந்த உங்க அபிப்பிராயத்தையும் எழுதலாம்." என்றான் நஞ்சுண்டன் புன்னகையுடன்.

"நான் இப்பொவே என் நாட்டுக்குத் திரும்பிப் போக நெனைச்சேன்னா- முடியுமில்லையா? என் நாட்டுக் குடிஉரிமை இன்னும் எனக்கிருக்கிறதே?"

"எங்கள் நாட்டுச் சட்டத்தின்படி, எங்க நாட்டுக் குடி உரிமை வழங்கப்பட்டால், ஒரு வருஷமாவது இங்கே தொடர்ந்து இருந்தாகணும்... வெளியூர் போகணும்னா அரசாங்க விசேஷ அனுமதி வேணும்..."

மறுபடியும் புன்னகை.

"நான் பின்ன எதுக்காகத் தேர்தல்லே நிக்கணும்? உங்க நாட்டிலே சட்டசபை ஒரு வியாபார ஸ்தலம்னு நினைக்கிறேன். பணம் பண்ண ஒரு தொழிற்சாலை. எனக்குப் பணம் தேவையில்லே..."

"இதுதான் எங்க தலைவர் அருள்பாலிக்கிற ஜனநாயகம். ஜனங்களாலே தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள், ஜனங்களுக்காகப் பணம் சம்பாதிக்கிறாங்க... எங்க தலைவர் எங்க கட்சியிலேருக்கிற எல்லாருக்கும் இப்படிப் பணம் பண்ண வாய்ப்புத் தராரு. எங்க நாட்டிலே... மன்னிக்கவும், நம்ம நாட்டிலே எதிர்க்கட்சி இல்லாமெ இல்லே... சில பேர் எதிர்க்கட்சின்னு சட்டசபைக்குள்ளே வருவாங்க.. எங்க தலைவருடைய தாராள மனசு அவர்களையும் எங்க கட்சிக்குத் தானா இழுக்கும். இதனாலே, எங்க தலைவர் எதிர்க்கட்சியை உடைக்கிறார்னு அர்த்தமில்லே.. எதிர்க்கட்சி தானா உடையுது. எல்லாரும் மனுஷங்கதானே?" என்றான் நஞ்சுண்டன் நாற்காலியில் உட்கார்ந்தவாறு.

"அரசாங்கத்திலே நீங்க பாக்கிற வேலை என்ன? நீங்க அமைச்சரில்லேன்னு தெரியும்.. ஏதோ ஒரு அதிகாரின்னு உங்களைப் போட்டு வச்சருக்காங்க... அல்லது, நீங்களாவே போட்டுட்டீங்களா? தலைவரோட வலது கை நீங்கதாங்கிறாங்க. அதையும் என்னாலே நம்ப முடியுது... ஆனா...."

" 'ஆனா'...? சொல்லுங்க..." என்றான் நஞ்சுண்டன்.

"உங்க உடம்பு தமிழக சட்டசபை மாதிரி இருக்கு!"

''புரியும்படியா சொல்லுங்க, டாக்டர்.''

"எதிர்ப்புச் சக்தியே இல்லைன்னு சொல்ல வந்தேன்!"

- பாலா

"இந்த அமைப்பை நீங்க ஏத்துக்கவுமில்லே. இந்த மாதிரி அபிப்பிராயத்தை என்கிட்டே நீங்க உருவாக்கப் பாக்கறீங்க... உங்களை எனக்குப் புரியலே. நீங்க யாரு?"

நஞ்சுண்டன் சிறிது நேரம் பேசாமலிருந்தான். அவன் சிந்தித்துக் கொண்டிருக்கிறான் என்று அபூர்வாவுக்குத் தோன்றிற்று.

சிறிது நேரம் கழித்துப் புன்னகை செய்தான். "நான் யார்? எங்கள் நாட்டுத் தத்துவப் பாரம்பரியத்தைத் தொடங்கி வைத்ததே இக்கேள்விதான். அலை சமுத்திரத்தைப் பார்த்துக் கேட்கின்றது, 'நான் யார்?' சமுத்திரம் சொல்கின்றது, 'நான்தான் நீ'... அலையாய்ப் பார்த்தால் அலை, சமுத்திரமாய்ப் பார்த்தால் சமுத்திரம்... இது, இப்பொழுது எங்கள் அரசியல் தத்துவம். மக்கள்தாம் எங்கள் தலைவர். எங்கள் தலைவர்தாம் மக்கள்... எங்களுக்கு வேறு தனி இருக்கையில்லை..." என்று அவன் சொல்லிக் கொண்டே இருக்கும் போது, அபூர்வா எழுந்தாள்.

"சரி... நான் வரேன்..." என்றாள் அபூர்வா.

"உட்காருங்க... நீங்க தேர்தல் பிரசாரத்தின் போது, எப்படிப் பேசணுங்கிறதை நான் இப்பொ சொன்னேன்."

அப்பொழுது இன்டர்காம் ஒலித்தது.

"எஸ்... யாரு...? திண்ணப்பனா, வரச் சொல்லு" என்றான் நஞ்சுண்டன்.

"அமைச்சரா?"

"ஆமாம்..."


"அவர் தலைவரைப் பத்தி ஒரு புத்தகம் எழுதியிருக்காரில்லே?"

"ஒண்ணா? ஓராயிரம்... 'ரெக்கார்ட்' திண்ணப்பந்தான்னு நெனைக்கிறேன்..."

"சரி... நான் வரேன்."

"உட்காருங்க... இதுவுமொரு அநுபவங்கிறதை மறந்துடாதீங்க..."

திண்ணப்பன் உள்ளே வந்தார். பெயருக்கேற்றாற்போல், சரீரமும் திண்ணியதாக இருந்தது. 'புல்-ஓர்கரில்' பழகும் உடம்பு என்பதை அவர் மார்பும் தோள்களும் அறிவித்தன. பித்தான் போடாத சட்டை. கறுத்த புதரிடையே, மஞ்சளாய் மின்னிய சங்கிலி. புஜபராக்கிரமத்தைக் காட்டுவதற்கென்றே, அரைக்கைச் சட்டை, கால் கையாக மடிந்திருந்தது.



தின்னப்பன் அபூர்வாவை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு நஞ்சுகண்டனிடம் சொன்னார். "நான் உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயம் பத்திப் பேச வந்தேன்."

"சரி... உட்காருங்க. இந்தப் பெண்ணும் இருப்பாங்க. பேசலாம்."

"அதெப்படி?"

"எனக்கு நேரமில்லே, சிக்கிரம் சொல்லுங்க. இவங்க பேர், அபூர்வா. இவருதான் தின்னப்பன், அமைச்சர்."

"பாத்தா தெரியுது," என்றாள் அபூர்வா.

"அதெப்படி பார்த்தா தெரியும்?"

"அமைச்சர்களுக்கு முகத்திலே ஒரு தனி ஜோதி உண்டு, இங்கே வேதபுரத்திலே... இதெ நான் வேற எங்கேயும் பார்த்ததில்லே..."

தின்னப்பன் அவளை உற்றுநோக்கினார்.

"சரி... நீங்க சொல்லுங்க, தின்னப்பன். என்ன விஷயமா பாக்க வந்தீங்க?"

"இவங்க விஷயமாத்தான். என்ன இவங்களுக்குக் குடிஉரிமை வாங்கிக் கொடுத்துத் தேர்தல்லே நிக்க வைக்கப் போறீங்களாமே, கட்சியிலே வேற சேத்து விட்டுட்டீங்களாம்... எனக்கு ஒண்ணும் புரியலேயே..."

"புரியறதுக்கு இதிலே என்ன இருக்குது? - அதான் எல்லாம் தெளிவா சொல்றீங்களே!" - என்றான் நஞ்சுகண்டன்.

"இதெல்லாம் யாரைக் கேட்டுக்கிட்டு செஞ்சீங்க?"

"உங்களுக்குத் தெரிஞ்சிருக்கணும், யாரைக் கேட்டுக்கிட்டு செஞ்சிருப்பேன்னு... மேலே...?"

தின்னப்பன் சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

"நான் மேலிடத்திலே கேக்கலாமா?"

"கேளுங்க, தாராளமா... இதுக்கு மிகவும் அந்தரங்கமான காரணங்கள் இருக்கு... அதெ வச்சுகிட்டு அவங்க இந்த முடிவு எடுத்துருக்கிறப்போ, அவங்களைக் கேள்வி கேக்கிற மாதிரியிருக்கும், நீங்க கேட்டா... எனக்கு ஒண்ணுமில்லே, தாராளமா கேளுங்க..."

"அப்படியா சொல்றீங்க?"

"நான் ஒண்ணும் சொல்லலே... இவங்க யாருன்னு உங்களுக்குத் தெரியாதில்லே...?"

"அசலூர்க்காரங்களாங்க...."

"இப்போ இல்லே..."

"அது சரி... நம்ம மொழி இவங்களுக்குத் தெரியுமா?"

"நல்லா தெரியும்..." என்றாள் அபூர்வா புன்னகையுடன்.

அமைச்சர் அவளைச் சற்று திடுக்கிட்டு நோக்கினார்.

"எங்கப்பா அம்மால்லாம் இங்கேயிருந்து போனவங்கதான்... நான் திரும்பி வந்திருக்கேன். தலைவர் கூப்பிட்டாரு, வந்துட்டேன்..."

"எ..ன்..ன சொ..ன்..னீ..ங்க? தலைவரு கூப்பிட்டாரா?"

"ஆமாம்..."

"தின்னப்பன்.. இவங்களைப் பத்தி உங்களுக்கு ஒண்ணும் தெரியாது... தெரியறதுக்கும் நியாயமில்லே. மேலிடத்திலிருந்து வர்ற கட்டளையை நாம நிறைவேத்துவோம், அவ்வளவுதானே?"

"ஆமாமாம்... நான் இங்கே வந்து இதெ பத்தி விசாரிச்சது மேலிடத்துக்குத் தெரிய வேணாம்... முத்துவேல் ஏதோ சொன்னான்னு வந்தேன்... முத்து வேலுக்குக் கீழேயிருந்து இதெ பத்தி செய்தி வந்திருக்குது."

"யாரு தம்புசாமியா?" என்றாள் அபூர்வா.

"ஆமாம்... எல்லாம் உங்களுக்குத் தெரிஞ்சிருக்குதே?"

"இப்போ புரியுதா, இவங்க செல்வாக்கு? சரி... நீங்க போங்க... நான் இவங்ககிட்டே கொஞ்சம் பேசணும்..." என்றான் நஞ்சுகண்டன்.

"இதோ பாருங்கம்மா, என்ன உதவி வேணுமானாலும் கேளுங்க, நான் செய்யறேன். என் பேரு தின்னப்பன். சரி, வரேங்க..."

அவர் போன பிறகு நஞ்சுகண்டன் புன்னகை செய்தான்.

"இவர் என்ன அமைச்சர், எந்தத் துறை?"

"படித்துறை! எல்லா அமைச்சர்களுக்கும் பேருக்கு ஒரு துறை... இவரை எந்தத் துறைன்னு கேட்டிருந்தீங்கன்னா, இவருக்கே தெரிஞ்சிருக்காது.. ஆனா எல்லாத் துறைகளுடைய முக்கிய வேலை, தலைவருக்கு எப்படிப் பணம் சம்பாதிச்சுக் கொடுக்கிறதுங்கிறதுதான். தலைவருக்குன்னா என்ன அர்த்தம், நாட்டுக்கு.. நாட்டுக்குன்னா என்ன அர்த்தம், மக்களுக்கு.... மக்களுக்குன்னா என்ன அர்த்தம்...?"

"தலைவருக்கு. தேர்தல் பிரசாரத்துக்கு என்னைத் தயார் பண்றீங்க, அப்படித்தானே...?" என்றாள் அபூர்வா.

நஞ்சுகண்டனின் 'பேடன்ட்' புன்னகை.

(தொடரும்)

தலைக்குமேல் ஒரு கூரை

நாங்கள் வீடு கட்ட ஆரம்பித்த நேரத்தில் கமலா வேலை கேட்டு வந்தது அவள் அதிர்ஷ்டமா எங்கள் அதிர்ஷ்டமா என்று புரியவில்லை.

அசோக்நகரில் ஸைட். நாங்கள் இருந்ததோ அண்ணா நகர் வாடகை வீட்டில். ஐந்து வருஷமாக மனசில் கருவாக உருவாகி கட்டடமாக வளர்ந்த ப்ளான். "நமக்குன்னு ஒரு கூரை வேணாமா? எத்தனை நாள்தான் வாடகை வீட்டில் இருக்கிறது?" என்று ஒரு வழியாக முடிவுக்கு வந்து, பணம் திரட்டி, ப்ளாட் வாங்கிய பின், ஒரு வருடம் ஆறப் போட்டு, அதற்குப் பின் அப்ரூவல் வாங்கி, காண்ட்ராக்டரிடம் கட்டக் கொடுத்தோம். "என்ன இருந்தாலும் காண்ட்ராக்டர் வெளி ஆள். நம்மாலே இருக்கற வேலையை விட்டுத் தினமும் ஸைட்டுக்குப் போக முடியுமா? கமலாவை அங்க ஒரு குடிசை போட்டுக் குடி வைச்சா, வாட்ச்மேன் வேலைக்கும் ஆச்சு; வேலை செஞ்சா ஒரு சித்தாள் கூலியும் அவளுக்குக் கிடைக்கும்" என்று நினைத்து எங்கள் ப்ளாட்டின் ஓர் ஓரத்தில் சிறிய குடிசை போட்டு அவளை இருக்கச் செய்தோம்.

ஏதோ புதுக் குடித்தனம் போகிற மாதிரி கமலாவும் அவள் கணவனும் உற்சாகமாக ஒத்துழைத்தனர். ஒரு பெட்டி துணி, நாலு தட்டு முட்டுச் சாமான்கள், செங்கல் வைத்தால் மட்டும் ஆடாமல் நிற்கும் நாற்காலி, ஒரு உடைந்த ஸ்டூல், சில அலுமினிய பாத்திரங்கள்... இதுதான் அவர்கள் உடைமை. ஏழைகளுக்கு வீடு மாற்றுவது எவ்வளவு ஈஸி என்று நினைத்துக் கொண்டேன்.

கமலாவைக் குடிவைத்ததில் காண்ட்ராக்டருக்குக் கொஞ்சம் மன வருத்தம்தான்... ஏதோ நாங்கள் அவரை நம்பாமல் கமலாவைக் காவல் வைத்ததாக.

பொறுமையாக எடுத்துச் சொன்னேன். "கமலா பாவம். எங்க ஊர்க்காரி. நிலமும் நீச்சமாக வசதியாக இருந்தவள்தான். இவள் அப்பா எங்கள் நிலத்தைக் குத்தகை எடுத்திருந்தார். தலையெழுத்து... புருஷன் சரியில்லே. எந்த நேரமும் குடி. இருந்த பணம், இவள் நகை எல்லாம் போச்சு. இவள் அப்பா போன பிறகு பிறந்த வீட்டு ஆதரவும் இல்லே. அண்ணனும் அண்ணியும் திரும்பிப் பாக்கறதில்லே. ஊர்லியே இருந்து கூலி வேலை செஞ்சு கூழோ கஞ்சியோ குடிக்கலாம். ஆனா போறாத வேளை. கல்யாணம் ஆகி நாலு வருஷம் கழிச்சு பிள்ளை பிறந்தது கமலாவுக்கு... பாவம்... அவனுக்கு ஏதோ ஹார்ட் ட்ரபிள். கிராமத்திலே காமிச்சு இருக்கா. அங்க உள்ள டாக்டர் சொன்னதாலே இங்க மெட்ராஸ்ல பெரியாஸ்பத்திரிலே வைத்தியம் பாக்கறா. வாரத்தில ஒரு நாள் கூட்டிண்டு போகணுமாம். அன்னிக்கு மட்டும் அவளுக்குப் பாதி நாள் லீவ் தந்தா போதுமாம். பாவம். சீக்காளி பிள்ளையோட கஷ்டப்படறா. அவளுக்கு நீங்க செய்யற உதவியா இருக்கட்டும்."

"மனுஷனுக்கு மனுஷன் இது கூட செய்யலேன்னா எப்படி? ஸைட்டிலேயே இருந்துட்டுப் போகட்டும்."

இப்படித்தான் தொடங்கியது கமலாவின் காவல் கதை. எங்கள் பிரதிநிதியாக அவள் இருந்தாள். ஸைட்டிலிருந்து ஒரு பொருள் அந்தண்டை இந்தண்டை போக முடியாது. வாயைத் திறக்கமாட்டாள். ஆனால் கண்டிப்பு அதிகம். அவள் கணவன் மாரியைக் கூட கண்காணிப்பாள். இப்போது அவனும் கொஞ்சம் திருந்தி விட்டான். எடுபிடி வேலை செய்கிறான். மணல் சலிப்பது... சுவருக்குத் தண்ணீர் அடிப்பது... ஏதோ அவன் குடிக்கான காசு. கமலா நாள் முழுக்க உழைத்தாள்.

நடுநடுவில் வாரம் இருமுறை அல்லது மூன்று முறை நாங்களும் போவோம். அப்போது கமலா ஓடி வந்து உபசாரம் செய்வாள். குடிக்கத் தண்ணீர், டீ தந்து உபசரிப்பாள். ஏதோ அவள் வீட்டுக்கு நாங்கள் விருந்தாளியாக வந்த மாதிரி தோன்றும். நாங்கள்

பானுகுமார்

வீட்டை சுற்றிப் பார்த்துக் குற்றம் குறை கண்டுபிடித்து, மாற்றங்களை எடுத்துச் சொல்லும் நேரத்தில்... எங்கள் பையன் வெளியே மணல்மேட்டில் குதித்துக் கொண்டிருப்பான். கூட கமலாவின் பிள்ளை முருகன். எங்கு சென்றாலும் பிள்ளைப் பூச்சியாய் அரிக்கும் அவன் இங்கு மட்டும் எங்கள் கிட்டயே வராமல் முருகனுடன் விளையாடுவான். அதிலும் நாங்கள் எப்போது வந்தாலும் இரண்டு மணியாவது ஸைட்டில் சுற்றிப் பார்ப்போம். ஒவ்வொரு சுவரிலும் எங்கள் கனவுகள் பிரதிபலிக்கும். கற்பனையில் அதைக் கட்டி, பூசி முடித்துக் குடி இருக்கும் நாளை எண்ணிப் பார்த்து, அந்த இனிமையில் ஊறி எழ குறைந்தது இரண்டு மணி நேரம் வேண்டாமா என்ன?

எங்கள் கனவுகளில் கமலாவும் பங்கு கொள்வதுதான் சிரிப்பாக இருக்கும். சிறு வயதில் பல வருடங்கள் எங்கள் வீட்டில் பழகிய சுவாதீனம். உரிமையுடன் பேசுவான்.

"அம்மா, இந்தப் பக்கம் சன்னல் சரியில்லீங்க. காத்தோட்டம் இல்லே. இரண்டடி இப்படி நகர்த்தி, கொஞ்சம் கீழே இறக்கணும்..."

"பின் வராந்தாவிலே கதவுக்குப் பதிலா இரும்பு கேட் போட்டா வெளிச்சமா இருக்கும்."

"மேடைக்கு மேலே சன்னல் வேணாம். எக்கித் திறக்க முடியாது. காத்தடிச்சா அடுப்பு அணைஞ்சுடும்..."

இப்படி ஏதாவது ஐடியாக்கள் தருவான்.

கிராமத்து விசுவாசத்தில் நகரத்து கல்மிஷம் கலக்காத வெகுளித்தனம்.

எப்படியோ எங்கள் வீடு அஸ்திவாரத்தில் தொடங்கி முதல் மாடி வரை சுவர்கள் எழும்பி விட்டன. இடையில் பணத் தட்டுப்பாடு என்று மூன்று மாசம் வேலையை நிறுத்திய போது கூட கமலாவின் காவல்தான்.



இப்போது ஜன்னலும் கதவும் முடிந்து, க்ரில் கூட போட்டாயிற்று. தரை போடுவதும், சுவருக்குக் கலர் அடிப்பது, பாத்ரூம் டைல்ஸ் வேலை எல்லாம் பாக்கி. தரை போட ஆட்கள் வந்த அன்றைக்குதான் முருகனுக்கு உடல்நிலை மோசமாகத் தொடங்கியது. அப்புறம் அடிக்கடி ஜுரம் வந்தது. கமலா ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்குமாக ஓடி ஓடி கவனித்தாள். ஆனால் முன்பு போல உற்சாகமாகச் செய்ய அவளால் முடியவில்லை. குழந்தை உடல்நிலை கவலையை உண்டாக்கி அவள் பலத்தை ஒடுக்கியது.

"அம்மா, மனசுக்கு பயமாயிருக்கு. கறிவேப்பிலை கணக்கா பொறந்தது ஒண்ணே ஒண்ணு. அதுக்கு எதனா ஆயிடுச்சுனா நா உசிரோட இருக்க மாட்டேன்" என்று கமலா அழுத போது எனக்கும் நெஞ்சு வலித்தது.

"டாக்டர் என்ன சொல்றார்?"

"அவர் என்னம்மா பண்ண முடியும். மருந்து தரார்... நா செஞ்ச பாவம். இந்தப் பிள்ளை கஷ்டப்படுது. ஆபரேஷன் எல்லாம் பண்ண எங்களால முடியுமா? ஏதோ மருந்து மாயம்னு எவ்வளவு நாள் தாக்குப்பிடிக்குமோ தெரியல்லே."

மெடிகல் ரிப்போர்ட் பார்த்த எங்கள் குடும்ப டாக்டரும் நம்பிக்கையாகப் பதில் சொல்லவில்லை. கமலாவைப் பார்த்தால் பாவமாக இருந்தது.

"பாவமெல்லாம் பார்த்தா முடியாதுங்க" என்றார் கான்ட்ராக்டர். தொடர்ந்து...

"நானும் உங்ககிட்ட சொல்லணும்னு பாக்கறேன். அந்தப் பையன் உடம்பு சரியில்லீங்க. ரொம்ப நா தாங்காது. அன்னிக்குப் பாருங்க... மூச்சு முட்டி நீலம் பாரிச்சுப் போய்... உடனே பக்கத்து வீட்லேந்து நான்தான் போன் பண்ணி ஆம்புலன்ஸ் வர வழைச்சேன். ஆஸ்பத்திரிலே சேர்த்து ஒரு மாதிரி சரியாச்சு. ஆனா ஒண்ணும் சொல்ல முடியாதுங்க. நாம கட்டறதோ புது வீடு. ஆச்சு இன்னும் இரண்டு மாசத்தில முடிஞ்சுடும். அப்புறம் கிரஹப்பிரவேசம். பூஜை விழான்னு இருக்கும். இப்ப அந்த டயத்திலே ஏதாச்சும் ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிடுச்சுன்னா மனசுக்கு அபசகுனமா படும். நாலு பேரு நாலு விதமா பேசுவாங்க. நமக்கும் வீடு ராசியில்லியோன்னு தோணும்."

"நாமனா ஏதாவது கற்பனை பண்ணிக்கிட்டு வீடு முடியற சமயத்தில அவளை போகச் சொன்னா எப்படி? இரண்டு வருஷம் உழைச்சிருக்கா..." என்று தயங்கினேன்.

"நான் இல்லேங்கலியே... வீடு முடிச்ச உடனே வாங்கித் தர்ற வேட்டி புடைவை துணி, கூட வேணா பணம்... எல்லாம் இப்பலே தந்துட்டா போச்சு. அப்புறம் தப்பா நினைக்க வழி இல்லையே?"

"இருந்தாலும்..."

"நான் சொல்றது என்னன்னா... நல்ல காரியத்திலே தடை வரக் கூடாது. பூனையை மடியிலே கட்டிட்டு சகுனம் பார்க்கறாப்பலே... அந்த பிள்ளையைப் பக்கத்திலே வெச்சுட்டு விழா எடுக்க முடியுமா?"

சரிதான். ஆனா இதை கமலாவிடம் எப்படிச் சொல்வது என்று தயங்கினேன். அவளே வந்து ஊருக்கு போவதாகக் கூறவும் நல்ல சான்ஸ் கிடைத்தது.

"இப்ப திடீர்னு என்ன ஊர்ல?"

"போன வருஷமே திருவிழாக்குப் போகலே. இந்த வருஷமாவது போய் அம்மனுக்குப் பொங்கல் வைக்கணும்னு எங்க வீட்டுக்காரர் சொல்றாரு. ஒரு வாரத்தில ஓடி வந்துடுவேன். நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க."

"இல்லே கமலா. அவசரப்பட்டு திரும்பி வர வேண்டாம். எப்படியும் கொஞ்ச நாள்ல வீடு முடிஞ்சுடும். அப்புறம் இங்கே வேலை இல்ல. அதனால எங்களுக்காகத் திரும்பி வர வேண்டாம்..."

"ஏம்மா நா ஏதாச்சும் தப்பா..."

"சீ சீ அப்படியெல்லாம் இல்லே... இப்பப் பாரு வீடு முடியப் போவுது. வீட்டைச் சுத்தி சிமெண்ட் போடணும். இப்ப உன் குடிசை போட்டிருக்கற இடத்தில ஒரு பாத்ரூம் கட்டணும்... குடிசையை எடுத்துட்டா நீ எங்கே இருப்பே?"

"இல்லம்மா. வீடு முடியற வரைக்கும் ரோட்டோரமா குடிசை போட்டுக்கறேன்."

"அதெல்லாம் முடியாது. அக்கம் பக்கத்திலே எதனா சொல்லுவாங்க. அதான் சொல்றேன். நீ ஊருக்குப் போய் அங்கேயே இருந்துடு..."

"அங்கேயே இருந்தா முருகனுக்கு எப்படிம்மா வைத்தியம் பாக்க முடியும்...?"

இல்லே, வேற இடத்தில குடிசை பாத்துக்க... நா வேணா ஐயாகிட்ட சொல்லி கொஞ்சம் பணம் தரேன்."

"சரிம்மா..." என்று அரை மனதுடன் போனவள் திரும்பி வரவில்லை. ஊரிலேயே இருக்கணும் என்று நச்சரித்துக் கொண்டிருந்த மாரி நிர்ப்பந்தத்தில் அங்கேயே தங்கி விட்டாள் போல.


எங்கள் வீட்டு வேலை முடிந்து கிரஹப்பிரவேசம் முடிந்து விட்டது. கையோடு ஒரு நடை ஊருக்குப் போய் குலதெய்வத்திற்கு அபிஷேகம் செய்து வர வேண்டுமென்று

கிராமத்துக்குப் புறப்பட்டோம். மூன்றே நாள். குலதெய்வ ஆராதனையிலும், சுத்து வட்டாரக் கோவில்களைத் தரிசனம் செய்வதிலும், இருந்த சில கிராமத்து உறவினர்களை விஸிட் செய்ததிலும் பொழுது வேகமாக ஓடி விட்டது. இன்று இரவு மெட்ராஸுக்கு கிளம்ப வேண்டும். விரலிடுக்கில் மண்ணாய் ஒன்று மட்டும் உறுத்திக் கொண்டிருந்தது.

வந்த அன்றே சொல்லி விட்டும் கமலாவோ அவள் கணவனோ வரவில்லை. கோபமோ என்னவோ? தெரியவில்லை. சரி. விடு. வராதவர்களை என்ன பண்ண முடியும்?

இதோ புறப்பட்டாச்சு. இரயில் நிலையத்தில் ஃபர்ஸ்ட் க்ளாஸில் ஏறி உக்காந்தாச்சு. அப்பத்தான் ஓட்டமும் நடையுமாக வந்தாள் கமலா.

"வா கமலா... நீ வரலியேன்னு நினைச்சேன். பூஜைக்கும் கடுதாசு போட்டேன். நீ வரல்லே."



"அந்தக் காலத்துல எல்லாரும் பயந்து பயந்து லஞ்சம் வாங்கினாங்க."
"இப்ப...?"
"பாய்ந்து பாய்ந்து வாங்கறாங்க!"
— சீர்காழி வி. ரேவதி

"எப்படிம்மா வர்றது. அப்ப முருகன் ரொம்ப சிக்கா..."

"இப்ப எப்படி...?"

"இப்ப அவன் இல்லைம்மா. பட்டது போதுமின்னு போய்ச் சேர்ந்துட்டான்... என்னை விட்டுப் போயிட்டான்..." என்று கதறி அழுதாள்.

எனக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை.

முதல் முறையாக வாழ்க்கையில் மிகவும் அவமானமாக உணர்ந்தேன். என்னையே வெறுத்தேன். ஒருவிதத்தில் அந்தப் பிஞ்சின் மரணத்துக்கு நாங்களும் காரணம் என்ற குற்ற உணர்வு. மெட்ராஸில் இருந்து தொடர்ந்து வைத்தியம் பார்த்திருந்தால் ஒரு வேளை இறந்திருக்க மாட்டானோ? சீ. ஏதோ ஒரு சுயநலத்தில் என்ன முடிவு எடுத்தேன். யார்தான் உலகில் இறப்பதில்லை. பிறந்தவர் இறக்க வேண்டும். இந்த சத்தியத்திற்கு அஞ்சினேனே... என்ன மடமை? சாவு எனும் உண்மையை அபசகுனமாக நினைத்து ஓடி ஒளிந்தேனே. இந்தத் தாய் வயிறு என்ன சாபம் இட்டிருக்குமோ... அது மட்டும் நல்ல சகுனமா...?"

"கமலா... என்னாலதான் நீ மெட்ராஸ் விட்டு வந்தாய்... நான்..."

"நீங்க என்னம்மா பண்ண முடியும்? அதோட விதி... முடிஞ்சு போச்சு... அங்க புது வீட்ல போகாம இங்க வந்து போச்சு... நல்ல தாச்சு.. அங்கே இருந்தாலும் சாவு நிச்சயம் தானே..."

இருக்கலாம்... அவன் சாவு நிச்சயம்தான். ஆனால் கடைசிவரை மனித யத்தனம், நம் கையில் இருக்கும் பிரயத்தனம் பண்ணியாச்சு. அதுக்கு மேலே தெய்வசித்தம்... என்று ஆறுதல் கூறிக் கொள்ள முடியாமல் பண்ணி விட்டேனே. அந்தத் தாயின் மனத்தில் அந்த குறை நிரந்தரமாக இருக்குமே...

நான் செய்த துரோகத்தை மனதில் வைத்துக் கொள்ளாமல் அவள் பிள்ளை இறந்த பின்னும் என்னைப் பார்க்க வந்திருக்கிறாள்.

"முருகன் போய் நாளாகல்லே... அதான் வீட்டுக்கு வரல்லே... தப்பா நினைக்காதீங்க..." என்றவாறு ஒரு கூடையை நீட்டினாள். அதில் சின்னஞ்சிறு மாங்கன்று.

"எங்க தோட்டத்து மரம் கல்கண்டா இனிக்கும். முருகனுக்கு மாம்பழம்னா கொள்ளை ஆசை. நம்ம வீடு கட்டறச்சயே நினைச்சேன்.. ஒரு மரம் நடணும்னு! அதுக்குள்ளே இப்படியாச்சு. முடிஞ்சா இந்த கன்றை நம்ம வீட்ல நட்டு வளப்பீங்களா? என் கை பிள்ளை ராசி இல்லையே தவிர செடி கொடி எல்லாம் பச்சுன்னு வளரும் தாயீ. எங்க ஞாபகமா இதை எடுத்துப் போங்க" என்றாள் கமலா.

இரயில் கிளம்பியது. கமலா தூரத்தில் கண்ணீர் மறைத்த புள்ளியாக நின்றாள்.

"மெட்ராஸில் இல்லாத மாங்கன்றை உங்கம்மா மாயவரத்திலிருந்து கொண்டு வரா..." என்ற கணவரின் கிண்டலை ஒதுக்கி, அதை நானே சுமந்தேன். அன்றைக்கே குழி வெட்டி... அந்தக் கன்றை நட்டேன். மண்ணால் மூடும் போது முருகன் முகம் தெரிந்தது. பூவாளியால் தண்ணீர் விடும் போது கமலாவின் கண்ணீர் தெரிந்தது.

முருகா - உனக்கு இடமில்லை என்று துரத்தி விட்டு இன்று உன் வீட்டு மரத்தை வளர்க்கிறேன்... எனக்கு ஏது பாவமன்னிப்பு... என்று மனதுக்குள் அழுதேன்.

மன்னிப்பு உண்டு என்பது போல மாங்கன்று இளம் பச்சையில் துளிர் விட்டிருக்கிறது.

வந்து விட்டது 'ரெடிமேட்' இசை!

●● 'காதலன்' காசெட்டு வெளியீட்டு விழா நடந்த இடத்தில் ரசிகர் கும்பல் தாங்கவில்லை. நக்மா, ஏ.ஆர். ரகுமான் குடும்பத்தினர் கூட்டத்தில் சிக்கிக் கொண்டு, ஆடிட்டோரியத்துக்குள் செல்ல முடியாமல் அவஸ்தைப்பட்டனர். கல்லூரி மாணவிகள் பட்டாளம் ஒன்று, பிரபுதேவாவை அவர் போகுமிடமெல்லாம் துரத்திக் கொண்டிருந்தது. 'ஜென்டில்மேன்' சாதனையையும் முறியடித்து, முதல் நாளே ஐந்து லட்சம் காசெட்டுகள் விற்பனை ஆகியுள்ளது. மொத்தம் ஒன்பது பாடல்கள். 'பேட்டை ராப்' என்ற பாடலில் 'தேனி குஞ்சரம்மா' என்ற கிராமத்துப் பெண்மணி ராப் பாடி அசத்தியிருக்கிறார்.

●● ராமநாதனின் 'ராஜா ராணி' நின்று போனதும், சத்யராஜின் தேதிகளை வீணாக்காமல் 'வீரப் பதக்கம்' படத்தைக் காதோடு காது வைத்தது போல ஆரம்பித்து, மளமள வென்று படப்பிடிப்பும் நடத்திக் கொண்



• 'காதலன்' கேசட் வெளியீட்டு விழா...



• எம்.எஸ்.வி., லேகா ரத்னகுமார்

டிருக்கிறார் மணிவண்ணன். 'வீரப் பதக்கம்' படத்தில் பதவி வெறிபிடித்த போலீஸ் அதிகாரியாக சத்யராஜ் நடிக்கிறார். ராதிகா, ஊர்வசி என இரண்டு கதாநாயகிகள். "குழி பறித்து, குல்லா போட்டு, தில்லுமுல்லு செய்து, கான்ஸ்டபிள், இன்ஸ்பெக்டர், டி.எஸ்.பி., கமிஷனர், டி.ஜி.பி. என்று கிடுகிடுவென உயரும் சத்யராஜ், பிற்பகுதியில் மனம் திருந்தித் தொழிலாளர் நலத் தலைவராக ஆகும் போது, கொல்லப்படுவார். காமெடியும், சென்டிமென்ட்டும் சரிசமமாகக் கலந்த படம் இது!" என்றார் மணிவண்ணன்.

●● சுதந்திரத் திருநாள் அன்று வெளியிடப்பட வேண்டிய படங்களில் பாதிக்குப் பாதி முடிவடையாமல் நிற்கின்றன. காரணம், ஏ.ஆர். ரகுமானின் மெத்தனம். இளையராஜா பாடல்களை உடனடியாகப் போட்டுக் கொடுத்து விடுவார்; ரீ ரிகார்டிங் செய்யத்தான் உடனடியாகத் தேதிகள் தர மாட்டார். க்யூவில் வர வேண்டும். ஆனால் ஏ.ஆர். ரகுமானோ பாடல்களைக் கூட தவணை முறையில் அட்டவணைப்படி போட்டுக் கொடுப்பதால், பலரும் படத்தை முடிக்காமல் கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறார்கள்.

இப்படி இசையமைப்பாளர்களின் ஏகாதிபத்தியத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு நல்ல செய்தி :

'சான்டோன்' என்ற ஜெர்மன் இசை நிறுவனத்துடன் இணைந்து லேகா இசை நூலகம் ஒன்றை ஆரம்பித்திருக்கிறார், லேகா ரத்னகுமார். ஒரு படத்திற்கு பூஜை போட்ட கையோடு, தேவைப்பட்ட பாடல்களை இவர்களிடமிருந்து வாங்கிப் போகலாம். படம் எடுக்கப்பட்ட நான்கு மணி நேரத்துக்குள் ரீ ரிகார்டிங்கையே முடித்து விடலாம். பாசம், காதல், தாய்மை, இப்படி நூற்றுக் கணக்கான விஷயங்களை எம்.எஸ்.வி., தேவா, பித்துக்குளி முருகதாஸ் போன்ற பிரபலமானவர்கள் இசையமைத்துத் தர, எஸ்.பி.பி., சித்ரா, சுசீலா போன்றவர்களைப் பாட வைத்து, ரெடி-மிக்ஸ் இசை தரப் போகிறார்கள். டு மினிட்ஸ் நூடுல்ஸ் மாதிரி, இதுவும் இசையுலகில் இடீர் இசை. இசையமைப்பாளர்கள் கதி என்னாகும்?

— ஹர்ஷராஜ்



டெபாசிட் தொகையைத் தடங்கல் இல்லாமல் திருப்பித் தரக்கூடிய

உங்கள் பணத்தை ஒரு நிதி நிறுவனத்தில் டெபாசிட் செய்யும் போது நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? அதன் மூலம் ஒரு நிலையான வருமானத்தைப் பெற வேண்டும்; பொருளாதார மாற்றங்கள் அந்த வருமானத்தைப் பாதிக்கக் கூடாது... என்பதுதானே! அந்த வகையில், நீங்கள் டெபாசிட் செய்ய மிகவும் ஏற்ற நிறுவனம் ஸ்ரீராம்தான். காரணம்—

ஸ்ரீராம் லாரிகளுக்கு நிதியுதவி அளிக்கிறது. லாரிப் போக்குவரத்து ரொக்க அடிப்படையில் நடைபெறும் தொழில். உரிமையாளருக்கு நிமிடந்தோறும் லாரிகள் வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதால், லாரி உரிமையாளரால் தவணைத் தொகையை சிரமமின்றி ஒழுங்காகச் செலுத்திவிட முடிகிறது. அப்படி அவரால் செலுத்த முடியவில்லையென்றால், அந்த லாரியைக் கையகப்படுத்தி விற்பனை செய்து கடனை எளிதில் வசூலித்து விட முடியும்.

வீடுகள் அல்லது நகைகளின் மீது கடனுதவி அளிப்பதைவிட இது எவ்வகையில் உயர்வானது?

கடன் பெறுவோர் திருப்பிச் செலுத்துவதைப் பொறுத்தே இந்நிறுவனங்களின் நிதிவளம் அமைகிறது. வருமானம் தராத சொத்துக்கள் மீதும், வீடுகளின் மீதும் கடன் வழங்கும்போது, அந்தச் சொத்துக்களை உடனடியாக பணமாக்குவது எளிதல்ல. எனவே, நிதிவளம் என்று பார்க்கும்போது எப்போதும் வருமானத்தை ஈட்டித்தரும் லாரிகளுக்குக் கடனுதவி செய்வதே உயர்வானது.

பணத்தின் அருமை தெரிந்தவர்கள் நாங்கள். அதைவிட,

என் நம்பிக்கைக்குரிய நிதி நிறுவனம்...

நிதிவளம் எந்த நிறுவனத்தில் இருக்கிறதோ, அதுவே.

ஸ்ரீராம் — லாரிகளுக்கு நிதியுதவி அளிப்பதில் முன்னணி நிறுவனம்

ஸ்ரீராமின் பின்பலமாக இருப்பவை — ரூ.700 கோடி மதிப்புள்ள ஸ்ரீராம் நிறுவனங்கள். ரூ.170 கோடிக்கும் கூடுதலான டெபாசிட் ஆதாரம். உங்களுக்குச் சேவைபுரிய நாடு முழுவதும் 65 அலுவலகங்கள். முழு ஈடுபாட்டுடன் உங்கள் தேவைகளை நிறைவேற்றும் ஸ்ரீராமின் பண்பாடு.

இன்று 1,50,000 டெபாசிட்தாரர்கள் ஸ்ரீராமைத் தங்கள் சொந்த நம்பிக்கைக்குரிய நிதி நிறுவனமாக எண்ணுகிறார்கள். அது உங்கள் நிறுவனமாகவும் இருக்க வேண்டாமா?

For statutory details refer to our advt. in The Hindu dated 9/7/93

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிடெட்
ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
ஸ்ரீராம் சிடி யூனியன் ஃபைனான்ஸ் லிமிடெட்

இப்போது டெல்கோ, அசோக் லேலண்ட், சிடி யூனியன் வங்கி ஆகிய நிறுவனங்களின் சக்திமிகு பங்கேற்புடன்.


நிர்வாக அலுவலகம்: மூகாம்பிகா காம்ப்ளெக்ஸ், 4 லேடி தேசிகா ரோடு, மயிலாப்பூர், சென்னை 600 004. போன்: 4991363, 4990960,4993968.

டெபாசிட்டுகள் திரட்டும் கேம்பெய்ன் இப்போது

உ ங் க ள் அ க் க றை க ளை யு ம் உ ண ர் ந் த வ ர் க ள்.

குடும்பச் சண்டைகளில் நிகழ்ந்த 8000 கேஸ்களை வைத்துப் பார்த்தால், 40 சதவீதம் கணவன் - மனைவி கொலை கேஸ்கள்: அதாவது கணவன் மனைவியைக் கொல்வது அல்லது மனைவி கணவனைக் கொல்வது. 48 சதவீத கேஸ்களில் கொலையாளியின் குடிவெறி காரணமாம். மேலும், 33 சத வீத கேஸ்களில் கொல்லப் படுவோரும் குடிவெறியில் இருக்கிறார்களாம். எங்கே? அமெரிக்காவில்....





• சிம்ஸனின் ஆதரவாளர்கள்...

விளையாட்டு வீரர், சினிமா நடிகர், டி.வி. விளம்பர நடிகர் என்று பல துறைகளில் பிரபலமாயிருக்கும் ஓ.ஜே. சிம்ஸன் (செல்லப் பெயர் : ஜூஸ்) இப் போது ஜாமீன் மறுக்கப்பட்டு சிறையில் இருக்கிறார். காரணம், சிம்ஸனின் முன்னாள் மனைவி நிக்கோல் சிம்ஸனும், நிக்கோலுக்குத் தெரிந்த இளைஞர் ரானால்டு கோல்டுமேனும் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கழுத்து வெட்டப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டதுதான். கையிலிருக்கும் முக்கிய தடயங்களை வைத்து, சில சாட்சிகளின் உறுதியான வாக்குமூலங்களைக் கேட்டு, ஓ.ஜே. சிம்ஸன் மீது வழக்குப் போட்டுள்ளது அரசு.

கொலைகளும், அவற்றை சூழ்ந்திருக்கும் மர்மங்களும் பத்திரிகைகளிலும், டி.வியிலும் செய்தியாகி, அமெரிக்காவில் என்றுமேயில்லாத பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. ஓ.ஜே. இந்த இரட்டைக் கொலைகளைச் செய்திருக்க முடியாது என்பதைத் திடமாக நம்பும் அவருடைய ரசிகர்கள் தினம் 1500க்கும் குறையாமல் அவருக்கு நம்பிக்கையூட்டும் கடிதங்களை அனுப்புகின்றனர். இதற்காக அவருடைய சிறை விலாசத்தைப் பத்திரிகைகளில் பிரசுரித்திருக்கிறார்கள்!

ஆறு நாட்கள் நடந்த முன் விசாரணையின்

• ஓ. ஜே. சிம்ஸன்



• கைது செய்து அழைத்துச் செல்லப்படுகிறார் ஓ. ஜே. சிம்ஸன்....

அமெரிக்காவை அதிர வைக்கும் இரட்டைக் கொலை வழக்கு!



கொலையுண்ட நிக்கோல் சிம்ஸன்



• கொலையுண்ட ரானால்டு கோல்டுமேன்

சில முக்கிய விவரங்கள் :

● கொலைகள் நடந்தது ஜூன் 12ம் தேதி இரவு. சிம்ஸன் அன்றிரவே லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து சிகாகோ நகருக்கு விமானப் பயணம் செய்தார். மறுநாள் காலை அவருக்குச் செய்தி கிடைத்ததும், லாஸ் ஏஞ்சல்ஸ் திரும்பினார். இதை யொட்டி, சில கேள்விகள் எழுகின்றன :

● கொலைகள் எத்தனை மணிக்கு நடந்தன? சிகாகோ போகுமுன் இரவு 10 மணியிலிருந்து 11 மணி வரை சிம்ஸன் வீட்டில் இருந்ததாகச் சொன்னது உண்மையா? இரட்டைக் கொலையைப் பார்த்த சாட்சி யாராவது உண்டா?

● நிக்கோல் சிம்ஸனுடைய நாய் அழுகுரலில் குரைத்த போது இரவு மணி 10:15 இருக்கும் என்பதையும், அதனுடைய பாதங்களில் ரத்தம் இருந்ததையும் நிக்கோல் சிம்ஸ னுடைய அண்டை வீட்டார்கள் சொன்னார்கள். போய்ப் பார்த்தவர் களுக்கு ரத்த வெள்ளத்தில்

"ஐயோ டாக்டர்! மயக்க மருந்து கொடுக்காமலே ஆபரேஷன் செய்ய ஆரம்பிச்சுட்டீங் களே?"

"கூச்சல் போடாதீங்க! மயக்க மருந்துக்கான பைசாவை வேணா ஆபரேஷன் செலவுல கம்மி பண்ணிக்கறேன்!"

- பாலா



நிக்கோலின் உடல் கிடந்தது தெரிந்தது. சிறிது தள்ளி ரானால்டு கோல்டுமேனின் உடல். அப்போது மணி இரவு 12:10.

● சிகாகோ போவதற்கு விமான நிலையம் வரை போக ஓ.ஜே. சிம்ஸன் ஒரு லிமோசினை (ஆடம்பர கார்) 10:45க்கு வரச் சொல்லியிருந்தார். லிமோசின் டிரைவர் 10:25க்கே சிம்ஸன் மாளிகைக்கு வந்து விட்டு, 10:40க்கு அழைப்பு மணியை அழுத்தினார். ஆனால் எந்த பதிலுமில்லை. சுமார் 11 மணிக்கு சிம்ஸனைப் போலவிருந்த ஒரு கறுப்பு உருவம் சிம்ஸனின் வீட்டில் நுழைந்ததை டிரைவர் பார்த்தார். சில வினாடிகளில் மீண்டும் அழைப்பு மணி அழுத்தப்பட்ட போது இன்டர்காமில் சிம்ஸனின் பதில் குரல் வந்ததாம். சிம்ஸனை 11:15க்கு அழைத்துக் கொண்டு, 11:35க்கு விமான நிலையம் அடைந்த போது, அவர் மிகவும் படபடப்பாக இருந்தார் என்று டிரைவர் வாக்குமூலம்.

● இரவு 10லிருந்து 11 மணி வரை ஓ.ஜே. சிம்ஸன் எங்கேயிருந்தார் என்பதற்கு யாரும் சாட்சியில்லை. ஆனால் அவர் தம்முடைய மாளிகையில் இல்லை என்பதற்குச் சந்தர்ப்பவசமான சாட்சிகள் இரண்டு பேர். ஒன்று லிமோசின் டிரைவர். இரண்டாவது, ஓ.ஜே. வீட்டில் விருந்தினர் பகுதியில் வசித்த சிம்ஸனின் நண்பர் ஒருவர். அவரும் ஓ.ஜே.யும் சாப்பாடு வாங்கி வரப் போய் 9:10லிருந்து 9:45 வரை கூடவே இருந்தனர். வீடு திரும்பியபின், சுமார் ஒரு மணி நேரம் சிம்ஸனை தான் பார்க்கவில்லை என்பது நண்பரின் வாக்குமூலம்! டிரைவர் சொன்ன தகவலும், நண்பர் சொன்னதும் சரியாகப் பொருந்தியதால் அரசின் வாதத்துக்கு உதவியது.

● நிக்கோல் சிம்ஸனின் வீடு ஓ.ஜே.யின் வீட்டிலிருந்து இரண்டு மைல் தொலைவிலிருக்கிறது. இரவு 10 - 11 மணி இடைவெளியில் கொலைகளைச் செய்துவிட்டுக் காரில் தன் மாளிகைக்குத் திரும்ப ஓ.ஜே.க்கு நேரமிருந்திருக்கிறது என்ற அரசின் வாதத்தை கோர்ட்டார் ஒப்புக் கொண்டனர்.

● ஓ.ஜே. சிகாகோவிலிருந்து திரும்பிய அடுத்த சில நாட்களில் அவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்தார்கள். அவருடைய மாளிகையின் சில இடங்களைச் சோதனை போட்ட போலீசுக்குச் சில தடயங்கள் கிடைத்தன: ரத்தக் கறை படிந்த ஒரேயொரு கையுறை, அவருடைய கார் கதவில் ரத்தத் துளி, போன்ற சில முக்கிய தடயங்கள். கொலைகள் நடந்த இடத்திலிருந்து மற்றொரு கையுறையும் கண்டுபிடிக்கப்பட்டது.

● கொல்லப்பட்டவரின் உடல்களைப் பரிசோதனை செய்த டாக்டர், அவர்களின் கழுத்து மற்றும் சில பாகங்கள் கத்தியால் வெட்டப்பட்டதை உறுதியாக்கினார். கத்தி தவிர மற்றொரு ஆயுதமும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் டாக்டர் சொன்னார். ஆனால் கத்தியோ மற்ற எந்த ஆயுதமோ இதுவரை போலீசுக்குக் கிடைக்கவில்லை. மே மாதம் ஓ.ஜே. கடையில் வாங்கிய ஒரு கத்தியைப் பற்றிக் கடைக்காரர்கள் சாட்சி சொன்னார்கள். ஆனால் ஓ.ஜே. வாங்கிய அந்தக் கத்தி எங்கே? இது இன்னும் புதிர்தான்.

சிம்ஸன் கொலை வழக்கு - அமெரிக்கர்களின் கவனத்தை - குடும்பத்தில் தம்பதிகளிடையே நடக்கும் வெறித்தனமான மோதல்களின் மீது திருப்பியுள்ளது.

● குடும்பச் சண்டைகளில் நிகழ்ந்த 8000 கேஸ்களை வைத்துப் பார்த்தால், 40 சதவீதம் கணவன் - மனைவி கொலை கேசுகள் : அதாவது கணவன் மனைவியைக் கொல்வது அல்லது மனைவி கணவனைக் கொல்வது.

● 48 சதவீத கேசுகளில் கொலையாளியின் குடிவெறி காரணமாம். மேலும், 33 சதவீத கேசுகளில் கொல்லப்படுவோரும் குடிவெறியில் இருக்கிறார்களாம்.

- வாஷிங்டன் ஸ்ரீதரன்

படங்கள் நன்றி : நியூஸ்வீக்

நம்பிக்கை, சாதனை, வெற்றி ஆகியவை வாழ்வில் இடம் பெற... வழிகாட்டுகிறது எல்டிசி.



ஃபிக்சட் டெபாசிட் & குமுலேடிவ் டெபாசிட் சேமிப்புக்குப் பாதுகாப்பான வாய்ப்புகள்

வாழ்க்கையில் எத்தனையோ சவால்கள் உங்களை எதிர்நோக்குகின்றன. அவற்றை நீங்கள் சந்திக்கும் அதே நேரத்தில் உங்கள் பணத்தை நிர்வகிக்கும் பொறுப்பை எல்டிசி யிடம் விட்டு விடுங்கள். உங்கள் பணத்தின் வளர்ச்சிக்கும், உங்கள் முன்னேற்றத்துக்கும் உறுதுணையாக விளங்கும் இரண்டு டெபாசிட் திட்டங்களை எல்டிசி உங்களுக்கு அளிக்கிறது.

நீங்கள் வாழ்வில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் எல்டிசி தரும் பாதுகாப்பு உங்களை ஊக்குவிக்கிறது. எனவே, நீங்கள் நம்பிக்கையோடு முன்னேற முடியும்.

எல்டிசி. உங்கள் வெற்றிக்கு உறுதுணை.

உங்கள் வளமைக்கு வழிகாட்டும் ஐந்து வெவ்வேறு டெபாசிட் திட்டங்களை லக்ஷ்மி டிரேட் கிரெடிட்ஸ் லிமிடெட் உங்களுக்கு அளிக்கிறது: ஃபிக்சட் டெபாசிட், குமுலேடிவ் டெபாசிட், ரொக்க சர்ட்டிஃபிகேட், ரெக்கரிங் டெபாசிட், பென்ஷனர் பெனிஃபிட் திட்டம். இவற்றின் மூலம் ஒவ்வொரு டெபாசிட்தாரரும் அடைபவை; சிறப்பான பலன்கள், தனிப்பட்ட சேவைகள்.

1993-94ல் எல்டிசியின் டெபாசிட்டுகள் ஒரே ஆண்டில் 100% வளர்ச்சியைப் பெற்றுள்ளதற்கு இவைதான் காரணம். இந்த வெற்றியினால் ஊக்குவிக்கப்பட்டு எல்டிசி மற்றுமொரு லட்சியத்தை நோக்கி முன்னேறுகிறது: 31 மார்ச் 1995 அன்று அடையத் திட்டமிட்டுள்ள டெபாசிட் இலக்கு ரூ.25 கோடி.

பி.ஜி. சரண்யன்
சேர்மன்

LTC லக்ஷ்மி டிரேட் கிரெடிட்ஸ் லிமிடெட்

கார்ப்பொரேட் அலுவலகம்:
37/1, கதீட்ரல் சாலை,
ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி எதிரில்
சென்னை 600 086,
தொ.பே: 8281826/8281930

கிளைகள்: சென்னை • அம்பத்தூர், போன்: 681860 • அண்ணா நகர், போன்: 6212047 • குரோம்பேட்டை, போன்: 401267 • கே.கே. நகர், போன்: 4833917 • மடிப்பாக்கம், போன்: 2346586 • நங்கநல்லூர், போன்: 2348593 & 2346066 • விருகம்பாக்கம், போன்: 4830846 • மேற்கு மாம்பலம், போன்: 4830150 • திருச்சி, போன்: 25323 • மதுரை, போன்: 30626 • கோயம்புத்தூர், போன்: 43576 • திருநெல்வேலி, போன்: 322073 • காரைக்குடி, போன்: 2023 • வேலூர், போன்: 21902 • பாண்டிச்சேரி, போன்: 31859 • பெங்களூர், போன்: 366433.

எல்டிசி: உங்கள் வாழ்வின் வளமைக்கு பொன்னான பாதை.

10.3.94 தேதியிட்ட ஹிந்து நாளிதழில் வெளியான 23.10.93 தேதியிட்ட சட்டபூர்வமான விளம்பரத்தின் தொடர்ச்சி.

ADWAVE/LTC/4728 TAM A

பாமா ஒன்பதாம் வகுப்பு வரையில் படித்துத் தேறியவள். எளிய ஆங்கிலத்தை நன்கு புரிந்து கொண்டு விடக்கூடியவள். எனவே, அவள் கூடத்துக்கு வெளியே நின்றபடி தாங்கள் பரிமாறிக் கொண்ட பேச்சு முழுவதையும் கேட்டிருந் திருப்பாளோ என்ற ஐயம், ராஜாராமனுக்கு அவளது கேள்வியைச் செவியுற்றதும் ஏற் பட்டது. எனினும் அப்படிச் செய்திருக்க மாட்டாள் என்ற நம்பிக்கையுடன், "கல்கத் தாவில் இப்போதெல்லாம் கொலை, கொள் ளைகள் ரொம்ப ஜாஸ்தியாயிடுத்தாம். ஆனா எப்படிப்பட்ட கொள்ளைக்காரங்களும் பெண்கள் மேல கை வைக்க மாட்டானாம். அவாளுக்குள்ள அப்படி ஒரு கட்டுப்பாடாம். அதான் சொல்லிண்டிருந் தான். ...சாப்பிட வர லாமா?" என்றார்.

...சற்றுப் பொறுத்து பாமா உணவு பரிமாற, நால்வரும் சிரிப்பும் கும் மாளமுமாய்ச் சாப்பிடத் தொடங்கினார்கள்.

மதன்லால் திங்ரா வின் மரண வாக்கு மூலம், வழக்காடுமன் றத்து வாக்குமூலம் ஆகிய வற்றின் மொழியாக்கங் களுடன் தான் ராமசாமி யின் வீட்டுக்குப் போன போது நடந்தவற்றை யெல்லாம் நரேந்திரநாத் பானர்ஜிக்காகவும், தங்கை அமராவதிக்காகவும் முணுமுணுப்பான ஆங் கிலத்தில் - பாமாவுக்குப் புரியாத முறையிலும், அவள் காதுக்கெட்டாத தொலைவில் இருக் கும் போதும் மட்டும் அஞ்சனா விவரித் தாள்.

"அது சரி, உங்கள் அண்ணா இதை எப்படி உங்களுக்கு அனுப்பினார்?"

"கடிதம் யாரிடமிருந்து என்று கண்டு பிடிக்க முடியாதபடி இருக்கும். கடிதத்தில் தனது விலாசத்தை எழுதவே மாட்டான். ஆங்கிலத்தில் டைப் அடித்து அனுப்புவான். கையெழுத்தும் போட மாட்டான். கடிதத் தின் இறுதியில் ஓம் என்று தமிழில் எழுதுவான். கடிதம் வெள்ளைக் காரர்களின் கைகளில் சிக்கினாலும் யாரிடமிருந்து என்பது தெரியாது. உறையின் வெளியே விலாச மும் இருக்காது. கப்பல் மாலுமி ஒருவர் அவனுக்கு நண்பர். அவர் மூலம் எங்களுக்கு வரும். மிக மிக அபாயமான வேலையைத்தான் அந்த மாலுமி எங்களுக் காகச் செய்து வந்தார். கடிதமும் கையுமாக அவர் மாட்டிக் கொண்டால் எல்லாரும் தொலைந்தோம். அந்த மாலுமியும் இனி இங்கு வர வாய்ப்பில்லை, மாற்றப்பட்டு விட்டதால்."

சிரிப்பும் சிந்தனையுமாய்ச் சாப்பிட்டு முடித்தபின், நால்வரும் திரும்பவும் நடுக் கூடத்துக்கு வந்து நாற்காலிகளில் அமர்ந் தார்கள்.

"குதிராம் போஸ் பத்திச் சொன்னான்மா, அஞ்சனா. அவனோட ஃபோட்டோ அவ னைத் தூக்கில போட்டதும் ஆயிரக்கணக் குல கடைகள்ல வித்துதாம். எங்கே, நரேந் திரநாத், மறுபடியும் சொல்லு, கேட்போம்," என்று ராஜாராமன் கேட்டுக் கொண்டார்.

அவருக்குச் சொன்னவற்றையெல்லாம் நரேந்திரநாத் பானர்ஜி மற்றும் ஒருமுறை விவரித்தான். சொல்லிமுடிக்கும் வரை இரண்டு பெண்களும் கண்ணைக் கூடக் கொட்டாமல் அவனைப் பார்த்தபடி இருந் தார்கள். உணர்ச்சிவயப்பட்டு பல்வேறு முக பாவங்கள் காட்டி, அவன் பேசிய தினுசில் மனம் பறிகொடுத்தார்கள். குதிராம் போஸ் பற்றியும் கன்னயாலாலின் இறுதி ஊர்வலத் தில் பிரும்மாண்டமான மக்கள் கூட்டம் கலந்து மரியாதை செய்தது பற்றியும் மிகுந்த உணர்ச்சியுடன் கூறி முடித்து விட்டு, நரேந் திரநாத் பானர்ஜி சில நொடிகள் போல் பேசாதிருந்தான். அவன் கண்கள் சிவந்திருந் தன. இரண்டு பொன்னான இளைஞர்களின் உயிர்கள் கோரமான முறையில் பறிக்கப் பட்டு விட்ட கனமான துயரத்தில் ஆழ்ந்து, நால்வரும் இறுகிய மௌனத்தில் அசை யாமல் உட்கார்ந்திருந்தார்கள்.

சற்றுப் பொறுத்து, "விநாயக் தாமோதர் சாவர்க்கர் வேறு கைது செய்யப்பட்டு விட்டார். உங்களுக்குத் தெரிந்திருக்குமே?" என்றான்.

"தெரியும். இந்த மார்ச் மாதத்தில், இல் லையா?"

"ஆமாம். இந்தியாவில் புரட்சியாளர் களின் நடவடிக்கைகளை லண்டனிலிருந்த படி அவர்தான் வழிநடத்திக் கொண்டிருந் தார். அன்னா க்ளாஸ் எனும் ரஷ்ய மாது

ஜோதிர்லதா கிரிஜா

ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து தந்த 'வெடிகுண்டுகள் செய்யும் முறைகள்' எனும் சிறு ஏட்டின் 20 சைக்ளோஸ்டைல் செய்யப்பட்ட பிரதிகளை சில புரட்சியாளர்க்கு அதனை எடுத்து வந்த பாண்டுரங்க மகாதேவ் பாபட் விநியோகித்தார். இந்தியா முழுவதும் இரகசிய வெடிகுண்டுத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தி முடிக்கப்படும் வரையில் எந்தக் காரணத்தைக் கொண்டும் யாரும் ஒரு குண்டைக் கூட வெடிக்கக் கூடாது என்பது சாவர்க்கரின் கடுமையான உத்தரவாக இருந்தது. ஒரு குண்டு வெடித்தாலும், சந்தேகத்தின் பேரில் வெள்ளையர்கள் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் தேடிப் பார்த்து அரைகுறையாக நிற்கும் தொழிற்சாலைகளையோ, அவற்றை நிர்மாணிப்பதில் ஈடுபட்டுள்ள தேசபக்தர்களையோ கண்டுபிடித்து விடக் கூடும் என்பதால்தான் சாவர்க்கர் தம் சகோதரர் கணேஷ் தாமோதர் சாவர்க்கருக்கு ஒரு துப்பாக்கியை அனுப்பி வைத்தார். எவ்வளவு தந்திரமாக அதை அனுப்பினார் தெரியுமா?"

"எப்படி?"


"ஒரு கனமான புத்தகத்தின் ஆரம்பப் பக்கங்களையும் கீழ்ப் பக்கங்களையும் விட்டு விட்டு, நடுவே உள்ள பக்கங்களை ஒரு துப்பாக்கியின் வடிவத்தில் வெட்டி விட்டு, அந்தப் பள்ளத்தில் அதைக் கச்சிதமாய்ப் பொருத்திப் புத்தகத்தை மூடி விட்டார். ஆனால் இத்துப்பாக்கி அவர் சகோதரர் கையைச் சென்றடையு முன்னரே, அந்தச் சகோதரர் நாசிக்கொலை வழக்கு சம்பந்தமாய்க் கைது செய்யப்பட்டு விட்டார்."

"என்ன துரதிருஷ்டம்" என்றான் அஞ்சனா.

"நாசிக்கில் என்ன நடந்தது?" என்று கேட்டான் அமராவதி.

"நான் அப்புறம் உனக்குச் சொல்லுகிறேன். நரேந்திரநாத்தைத் தொந்தரவு செய்யாதே" என்று ராஜாராமன் இடைமறித்ததை வலுவாக மறுத்து விட்டு, நரேந்திரநாத் பானர்ஜி சொல்லத் தொடங்கினான்.

"அபிநவ் பாரத் சொஸைட்டி எனும் புரட்சியாளர் கழகத்தை உருவாக்கியவர் கணேஷ் தாமோதர் சாவர்க்கர்தான். கணேஷ் பற்றிய



தகவல்களை எப்படியோ அடைந்து விட்ட அரசு அவரைக் கைது செய்து காவலில் வைத்து விட்டது. கணேஷ் குற்றவாளி என்று தீர்ப்பளித்த நாசிக் ஜில்லா மாஜிஸ்திரேட் ஜாக்சனைக் கொன்று விட அபிநவ் பாரத் சொஸைட்டியின் உறுப்பினர்கள் தீர்மானித்தனர். டிசம்பர் 21ஆம் தேதியன்று சென்ற ஆண்டில் ஜாக்சன், அனந்த் லட்சுமண் எனும் பதினெட்டு வயதே ஆன கல்லூரி மாணவனால் சுட்டுக் கொல்லப்பட்டான்.

கனு வித்யா எனும் அவர்கள் இயக்கத்தைச் சேர்ந்த மற்றோர் உறுப்பினன் துரோக நடவடிக்கையில் ஈடுபட்டுப் போலீசுக்குத் தெரிவித்ததால்தான் இந்தச் சதி பற்றிய முன்தகவல் தெரிந்து, கணேஷ்தாமோதர் சாவர்க்கரை அவர்கள் கைது செய்ய நேர்ந்தது. இவனால் முப்பத்தேழு புரட்சியாளர்கள் கைதானார்கள். இவர்களில் மூன்று பேர் தூக்கிலிடப்பட்டார்கள். மற்றவர்கள் பல் வேறு சிறைத் தண்டனைக்கு உட்பட்டார்கள். விநாயக் தாமோதர் சாவர்க்கர் பற்றிய தகவலும் இதனால் தெரியவந்து விட, லண்டனில் அவர் கைது செய்யப்பட்டு இப்போது அங்கு சிறைவைக்கப்பட்டிருக்கிறார். இங்கிலாந்து அரசு அவரை என்ன செய்ய இருக்கிறதோ தெரியாது. நமக்குள்ளே இப்படி ஓரிரு துரோகிகள் இருப்பதால் எத்தகைய நஷ்டம் ஏற்படுகிறது பாருங்கள், சே..."



"உன் படிப்புக்கு உன் அண்ணன் கிட்டே இருந்து மணி ஆர்டர் வருமே... இப்போ ஏன் வருவதில்லை...?"

"எங்க 'மன்னி ஆர்டர்'தான்!"

- சோம. முத்துக்குமார்

"தனிமனிதர்களைக் கொல்லுவது சரி இல்லையோ எனும் சந்தேகம் அவ்வப்போது வந்தாலும், வெள்ளைக்காரர்களுக்கு அவர்களது அராஜகத்தை உணர்த்த வேறு வழி இருப்பதாய்த் தெரியவில்லை. கோகலே சொல்லும் மிதவாதம் இன்னும் பல நூறு ஆண்டுகளுக்கு இந்தியாவை அடிமையாகத்தான் வைத்திருக்கும் என்றே தோன்றுகிறது."

"சந்தேகமில்லாமல்... அந்த வெள்ளைக்கார மாஜிஸ்திரேட் ஜாக்சன், கணேஷ் தாமோதரைக் கைது செய்தது யாருடைய தூண்டுதலாய் என்று தெரியுமா உங்களுக்கு?"

"தெரியாது."

"லண்டனில் இந்திய விவகாரங்களுக்கான அதிகாரியாக இருந்த கர்ஸான் வில்லியின் தூண்டுதலால்தான்."

"ஓகோ. அந்தக் கர்ஸான் வில்லியை மதன்லால் திங்ரா சுட்டுக் கொன்றது அதனால்தானா?"

"ஆமாம். அதனால்தான்."

"மதன்லால் திங்ராவின் கோர்ட்டு வாக்குமூலம், மரண வாக்குமூலம் ஆகியவை உங்களிடம் உள்ளனவா, நரேந்திரநாத்?" என்று கேட்டாள் அஞ்சனா.

"இல்லை. கொடுத்தீர்களென்றால் நானும் அவற்றுக்குப் பிரதிகள் எடுத்துப் பலருக்கும் விநியோகிக்க ஏற்பாடு செய்வேன்..."

அஞ்சனா எழுந்து போய் அலமாரியைத் திறந்து, அதில் வைக்கப்பட்டிருந்த சிறிய பெட்டியிலிருந்து ஒரு கற்றைக் காகிதங்களை எடுத்து வந்து அவனிடம் கொடுத்தாள்.

"கொஞ்சம் வெள்ளைத்தாள்களும் கொடுத்தீர்களாயின், இங்கேயே உட்கார்ந்து பிரதி எடுத்துக் கொண்டு விடுவேன்."

"தருகிறேனே."

...அவன் எழுதிக் கொண்டிருந்த போது, "என்னடி, அமராவதி! என்னமோ ஆபத்துலேருந்து இவர் உன்னைக் காப்பாத்தினார்னு அப்பா சொன்னாரே, என்ன அது? இப்ப சொல்லேன்," என்று கேட்டாள் அஞ்சனா. அமராவதி நடந்ததையெல்லாம் அவளுக்கு விரிவாகச் சொன்னாள்.

"ஜார்ஜ் டவுன் பக்கம் எதுக்குப் போனே நீ?"

"ஸ்டேஷனரி வாங்க வேண்டி இருந்தது. அதுக்காகப் போனேன்."

எழுதிக் கொண்டே, "இந்த ஜார்ஜ்டவுன், கர்ஸான் ரோட் இது மாதிரி வெள்ளைக்காரன் பெயரால் இருக்கிற இடங்களுக்கெல்லாம் நம்ம நாட்டுப் பெரியவர்கள் பெயரை வைக்க வேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்?" என்றான் நரேந்திரநாத் பானர்ஜி முகத்தைத் தீவிரமாக வைத்தபடி.

"மெட்ராஸ்ல ஜார்ஜ் டவுன்கிற பேரு எப்படிப்பா அந்த இடத்துக்கு வந்தது?" என்றாள் அமராவதி.

"இது தெரியாதா? பிரின்ஸ் ஆப் வேல்ஸ் 1906-இலே இந்தியாவுக்கு வந்தான். அவந்தானே அடுத்த இங்கிலாந்து அரசன் ஐந்தாம் ஜார்ஜ்? அதுக்காக ஜார்ஜ் டவுன்னு பேரை வச்சுட்டா."

"சுதந்திரம் வரட்டும்; எல்லாத்தையும் மாற்றிப்பிடுவோம். ரிப்பன் பில்டிங் பேரையும் மாத்திடணும்," என்று அமராவதி கொதிப்புடன் அறிவிக்க, "இதுக்குத்தான் சரித்திரம் தெரியணும்கிறது. லார்ட் ரிப்பனைப் பத்தி மட்டும் அப்படிச் சொல்லவே சொல்லாதே. எப்படிப்பட்ட பெரிய மனுஷன் தெரியுமா அந்தாளு? அடேயப்பா, இது

வரையில இந்தியாவை ஆண்ட வைஸ்ராய் அத்தனை பேரிலயும் அவர்தான் பெஸ்ட். 1880-லேருந்து 1884 வரையில் ஆண்டார். நிர்வாகத் துறையில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். இந்தியர்களுக்குத் தங்களைத் தாங் களே ஆண்டுகொள்ற நிர்வாகத் திறமை வர ணும்கிறதுக்காக லோகல் செல்ப் கவர்ன் மென்ட்ங்கிற ஸ்தல ஸ்தாபன ஆட்சி முறை யை முதன் முதலா அமல்படுத்தினார். தேசம் முழுவதும் லோகல் போர்டுகளும் ஜில்லா போர்டுகளும் ஏற்பட அவர்தான் காரண கர்த்தா. கல்வித் துறையிலயும் எத்தனையோ சீர்திருத்தங்களைச் செய்தார். வெள்ளைக் காரக் குற்றவாளிகளை இந்திய மாஜிஸ்தி ரேட்டுகள் விசாரிக்கக்கூடாதுன்னு இருந்த சட்டத்தை மாத்தி, முதன் முதலா சர் ரோமேஷ் சந்திராங்கிறவரைக் கல்கத்தா நீதி சபையில ஆக்டிங் ஜட்ஜா நியமிச்சார். இந்தி யர்கள் மேல பரிவும் பாசமும் காட்டின தோட, வெள்ளைக்காரங்க இங்க நடந் துண்ட முறையை அடிக்கடி கண்டிக்கவும் செய்த ரிப்பனை லண்டன் பத்திரிகைகளும் இந்தியாவில் வெள்ளைக்காரங்க பத்திரிகை களும் தாக்கு தாக்குனு தாக்கித்து. அதனால இங்கிலாந்து சர்க்கார் மேல தன் கோபத் தையும் வருத்தத்தையும் தெரிவிச்சுட்டு, அவர் தன்னோட பதவியை ராஜினாமாப் பண்ணிட்டார்."

"அட, அவ்வளவு பெரிய மனுஷனா!" என்று அமராவதி வியந்து போனாள்.

"அதனாலதான் தமிழ்நாட்டுல 'ரிப்பன் எங்கள் அப்பன்'னு சொல்லிப் புகழ்ந்து பாராட்டினா..."

இதற்குள் எழுதி முடித்து விட்ட நரேந் திரநாத், "ஒன்று சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?" என்றான்.

"இல்லை, நரேந்திரநாத். எதுவானாலும் சொல்லு."

"உங்கள் தமிழ் தடா புடா என்று ஒரு மாதிரி - அதாவது சண்டை போடுகிற மாதிரி ஒலிக்கிறது."

"உங்கள் வங்காள மொழி ரொம்ப இனிமை என்று எண்ணமோ? உஷ் உஷ் என்று காக்கா, குருவி விரட்டி ஓட்டுவது போன்ற ஓசையுள்ள மொழி" என்று சிரித் தாள் அஞ்சனா.

"வெள்ளைக்காரனை விரட்டப் போவது வங்காளம்தானே? அதனால் எங்கள் மொழி பொருத்தமான மொழிதான்," என்று நரேந் திரநாத் பானர்ஜி வாய் விட்டுச் சிரித்தான்.

அஞ்சனாவின் முகத்திலிருந்த புன்னகை யும் விளையாட்டும் மறைந்து அதில் சட் டென்று ஒரு தீவிரம் குடிகொண்டது.

"மிஸ்டர் நரேந்திரநாத், வங்காளத்தைத் தவிர வேறு ராஜதானிகளில் வெடிகுண்டுத் தொழிற்சாலைகள், புரட்சியாளர்கள் இல் லையா? தெரியாமல்தான் கேட்கிறேன். மகா ராஷ்டிராவில் இருப்பது தெரியும்."

"ஆங்காங்கு ஏற்பட்டுள்ளன. இன்னும் ஏற்பட்டு வருகின்றன, மிஸ் அஞ்சனாதேவி. வங்காளத்தில்தான் குறிப்பிடத்தக்க எண் ணிக்கையிலும் தீவிரத்திலும் புரட்சியா ளர்கள் செயல்பட்டு வருகிறார்கள். பீகார், ஒரிஸ்ஸா, பஞ்சாப், மகாராஷ்டிரம், ஏன், சிறிய அளவில் தானென்றாலும் தமிழ்நாட் டிலும், புரட்சியாளர்கள் தங்கள் கிளைகளை நிறுவியுள்ளார்கள். பிரபுல்லா சக்கியும் குதி ராம் போசும் வெடிகுண்டு வீசிக் கென்னடி என்ற வெள்ளைக்காரனின் மனைவியையும் மகளையும் கொலை செய்ததைப் புகழ்ந்து தம் கேசரி என்ற பத்திரிகையில் எழுதியதால் தான் திலகர் பர்மாச் சிறைக்குக் கடத்தப்



"நம்ம பேட்டை ரௌடி பக்கிரியை சென்சார் போர்டில வேலைக்குக் கூப்பிட்டிருக்காங்க!"
"அட! என்ன வேலை?"
"சினிமா பாட்டுல வர்ற சில வார்த்தைகளுக் கெல்லாம் அர்த்தம் சொல்ல!"

- பாளை. பசும்பொன்

பட்டார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கு மென்று நம்புகிறேன்."

"தெரியும்..." என்றாள் அஞ்சனா.

"உரிய நாளில் அவரை விடுதலை செய் வார்களோ, இல்லாவிட்டால் வேறு ஏதே னும் அடாத பழிசுமத்தித் தண்டனைக் காலத்தை நீட்டித்து விடுவார்களோ, தெரிய வில்லை. அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்" என்று கூறிப் பெருமூச்சு விட் டார் ராஜாராமன்.

அப்போது வாசற்கதவு படபடவென்று தட்டப்பட்டது. தட்டிய தினுசில் ஒரு பதற் றமும் அவசரமும் தெரிந்தன. அஞ்சனா எழுந்தாள். அவளைத் தம் பார்வையாலேயே அமர்த்தி விட்டு, யாரென்று பார்க்கத் தாமே எழுந்து போனார், ராஜாராமன்.

(தொடரும்)

"சார்...!"

"யாரது...?"

"வேலைக்கு ஆள் தேவைன்னு வெளியில விளம்பரம் பார்த்தேன், அதுதான்...!"

"அடடடே... வேலைக்கா... வாங்க வாங்க. உட்காருங்க...!"

"பரவால்ல சார்... இப்படியே நிக்க றேனே...!"

"சும்மா உக்காருங்க சார்... ஆமா நீங்க ஸிங்கரா...? கட்டிங் மாஸ்டரா...? இல்லே, ஓவர்லாக் எம்ப்ராய்டிங், பண்டலிங்...!"

"அதெல்லாம் எதுவுமேயில்லை சார். ப்ளஸ் டூ படிச்சிட்டுக் கோயமுத்தூர்ல ஒர்க் ஷாப் வேலை பாத்துட்டிருந்தேன். இப்பெல்லாம் இஞ்சினியரிங் தொழில் நலிஞ்சு, வர்ற வரும்படி கட்டுபடியாகலை. திருப்பூர் போனா பொழைக்காத புள்ளையும் பொழைக் கும்னாங்க. அதுதான் குடும்பத்தோட....!"

"அட, அப்பிடியா...? ம்.... ஒர்க்ஷாப்புல வேலை செஞ்சவங்களுக்கு ஏத்த மாதிரி இங்கே எந்த வேலையும் இல்லியே....!"

"சார் அப்பிடி சொல்லக் கூடாது... எந்த வேலை கொடுத்தாலும் நா செய்வேன் சார்.

ஆட்கள் தேவை

கண்ணுல பார்த்தா கையில செய்யற திறமை எங்கிட்ட இருக்கு சார்!"

"கண்ணு பார்த்தா கை செய்யுமா... அதெப்படிப்பா...? ஆமா, உன்னோட வயசு என்னாச்சு?"

"முப்பத்தியிரண்டு!"

"முப்பத்தி ரெண்டா... அடேயப்பா... அர சாங்க உத்தியோகத்துல கூட சேத்திக்க மாட் டாங்க. ஏம்ப்பா இந்த வயசுல பழக வேண் டிய வேலையா இது...? படிக்க வேண்டிய காலத்துல பழக வேண்டிய தொழில் தெரி யுமா இது? பேசாம நீ ஒர்க்ஷாப் வேலைக்கே போயிடு!"

"சார் சார்... நீங்க சடால்னு அப்பிடி சொல்லக் கூடாது. பெரிய மனசு பண்ணி, எனக்கொரு வேலையக் கொடுங்க. ஜமாய்த் துக் காட்டறேன்!"

"என்னப்பா உன்னோட காலங்கார்த் தால ஒரே தொல்லையாப் போச்சு. இங்கெல் லாம் ஒரு குழந்தைப் புள்ளை ஒரு நாளக்கி ஆயிரக்கணக்குல பீஸ் மடிச்சடுக்குது. பொம்பளைப் புள்ளைக மலை மலையா ஓவர்லாக் அடிச்சு, கை நிறைய காசு சம் பாதிக்கறாங்க. பத்து வயசுல வேலக்கி வந்த வங்கெல்லாம் பெரிய கட்டிங் மாஸ்டராகி, தினம் இருநூறு முந்நூறுன்னு பாக்கெட்டை ரொப்பிட்டுப் போறாங்க தெரியுமா...? இங்கே ஒரு பொடியன் செய்யற வேலையையும், அவனுக சம்பாதிக்கிற சம்பாதனையையும் பார்த்தேன்னா நீயே மிரண்டடிச்சிட்டு ஓடிப் போவே!"

"அப்படியெல்லாம் போக மாட்டேன், நம்புங்க சார்...!"

"ம்... சரி சரி... உனக்கேத்த மாதிரி சூப்பர் வைசர் வேலை போட்டுத் தர்றேன், செய் வியா?"

"சூப்பர்வைசரா? ஓ... ரொம்ப தாங்க்ஸ் சார்..."


"சூப்பர்வைசர்ன்னா உடனே உங்க ஒர்க் ஷாப் மாதிரி வெள்ளைக் காலர்ல 'இன்' பண்ணிட்டுன்னு கனவு காண ஆரம்பிச் சுடாதே... உன்னோட கரி இழுக்கற ஒர்க் ஷாப் வேலையை விட ஒரு படி கூட...!"

"எப்படி, சார்?"

"இங்கே சூப்பர்வைசர்ன்னா காலம்பற ஆறேழு மணிக்கே கம்பெனிக்கு வந்திட ணும். இராத்திரி ஒம்பது பத்து மணி கூட ஆகும், வீட்டுக்குப் போக. போஸ்ட் ஆபீஸ் போயிட்டு வர்றதுலயிருந்து ஆளுக வேலை செய்யறதைக் கவனிச்சுட்டே, அவங்க கூடமாட வேலைக்கு ஒத்தாசை செய்யணும். அவசர ஆத்திரத்துக்கு நீயே 'பண்டலிங்' போடணும்... பீஸ் மடிச்சடுக்கணும்... தெரி யாததைத் தெரிஞ்ச பசங்ககிட்டே கேட்டுத் தெரிஞ்சுக்கணும்...!"

"சரி சார்...!"

"எல்லாத்துக்கும் மேலா லேபரர்கிட்டே சுயமரியாதைய எதிர்பார்க்கக் கூடாது. அவங்கதான் இங்கே ராஜா மாதிரி. ஏதாவது அவங்க உன்னைக் கிண்டலடிச்சாக் கூட காது கேக்காத மாதிரி கண்டுக்காம இருந்துக் கணும். எக்குத்தப்பா ஏதும் பேசிடக்



கூடாது... பொடியனுக உட்பட...! தட்டிக் கொடுத்து வேலை வாங்கத் தெரியணும். தப்பித் தவறி ஏதாவது பிரச்னைன்னா தப்பு அவங்களோடதா இருந்தாக்கூட உனக்குத் தான் சீட்டுக் கிழிக்க வேண்டி வரும். ஏன்னா இங்கே உம்மாதிரி படிச்சவங்க ஆயிரம் பேர் கிடைப்பாங்க... ஆனா இந்த வேலையைப் படிச்சவங்களை விட்டாப் பிடிக்கறது குதிரைக் கொம்பு!"

"ஆகட்டும் சார்... அப்புறம் சம்பளம்...!"

"ஓ... சம்பளத்தைச் சொல்ல மறந்துட்டனா... முதல்லியே சொல்லியிருக்க வேண்டியது. இங்கே எல்லோருக்கும் வாரக் கூலி. உனக்கு மட்டும் மாதச் சம்பளம் நானூறு ரூபாய்... கொஞ்சம் மனசுக்குத் திருப்திகரமா வேல செஞ்சேன்னா அம்பதோ அறுபதோ கூட்டித் தருவோம்!"

"என்ன சார் சொல்றீங்க...?"

"ஏம்ப்பா... சம்பளத்தைக் கேட்டவுடனே இப்படிப் பதர்றே...? இங்கே இதுதான் ஆபீஸ் உத்தியோகம். படிச்சவங்களுக்கு இவ்வளவுதான் சம்பளம். எந்தக் கம்பனியில வேண்ணா கேட்டுப் பாரு!"

"இல்லே... இங்கே பொடியனுக கூட வாரம் இருநூறு முந்நூறு சம்பாதிக்கறாங்கன்னு...!"

"முந்நூறு என்ன... அவனுக சாமர்த்தியம் போல ஆயிரம் கூட சம்பாதிக்கறாங்க... அதுக்காக ஒனக்கு ரெண்டாயிரம் ரொக்கமா எண்ணிக் கொடுத்திட முடியுமா? அவன் செய்யற வேலையில துளியூண்டு நீ செய்வியா? அவனுக கூட நீ போட்டி போட முடியுமா... வேணுமின்னா உனக்கும் அப்பிடி ஆசையிருந்தா சம்பளமில்லாம வந்து வேலையைப் பழகு. பழகி முடிச்சவுடனே 'பீஸ் ரேட்'ல வேல செய்யி... ஆனா பொடியனுகளெல்லாம் 'கேணச்' சிரிப்பு சிரிக்கறானுகன்னு நீ என்னை சடைஞ்சுக்கக் கூடாது...!"

"... ...!"

"என்னப்பா ரொம்ப அமைதியா விட்டே... ஒர்க்ஷாப்பே தேவலைன்னு படுதா...? அட என்னப்பா நா பாட்டுக்குப் பேசிட்டே இருக்கேன்... நீ பாட்டுக்குப் போயிட்டே இருக்கே...?"

கா.சு.வேலாயுதன்

இந்த ஆலமரத்துக்கும் ஒரு நிதி நிறுவனத்துக்கும் என்ன சம்பந்தம்?



சக்தி பைனான்ஸ் – வங்கிகளுக்கு இணையான பாதுகாப்பு




சின்னஞ் சிறிய விதை. அது முளைவிட்டு வலுவாக வேரூன்றி மாபெரும் ஆலமரமாக வளர்ந்து விடுகிறது. பரந்து விரிந்த கிளைகள். அவற்றிலிருந்து கீழிறங்கி பூமியில் பதியும் விழுதுகள். ஆலமரம் நீண்ட காலத்துக்கு நிலைத்து நின்று அதனடியில் வருகிறவர்களுக்கெல்லாம் நிழல் தருகிறது.

சக்தி பைனான்ஸும் அப்படித்தான். உங்களுடைய சேமிப்புக்கு அதிக பாதுகாப்பு அளிக்கிறது. உங்கள் நலனில் அக்கறை கொண்டு உங்கள் டெபாசிட்டுகளுக்கு நீங்கள் அதிக வருமானம் பெற வகை செய்கிறது. ஸ்திரத்தன்மையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

சக்தி நிறுவனங்களின் எண்ணிக்கை 20. மொத்த ஆண்டு வர்த்தகம் ரூ. 700 கோடி. 1.5 லட்சம் டெபாசிட்தாரர்கள் மிகுந்த நம்பிக்கையோடு வைத்திருக்கும் டெபாசிட் தொகை ரூ. 150 கோடி. நாடு முழுவதும் 37 கிளைகள். 25 சேமிப்புமையங்கள். பரவலாகப் பாதுகாப்புப் பெட்டகங்கள்.

சக்தி பைனான்ஸ் ஒவ்வொரு வாடிக்கையாளரின் தேவையையும் பூர்த்தி செய்வதில் தனிப்பட்ட கவனம் செலுத்துகிறது. அதற்காகவே அவர்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு பல புதுமையான திட்டங்களை முதன் முதலாக அறிமுகப்படுத்திய



சிறப்பையும் பெற்றுள்ளது. அது மட்டுமல்ல. இத்தகைய திட்டங்களைப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து அறிமுகப்படுத்தி விரைவாகச் செயல் படுத்துவதிலும் முன்னோடியாகத் திகழ்கிறது.

உங்கள் சேமிப்புகளை சக்தி பைனான்ஸில் டெபாசிட் செய்யுங்கள். நிம்மதி பெறுங்கள்.

சக்தி
பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் :
475 டாக்டர் நஞ்சப்பா சாலை கோயம்புத்தூர். 641018.
தொலைபேசி எண் :
231471/231472/231473/234174

பானைக்குள் யானை!

அரச சபைக்குத் தாமதமாக வந்த தெனாலிராமன் சொன்ன காரணம் - 'அழும் குழந்தையைச் சமாதானப்படுத்தி விட்டு வர முடியவில்லை..'

"என்ன.. ஒரு குழந்தையை உன்னால் சமாதானப்படுத்த முடியவில்லையா..." - என்று வியந்த அரசருக்கு, தெனாலிராமன் குழந்தையாகவும் அரசர் தந்தையாகவும் நடித்துக் காட்டியது -

குழந்தை : "பானை வேணும்..." (அழுகை)
பானை வரவழைக்கப்பட்டது.
குழந்தை : "யானை வேணும்..." (அழுகை)
யானை வரவழைக்கப்பட்டது.
குழந்தை மீண்டும் அழுதது...
"பானைக்குள் யானையை நுழைய வை..."
அரசர் தன் தோல்வியை ஒப்புக் கொண்டது அந்தக் காலம்!


புதிய கதை : இன்றும் அப்படி ஒரு நிகழ்ச்சி


அமைச்சரவைக் கூட்டத்திற்கு ஒரு அமைச்சர் தாமதமாக வந்தார். காரணம் கேட்கப்பட்டது.

அழுத குழந்தையைச் சமாதானப்படுத்தி விட்டு வர முடியவில்லை என்றார் அமைச்சர்.

அப்படி என்ன குழந்தை கேட்டது -
குழந்தை : "முதல்வர் வரணும்... முதல்வர் வரணும்..." (அழுகை)
எப்படியோ கெஞ்சிக் கூத்தாடி முதல்வரை அழைத்து வந்தார்கள்.
மீண்டும் குழந்தை அழுகை...
"கவர்னர் வரணும்... கவர்னர் வரணும்."
கவர்னரையும் போய் கெஞ்சிக் கூத்தாடி அழைத்து வந்து நிறுத்தினார்கள்.
குழந்தை மீண்டும் அழுகை...
"இன்னும் என்ன செய்யணும்..." என்று கேட்டபோது, குழந்தை அழுகையை நிறுத்தாமல் - "முதல்வரும் கவர்னரும் கைகுலுக்க வேண்டும்..." - என்று அழுதது.
அமைச்சர் சொன்னார் - -
"இதைவிட பானைக்குள் யானையை நுழைத்து விடுவது சுலபம்..!"

— ஏ.வி.கிரி





91. ராவணன் முடிந்தான்

லங்கையில் ஒவ்வொரு வீட்டிலும் பெண்களுடைய அழுகுரல்.

ராவணனுடைய துக்கமும், வெட்கமும் கோபமும் கொந்தளித்துக் கடல் போல் பொங்கிற்று. இனி தானே தன் மூல பலத்துடன் யுத்தம் செய்து இந்தச் சத்துருவை அழிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டு புறப்பட்டான். தன் பலத்தைப் பற்றியும் சௌரியத்தைப் பற்றியும் தான் அடைந்த வரங்களின் சக்தியைப் பற்றியும் அவனுக்குச் சந்தேகமே இருக்கவில்லை. ஆனபடியால் வெகு தைரியமாகவே சென்றான்.

எட்டுக் குதிரைகள் பூட்டி, எல்லாவித ஆயுதங்களும் நிறைந்த திவ்வியமான தன் தேரில் ஏறினான்.

ரதம் பூமி அதிரச் சென்றது. அரக்க வீரர்கள் பலர் தத்தம் தேர்களில் ஏறி அவனைச் சூழ்ந்து சென்றார்கள்.

லங்கையிலிருந்து ராவணன் புறப்பட்டதும் பட்சிகள் கோரமாகக் கூவின; சூரியனுடைய ஒளி மங்கிற்று. இன்னும் பல கெட்ட சகுனங்கள் காணப்பட்டன. ராவணன் இவற்றைக் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் வடக்குக் கோட்டை வாயில் வழியாக யுத்தகளத்துக்குச் சென்றான். விருபாக்ஷன், மகோதரன், மகாபார்ச்சவன் என்ற அரக்க வீரர்கள் ராவணனைத் தொடர்ந்து தங்கள் ரதங்களில் சென்றார்கள்.

ராவணனைத் தொடர்ந்து சென்ற வீரர்கள் சுக்ரீவனாலும் அங்கதனாலும் வீழ்த்தப்பட்டு உயிர் நீத்தார்கள். லக்ஷ்மணன் லங்கேசனை எதிர்த்தான். லக்ஷ்மணனுடைய தாக்குதலை ராக்ஷசராஜன் கொஞ்சமும் லட்சியம் செய்யவில்லை. லக்ஷ்மணனுடைய அம்புகளைத் தன் பாணங்களால் எளிதாக அகற்றிவிட்டு, ராவணன் ராமனை நோக்கி நேராகச் சென்று தாக்கினான். பலமான பாணங்களைச் செலுத்தினான். அவற்றை ராமன் தன் பாணங்களால் தடுத்து விட்டதைக் கண்டு, இன்னும் அதிக சக்தி பொருந்திய பாணங்களைப் பிரயோகம் செய்தான். அதிலும் பயன் அடையவில்லை. யுத்தம் மிகக் கடுமையாக வெகுநேரம் நடந்தது.

ராவணனுடைய நாராசங்கள் ராமனுடைய நெற்றியில் பட்டும் அவை

அவனை ஒன்றும் சேதப்படுத்தவில்லை. ராமனுடைய கோதண்டத்திலிருந்து பாய்ந்த சரங்களும் ராவணனுடைய கவசத்தைப் பிளக்கவில்லை. ராமனுடைய அஸ்திரங்களை ராவணனும் தன் பாணங்களால் தடுத்துத் தள்ளினான்.

இவ்வாறு ராவணனுக்கும் ரகுவீரனுக்கும் அற்புத யுத்தம் நடந்தது. இரு பக்கத்தில் விடப்பட்ட அஸ்திரங்களும் மந்திர சக்தி பொருந்தியவை. அவற்றின் பிரமிக்கத் தக்க செய்கைகள் அதுவரையில் யாரும் கண்டதில்லை. ராவணனுடைய அஸ்திரங்களின் வேலையைக் கண்டு ராமன் மிக வியந்தான். இருவரும் ஒன்றுக்கு மேல் ஒன்றாக மிக சக்திவாய்ந்த அஸ்திரங்களைப் பிரயோகித்தார்கள். அஸ்திரங்களின் ஜ்வாலைகளினால் ஆகாயமெல்லாம் பல சூரியன்கள் சேர்ந்தாற்போல் பிரகாசித்த மாதிரி ஜோதி உண்டாயிற்று.

ராவணனுடைய சகல அங்கங்களையும் பாணங்களால் ராமன் துளைத்தான். ஆயினும் யுத்தம் முடிவு பெறவில்லை.

பிறகு லக்ஷ்மணனும் விபீஷணனும் ராவணனைத் தாக்கினார்கள். ராவணன் தன் தம்பியைக் கொல்ல மிக கோபத்துடன் ஒரு சக்தி ஆயுதத்தை வீசியெறிந்தான். அது விபீஷணன் மீது விழுவதை லக்ஷ்மணன் ஒரு பாணத்தால் தடுத்து விட்டான். அது துண்டிக்கப்பட்டு எரியும் கொள்ளிக் கட்டை போல் பூமியில் விழுந்தது. மறுபடியும் ஒரு சக்தியை ராவணன் விபீஷணன் மேல் வீசினான். அதையும் லக்ஷ்மணன் பாணத்தால் தடுத்து விட்டான். அதன் பேரில் ராவணன், லக்ஷ்மணன் மீது ஒரு சக்தி ஆயுதத்தை 'இதோ செத்தாய்' என்று வீசினான். அந்த சக்தியின் தாக்குதலினால் லக்ஷ்மணன் பூமியில் பிரக்ஞையிழந்து விழுந்தான். ஆனால் உயிர் போகவில்லை.

இதைக் கவனிக்காமல் ராமன் ராவணனை மிக பலமாகத் தாக்கிக் கொண்டேயிருந்தான். அவ்விருவருக்கும் யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போது வானர வீரர்கள் யோசித்து லக்ஷ்மணனுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக ஆஞ்சநேயனை ஒஷதி மலைக்கு அனுப்பினார்கள். அப்படியே ஹனுமான் இரண்டாம் தடவை வடக்கே ஆகாயத்தில் தாவிச் சென்று ஒஷதிகளைத் தேட அவகாசமில்லையென்று மலையையே தூக்கிக் கொண்டு திரும்பி வந்தான். 'ஓஷதிகளைப் பிரயோகம் செய்த பிறகு லக்ஷ்மணன் சொஸ்தப்பட்டு எழுந்து யுத்தத்தில் மறுபடியும் கலந்து கொண்டான்.

இதற்குள் இந்திரனுடைய தேரை மாலதி யுத்த பூமிக்கு ராமனுக்காகக் கொண்டு வந்து சேர்த்தான்.

"தேவராஜன் தங்களுக்காக அனுப்பியிருக்கிறான். தேரில் ஏறுவீராக! தேவர்களுக்குச் சத்துருவான ராவணனை வதம் செய்வீராக!" என்றான் இந்திரனுடைய சாரதி. ராமனும் ரதத்தை வலம் செய்து நமஸ்கரித்து விட்டு ஏறினான்.

பிறகு அற்புத யுத்தம் நடந்தது. ராவணன் மிகவும் அடிபட்டு மனம் தளர்ந்து மயக்கமாக இருந்தான். இதைக் கண்ட அவன் சாரதி மெதுவாகத் தேரை யுத்த பூமியிலிருந்து வெளியே நடத்திக் கொண்டு போனான்.

கொஞ்ச நேரத்தில் ராவணன் மயக்கம் தெளிந்து, "ஏன் தேரை யுத்த பூமியை விட்டுக் கொண்டு வந்தாய்?" என்று சாரதியைக் கோபித்து மறுபடி திரும்பச் சொல்லி ராமனுடைய தேர் முன் நின்றான். மறுபடியும் கோர யுத்தம் ஆரம்பித்தது.

அஸ்திரத்துக்குப் பிரதியஸ்திரம் செலுத்திக் கொண்டு, இருவரும் அதுவரையில் யாரும் கண்டிராத அற்புத முறையில் ரதங்களைச் செலுத்தி, நீண்ட நேரம் யுத்தம் நடத்தினார்கள். சேனையிலிருந்த வீரர்கள் பிரமித்துப் போய் அப்படியே பார்த்துக் கொண்டு நின்றார்கள்.


இதைக் கவனித்து வந்த சாரதி மாலதி, ராமனுக்கு மெதுவாகச் சொன்னான்:

"தலைவர் கட்சிக்காகத்தானே பத்திரிகை தொடங்கியிருக்கார். பின்னே எதற்கு 'நடுநிலை நாளேடு'ன்னு விளம்பரம் பண்றார்?"

"அட... நீங்க ஒண்ணு! அது கட்சியில உள்ள கோஷ்டிகளுக்காகப் பண்ணின விளம்பரம்!"

மணிரத்னம்





"அரக்கனுடைய விநாச காலம் நெருங்கி விட்டது. தாமதித்துக் கொண்டிருப்பது ஏன்? பிரம்மாஸ்திரத்தை மறந்து விட்டீரா?"

இவ்வாறு மாதலி சொன்னதும் ராமன் அந்த திவ்வியாஸ்திரத்தை உரிய மந்திரத்தைச் சொல்லிச் செலுத்தி விட்டான். அது வரையில் எத்தனையோ தடவை அரக்கனுடைய தலைகள் அறுபட்டாலும் புதிய தலைகள் முளைத்துக் கொண்டே வந்தன. பிரம்மாஸ்திரமானது ஜ்வாலை விட்டுக் கொண்டு, ராவணனை நோக்கிச் சென்று, அரக்கனுடைய மார்பைத் துளைத்தது. லங்கேசனுடைய கையிலிருந்த வில் கீழே நழுவி விழுந்தது. அரக்கன் ரதத்திலிருந்து கீழே விழுந்தான். தரையில் உயிரற்றுக் கிடந்தான்.

தேவ துந்துபிகள் முழங்கின; ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்தது. ராகவனையும் அவனுடைய ரதத்தையும் புஷ்பக் குவியல் மறைத்துவிட்டது. லக்ஷ்மணன், விபீஷணன், ஜாம்பவான் முதலிய வீரர்கள் சூழ்ந்துகொண்டு ராமனைப் பூஜித்து ஆனந்தத்தில் மூழ்கினார்கள்.

விபீஷணன் உயிரற்றுக் கிடக்கிற அண்ணனைப் பார்த்து, "ஹா வீரனே, அற்புத செயல்களைச் செய்தவனே, சகல சாஸ்திரங்களையும் படித்து அறிவு பெற்றவனே! வீர விக்ராந்த விக்யாத விநீதநய கோவிதனே! வீழ்த்தப்பட்டு இன்று இரு புஜங்களையும் நீட்டிப் பரப்பி உயிர் துறந்து தரையில் கிடக்கிறாயே!" என்றான். அண்ணன் மரணத்துக்குத் தானே வேலை செய்தான். ஆனபோதிலும், செத்துக் கிடந்த அண்ணனைப் பார்க்கும் போது அந்தச் சந்தர்ப்பத்தில் சமீபத்தில் நடந்ததெல்லாம் மறந்து போய், பழைய வாசனையும் வாழ்க்கை நினைவுகளும் தோன்றி, ரத்த பாசத்தின் பயனாகத் துக்கம் உண்டானது சகஜம்.

"ஆணவத்தால் மதியிழந்து துராலோசனை சொன்னவர்களால் சூழப்பட்டு நான் சொன்னதை நீ புறக்கணித்தாய். என்ன விளையும் என்று நான் சொன்னேனோ அதுவே நடந்து விட்டது! செய்த பெருந் தவறுகளின் பயனை அடைந்து விட்டாய். மதம் சொரியும் யானை வீழ்த்தப்பட்டுக் கிடப்பது போல் மண்ணில் கிடக்கிறாயே, சூரர்களுக்குள் மகாசூரனாயிருந்த ராக்ஷசேந்திரா!" என்றான்.

இவ்வாறு துக்கப்பட்டுக் கொண்டிருந்த விபீஷணனைப் பார்த்த ராமன் மெதுவாகப் பேசலானான்.

"மகா வீரனைப் போல் யுத்தம் செய்தான். தன் சௌரியத்தைப் பூரணமாகக் காட்டி விட்டு உயிர் நீத்தான். இத்தகைய மரணம் மேலான மரணம். இதற்குத் துக்கப்படலாகாது. போரில் புறங்காட்டாமல் இறப்பது வீரர்களுக்கு உண்டாகக்கூடிய முடிவு அல்லவா? வெற்றியோ மரணமோ

எதுவாயினும் சரியே என்றல்லவோ வீரர்கள் யுத்தத்தில் இறங்குகிறார்கள். வீரசுவர்க்கத்தை ராவணன் அடைந்தான் என்பதில் சந்தேகமில்லை. மேல்நடக்க வேண்டிய காரியத்தைத் தம்பியாகிய நீர் நடத்துவீர். உயிர்நீத்த பின் பகை என்பது தீர்ந்து விட்டது. லங்கேசனுக்கு உத்தரகிரியைகளை விரோதியாயிருந்த நானே செய்யலாம். உம்முடைய சகோதரன் எனக்கும் சகோதரனே ஆவான் அல்லவா?" என்று ராமன் சொல்லி விபீஷணனுடைய மனத்திலுண்டான குழப்பங்களை அகற்றி, ராவணனுடைய உத்தம கதிக்காகச் செய்ய வேண்டிய கிரியைகளை நடத்தும்படியாகச் சொன்னான்.

ராவணனுடைய அந்தப்புர ஸ்திரீகள் வந்தார்கள். அவர்களுக்குப் பின் சோகமே வடிவம் எடுத்தது போல் வந்தாள் பட்ட மகிஷியும் ராவணேசுவரனுடைய மிகப் பிரிய மனைவியுமான மண்டோதரி. அழகிகளுக்குள் அழகியான இவள் தரையில் விழுந்து கிடந்த தன் புருஷனைக் கண்டதும் 'ஓ!' என்று கதறி அவனை அணைத்துக் கொண்டு புரண்டாள்.

"உமக்குக் கோபம் வந்தால் இந்திரனும் எதிரில் நிற்க மாட்டானே. தேவரிஷி கந்தர்வர்கள் எவருமே உம்மைக் கண்டு நடுங்கி எட்டுத் திசையிலும் ஓடுவார்களே, ஒரு மானிடனால் தோல்வியடைந்து வீழ்த்தப் பட்டீரே, உமக்குக் கோபம் வரவில்லையா? காட்டில் திரிந்து வந்த ஒரு மானிடன் வீழ்த்தி விட்டானே! இது எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! மூன்று லோகங்களிலும் பரவிய உம்முடைய வீரபராக்கிரமம் இதை எப்படிப் பொறுத்தது? ஐயனே! நான் முந்தியே சொன்னேன் அல்லவா? இந்த ராமன் மானிடன் அல்ல. இந்திரனும் அக்கினி தேவனும் யமனும் கூட உம்மை வெல்ல முடியாது. இவன் ஆதி இடை அந்தம் அற்ற மகா விஷ்ணுவே, மனித உடல் எடுத்து அவதரித்து வந்தவன். இவன் ஜனஸ்தானத்தில் உம்முடைய சகோதரன் கரனைத் தரையில் நின்று வதம் செய்த போதே நான் சொன்னேன் அல்லவா? யாரும் பிரவேசிக்க முடியாத இந்த லங்கைக்குள் ஹனுமான் புகுந்து நகரத்தை நாசம் செய்த போதே எனக்குத் தெரிந்து விட்டது. 'இந்த விரோதத்தைக் கட்டிக் கொள்ளாதீர்' என்று நான் சொன்னதை நீர் கேட்கவில்லை. மகாபதிவிரதையான சீதையின் மேல் ஏன் மோகங் கொண்டீர்? என்னைவிட அவளுடைய வடிவழகு எவ்விதத்தில் மேலானது என்று மதியிழந்தீர்? தனியாக இருந்த அவளை எடுத்து வந்தது மகாபாவம் ஆயிற்றே. அதைச் செய்துவிட்டு இப்போது அதன் பயனை அனுபவித்தீரே! அழிந்து போகவே மதியிழந்தீர்! விபீஷணன் அல்லவோ நல்ல பேறு அடைந்து விட்டான். நீரோ பிரேதமாகக் கிடக்கிறீர். காலன் அல்லவோ சீதையின் வடிவு கொண்டு உம்மை இழுத்துச் சென்று இந்த விநாசத்தில் தள்ளி விட்டான். சீதையும் ராமனும் இப்போது சந்தோஷமாகக் கூடி விட்டார்கள். என்னையும் உம்முடைய குலத்தையும் அனை வரையும் துக்கசாகரத்தில் தள்ளி விட்டுப் போய் விட்டீரே. ஐயோ! உம்முடைய அழகிய திருமேனி இந்த நிலைமையிலிருக்கிறதே! ராம பாணங்களால் துளைக்கப்பட்டு ரத்தச் சேறும் புழுதியும் படிந்து பிரகாசமிழந்து கிடக்கிறீரே! என்னால் பொறுக்க முடியவில்லையே! நான் என்ன செய்வேன்! லங்கேசன் என் புருஷன், இந்திரனை வென்றவன் என் மகன், எனக்கு என்ன குறை என்று கர்வங்கொண்டு மோசம் போனேனே! ஒரு வார்த்தை பேச மாட்டீரா? என்னை விதவையாகச் செய்து விட்டீரே! நான்தான் கெட்டேன்!"

இவ்வாறு பிரலாபித்துக் கொண்டு மண்டோதரி ராவணனுடைய பிரேதத்தின் மேல் விழுந்து பிரக்ஞையற்றுக் கிடந்தாள்.

(தொடரும்)



"லட்சுமி! இன்னைக்கு சமையல் சூப்பர்!"

"போதும்! போதும்!! உங்களை நீங்களே ஒரேயடியா புகழ்ந்துக்காதீங்க!"

– ராமநாதன்

வேட்டை வலம்

கங்கையும் சோணையும் கலந்து சங்கமிக்கிற காட்சியைப் பாடலிபுத்திரத் தலைநகரம், தினமும் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிறது.

அசோக மகா சக்கரவர்த்தி வேட்டைக்குப் புறப்பட்டு விட்டார். வேட்டை வலமும் தைலக் காப்பும்தானே சக்கர வர்த்திக்கு வேடிக்கை விழா. சந்திரகுப்த மகாசக்கரவர்த்தி காலத்தில் தொடங்கி, அவர் மகன் பிந்துசாரன், அவர் மகன் அசோகர் வரை அமர்க்களப்படுத்துவதல்லவா இந்த வேட்டை வலம். சென்ற ஆண்டு வரை உயிருடனிருந்த மகா அரசியல் மேதை சாணக்கியராலேயே இதைத் தடுத்து நிறுத்த முடியவில்லையென்றால் வேறு எவரால் இயலும்!

வானில் மேகங்கள் கிழக்கு நோக்கி ஊர்ந்து கொண்டிருந்தன. இன்னும் ஒரு வாரத்தில் பயணப்படவிருக்கிற கலிங்க யுத்தம் குறித்துக் கலிங்கவேந்தன் காரவேலனை எச்சரிக்கத் தூது செல்கின்றனவோ? இருக்கலாம்.

ராஜபாதைகள் முழுவதும் மக்கள் கூட்டம். சாலை யோரங்களில் * சவுக்குக் கட்டைகளைக் கட்டி அவற்றுக் குள்ளிருந்துதான் மக்கள் சக்கரவர்த்தியைத் தரிசிக்க வேண் டும். தவறி ஒரு சிறு குழந்தை வெளிவந்தால் கூட தண்டனை கடுமையாக இருக்கும். இவ்விதம் தண்டிக்கப்பட்டவர்கள் அநேகம்.

காவல் வீரர்கள் புரவிகளில் அமர்ந்து சுற்றிச் சுற்றிக் கண்காணித்து வந்தனர். சொல்லப் போனால் இந்த வேட்டை வலம் ஒரு கண்கொள்ளாக் காட்சிதான்.

பட்டத்து யானை மீது பொன்னாலாய அமளியில் அமர்ந்து, வில்லும் அம்புக் கூடுமாய் அசோக மகா சக்கர வர்த்தி வேட்டை வலம் வந்து கொண்டிருக்கிறார். முன்னே அரச பரிவாரங்கள் வாத்திய முழங்கச் செல் கின்றன. இதில் ஓர் அதிசயம் என்ன வென்றால், பல்வேறு தேசங்களிலிருந்து வரவழைக்கப் பட்ட இளம் அழகிகள் இருபுறமும் அணிவகுத்துச் செல் வர். ஏன்? வழக்கில் கொண்டு வந்த பாட்ட னார் சந்திரகுப்த மகாசக்கரவர்த்தியைத்தான் கேட்க வேண்டும். அவருக்குத்தான் பகைவர்கள் அதிகம். இரவு தோறும் வெவ்வேறு இடத்தில் படுத்து இரகசியமாக உறங்கு வார். அசோகருக்கு என்ன வந்து விட்டது?

இச் சமயம்தான் எதிர்பாராத அந்த நிகழ்ச்சி நடந்தது. விதியின் பிழையென்று எல்லாரும் எண்ணினும் இது விவே கத்தின் நுழைவு என்பதை அசோக மகா சக்கரவர்த்தியே அறியவில்லையே...

ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்ட எலும்புக் கூடுகளுக்கும் எந்தக் காலத்திலும் விமோசனம் இல்லை என்பதை முற்று மாக அறிந்து உணர்ந்து, கட்டுப்பாட்டை மீறி வெளிப் பட்டாள் ஓர் அழகி - இளம் பெண் - சௌமியா. சக்கர வர்த்தி வலம் வரும் பாதை யின் நடுவே அவள் வந்து நிற்கலாமா? அதுவும் வேண்டு மென்றே தனக்கென்ற ஒரு தைரிய நிமிரலுடன்! சேரி வாழ் பெண்ணுக்கு இப்படி ஒரு தண்டனையை விதி நிர்ணயிக்கலாமா என்று மக்கள் அரற்றி முணுமுணுத் தனர்.

காவல் வீரர்கள் அவளை விலகிச் செல்ல ஆணையிட, 'நீ யாரடா குதிரைக் கூலி' என்பது போலக் கண்களை உருட்டிக் கவனித்தாள் சௌமியா.

அமளியிலிருந்த அசோ கர் ஆவலமாக அந்த இளம் அழகியைக் கவனிக்கிறார். பெண் என்பதால் வீரர்கள் அவளை நாயை இழுத்துப் போடுவது போலச் செய லாற்றத் தயங்கினர். சக்கர வர்த்திக்கு முன்னே நடந்து வந்த பல நாட்டுப் பெண் ணழகிகளுள் ஒருத்தி, இனிய பாலிமொழியில் சொன் னாள் : "பெண்ணே! புத்தி கெட்டு விட்டதா? தண் டனையை ஏற்கும் வரை ஓரமாகச் சென்று



சௌமியா மூர்க்கமா கக் கத்தினாள் : "வேட்டைப் பரத்தையே! விலகி நில்! என் னைத் தொடாதே! தொடுவ தற்கு உனக்கு யோக்கியதை யில்லை."

* வரலாறு கூறும் உண்மை

வேட்டை வலமே விதிர்த்து நின்றது. என்ன நடக்கப் போகிறது என்று மக்கள் இமைக்க மறந்தனர். ஒவ்வொரு இதயத்திலும் ஒவ்வொருவிதமான துடிப்பு.

அசோகமகா சக்கரவர்த்தி அறிஞர்பிரான். ஒரு பெண்ணிடம் துணிச்சலுக்குப் பின்னே பெரும்புயலும் இருக்கலாம், பேரமைதியும் இருக்கலாம். அம்பாரியில் இருந்தே கேட்டார் : "பெண்ணே நீ யார்?"

வீராங்கனையாய் செளமியா வெடித்தாள் : "கொஞ்சம் இறங்கி வந்து கேட்கலாமே கொற்றவனே!"

சுரீர்...

சவுக்கில் பலத்த அடி விழுகிறது; அடித்தவன் பேரதிகாரம் படைத்த' ரஜ்ஜுகன்.

• ரஜ்ஜுகன் என்பது முதலமைச்சருக்கு இணையான பதவி

கோவி. மணிசேகரன்

அடுத்து கொஞ்சமும் யோசியாத செளமியா, "தூ! ஒரு பெண்ணை விசாரிக்காமல் சவுக்கடி கொடுப்பதுதான் அசோக மகா சக்கரவர்த்தியின் ஆட்சியென்றால், வெட்கப்படுகிறேன். இன்னொரு அடி கொடுக்கலாமே ரஜ்ஜுகரே! உன்னைச் சொல்லிக் குற்றமில்லை; உனக்கு இப்பதவி கொடுத்தவரைச் சொல்ல வேண்டும்!"

செளமியாவின் இந்தப் பொறி பறக்கும் சொல் கேட்டு, அசோகமகா சக்கரவர்த்தி அதிர்ந்து போனார். யானையை விட்டு இறங்கச் சொல்கிறாளே! ஏதோ ஒரு விடிவு அவரை அங்குசமாய்க் குத்தியது.

இறங்கினார்; மெல்ல அருகே வந்தும் நின்றார்.

"பெண்ணே..."

"என் பெயர் செளமியா."

"ஓ...! செளமியா! உயிருக்குத் துணிந்துதான் செயல்படுகிறாய்."

"எங்களுக்கு உயிர் என்கிற ஒன்று இருந்தால்தானே துணிவதற்கு சக்கரவர்த்தி! நாங்கள் சேற்றில் புரளும் ஜடங்கள்; பன்றிகளிலும் பாவம் செய்தவர்கள்."



அருள்வாக்கு

யோகம், தியானம், தபஸ், யக்ஞம், கர்மாநுஷ்டானம், கல்யாணம் முதலான சடங்குகள், ராஜ்ய நிர்வாகம், சமூக வாழ்க்கை, கவிதை ஆகிய இவை எல்லாம் முடிந்த முடிவில் கட்டிக் காட்டுகிற ஒரு பொருள் எதுவோ, அந்த ஒரு பொருள்தான் வேதத்தின் உண்மையான தத்துவமாக இருக்கிறது. அந்த உண்மையான பொருள் ஒன்றைத் தவிர பாக்கி எல்லாம் மாறி மாறிப் போகும்படியான பொருள்கள்; கதையாகப் போகிற பொருள்கள்; பின்னால் அந்தக் கதையும் மறைந்து போகிறது. ஒன்று தெரியாமல் பலவான லோகம்தானே நமக்குத் தெரிகிறது? அதனால், நமக்குத் தெரிகிற ஒவ்வொன்றையும் காட்டி, அதன் மூலமே ஒன்றுக்கு அழைத்துக் கொண்டு போவதற்காகத்தான், வேதம் பல பல விஷயங்களையும் சொல்கிறது.



வேதத்தினால் கட்டிக் காட்டப்படுகிற மெய்யான ஒரு பொருளை அறிந்து கொள்ள வேண்டுமானால், அந்த ஒன்றைப் பற்றிய நினைவு நமக்கு வருவதற்குச் சித்தத்திற்குச் சில பழக்கங்கள் (Disciplines) வர வேண்டும். யாகங்கள் பண்ணுவது, தபஸ் பண்ணுவது, தர்மங்களை எல்லாம் செய்வது, கோபுரம் கட்டுவது, குளம் வெட்டுவது, சமூக கார்யங்கள், கலியாணம் முதலான ஸம்ஸ்காரங்கள் ஆகிய எல்லாம் சித்தத்தைச் சுத்தி செய்து, சித்த விருத்தி நிரோதம் (ஓடிக் கொண்டே இருக்கும் மனதை அடக்குவது) செய்வதற்காகத்தான். பல்வேறு கர்மாக்களின் நோக்கம் பரமாத்மாவை அடைவதற்குத் துணைபுரிவதுதான்.

"வேத" என்றால் அறிவது, எந்த 'ஒன்றை அறிந்து கொண்டால், அனைத்தையும் அறிந்து கொண்டதாகுமோ அதுதான் ஆத்மா' என்று உபநிஷத்து சொல்கிறது. அப்படிப்பட்ட ஆத்மாவைப் பற்றி அறிவிப்பதுதான் வேதத்தில் லட்சியம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

அசோகர் அரண்டு போனார்.

"சென்ற ஆண்டு இதே மாதிரி ஒருவன் கட்டு மீறி வெளிவந்தவன் கதியை அறிவாயா?"

"அறிவேன்; ஒரு காலைத் துண்டித்தீர்கள். அவர் வேறு யாருமல்ல; என் கணவர்;"

அசோகர் மேலும் அருண்டார். சௌமியாவே பேசினாள் :

"புருஷன் மனைவி எல்லாவற்றிலும் ஒத்திருக்க வேண்டும் என்று தரும நியாயங்கள் பேசுகின்றன. கணவன் ஒருகால் இழந்து மனைவி இருகால்களுடன் நடமாடலாமா? இதிலும் ஒத்திருப்பதுதானே நியாயம்; தருமம்! எனது ஒரு காலை துண்டிக்கலாம் தேவனம்பிரிய!"

தேவனாம் பிரிய...

"நீ எதுவரை படித்திருக்கிறாய் சௌமியா?"

"தாழ்ந்த குலத்துச் சேரி வரை படித்திருக்கிறேன். ஆனால் எங்களுக்கு வேட்டையாடத் தெரியாது. ஏனெனில் நாங்களே வாயில்லா ஜீவன்கள்! வாயிருந்தால் இதோ விசாரணையின்றி சவுக்கடி கொடுத்தாரே... அதற்குக் காரணம் கேட்டிருப்போம்!"

"வேட்டைவலம் வருகிற போது யாரும் குறுக்கே நடமாடக் கூடாது."

"மக்களுக்காக மன்னரா? மன்னருக்காக மக்களா?"

"ஏ, பெண்ணே! அதிகமாய் பேசுகிறாய்! இவளைச் சிறைபிடியுங்கள்" ரஜ்ஜுகர் உணர்ச்சிவசப்பட்டுக் கத்துகிறார்.

"சிறையேன்! காலை வெட்டுங்கள்; இங்கேயே தண்டனையை நிறைவேற்றலாம்!"

மேலும் ஏதோ பேச வாய் திறந்த ரஜ்ஜுகரைக் கையமர்த்தி சிந்திக்கிறார் அசோகமகா சக்கரவர்த்தி. பெரிதாகச் சிந்திக்கிறார். இப் பெண் தண்டனைக்காக மட்டும் சட்டத்தை மீறவில்லை. இவளுள் ஏதோ ஒரு நியாயம் சுழல்கிறது. ஏதோ ஒன்றுக்கு நீதி கேட்கவே துணிந்திருக்கிறாள்.

"சௌமியா! நாளை நீதிமன்றத்தில்..."

உங்கள் அன்பு கலந்த பாதுகாப்பை அவளுக்கு அளியுங்கள்!



ப்ளான் துவக்கம்
ஆகஸ்ட் 6, 1994.

இப்போது யூடிஐ வழங்குகிறது

கிருஹலக்ஷ்மி

யூனிட் ப்ளான்

18 வயதிற்கு மேலுள்ள தனிச்சிறப்பான மகளிருக்கு:
உங்கள் அன்புக்குப் பாத்திரமான உங்கள் மகள், தங்கை, மருமகள், பேத்தி அல்லது வேறெந்த மகளிராகவோ இருக்கலாம். ரூ. 1 இலட்சம் வரை தனிச்சிறப்பான கிஃப்ட் வரிச் சலுகையுடன் கூடிய மிகக் கச்சிதமான திருமணப் பரிசை நீங்கள் வழங்கலாம்.

சிறப்பம்சங்கள்


- காலவரையற்ற ப்ளான்
- குறைந்தபட்ச முதலீடு ரூ.5000 மற்றும் அதற்கு மேல் ரூ.1000த்தின் மடங்குகளில். உச்ச வரம்பு கிடையாது.
- 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மகளிருக்கான எந்த ஒரு தனிநபர் அல்லது இந்து கூட்டுக் குடும்பம் முதலீடு செய்யலாம். 18 வயதிற்கு மேற்பட்ட எந்த ஒரு இந்திய பெண்ணும் தனக்காக முதலீடு செய்யலாம்.
- முதல் வருடத்திற்கு டிவிடெண்ட் கிடையாது. வருடாந்தர டிவிடெண்ட் 2வது வருடம் முதல் ஆரம்பமாகும். உதாரணமாக, ஆகஸ்ட் 94-ல் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், டிவிடெண்ட் ஜூலை 96 முதல் முதலீட்டாளர்களுக்குக் கொடுக்கப்படும்.
- மூன்று வருடம் கழித்து எச்சமயத்திலும் என்ஏவி அடிப்படையிலான திரும்ப வாங்கும் விலையில் பணத்தைத் திரும்பப் பெறும் வசதி.
- மூலதன மதிப்புயர்வுக்கான வாய்ப்பு
- இத்திட்டத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தின்மேல் ரூ. 10,000 வரை பிரிவு 80-ன் வரையறைக்குள் வரிச்சலுகை.
- வழக்கமான கிஃப்ட் வரிச்சலுகை ரூ.20,000 வரை மற்றும் ஒருவரை சார்ந்துள்ள மகளிருக்கு அவருடைய திருமணத்தின்போது ரூ. 1 இலட்சம் வரை கொடுக்கப்படும் பரிசுத் தொகைக்கு வரிச்சலுகை.

அனைத்து மியூச்சுவல் ஃபண்டுகள் மற்றும் செக்யூரிடிகளில் செய்யும் முதலீடுகள் மார்க்கெட் ரிஸ்க்கிற்கு கட்டுப்பட்டவையாகும். மற்றும் செக்யூரிடிகள் மார்க்கெட்டை பாதிக்கும் அம்சங்கள் மற்றும் ஆட்சித்திறம் பொறுத்து திட்டங்களின் என்ஏவி ஏறிடவும், இறங்கிடவும் செய்யும். கிருஹலக்ஷ்மி என்பது திட்டத்தின் பெயர் மட்டுமே. மற்றும் திட்டத்தின் தரத்தையோ, அதன் எதிர்கால வளர்ச்சியையோ அல்லது வருமானத்தையோ எவ்விதத்திலும் சுட்டிக்காட்டுவது ஆகாது. தயவு செய்து முதலீடு செய்யுமுன் ஆஃபர் பத்திரத்தைப் படிக்கவும்.

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா
உங்கள் வளமான எதிர்காலத்திற்கு

மண்டல அலுவலகம்: 39, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101.
கிளை அலுவலகங்கள்: • கோயம்புத்தூர். போன்: 214973 • சென்னை. போன்: 517101, 517190 • மதுரை. போன்: 38186 • திருச்சி. போன்: 27060


UTI-77/94 TA C



யார் நல்லவர்கள்?

நல்ல மனிதர்களுக்கு முதலில் மனம் முதிர்ச்சி அடைந்த பிறகு உடல் முதிர்ச்சி அடையும்.

எங்களது சுவையான இனிப்பு மற்றும் கார வகைகளை வாங்கி நல்லவர்களுக்கு கொடுங்கள்.



திருமணம் மற்றும் விசேஷங்களுக்கு அதிரசம், அப்பம், திரட்டுப் பால், சீர் முறுக்கு, சீர் முள்ளுத் தேன்குழல் செய்து தரப்படும்.

இனிப்புகள்: அதிரசம், வெல்லச்சீடை, மனோகரம் உருண்டை, பொறி விளங்காய் உருண்டை, ரவாலாடு மற்றும் பல இனிப்புகள் செய்து தரப்படும்.
காரவகைகள்: சீப்புச்சீடை, ரயில்கட்டிடம், கார்ன் ப்ளக்ஸ் மிக்ஸர், வறுபயறு, தேன்குழல் முள்ளுத் தேன்குழல் மற்றும் பல கார வகைகள் செய்துதரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2-வது மெயின்ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை - 20. போன் : 412557

"வீதியில் நீதி கேட்டாள் ஒரு வீராங்கனை என்கிற சரிதம் அசோக ராட்சியில் இடம்பெறட்டுமே! தண்டனையும் வீதியிலேயே வழங்கப்பட்டது என்கிற தருமம் கல்வெட்டுக்களில் இடம் பெறட்டுமே!"

"நீ கேட்கும் நீதி? உன் கணவனுக்காகவா? அல்லது..."

"பிரபோ! என் கணவனுக்காக நீதி கேட்பதால் ஒருகால் வந்து விடப் போவதில்லை. இரு கால்களிருந்தும் முடவர்களாய் தாழ்த்தப்பட்டுச் சாக்கடையினும் கேவலமாக வாழும் மக்களை நீங்கள் தரிசித்து இருக்கிறீர்களா? நீங்கள் விலங்குகளை வேட்டையாடப் புறப்பட்டீர்கள்; உங்கள் அதிகாரிகள் அஃறிணைகளையொத்த எங்களை வேட்டையாடுகிறார்கள். காட்டிலும் வாயில்லை; காட்டையொத்த எங்கள் வீட்டிலும் வாயில்லை."

"உங்களை ஏன் வேட்டையாட வேண்டும்?"

"எங்களிடம் பொருளா இருக்கிறது? வயிற்றுக்கே பகலிருந்தால் இரவில்லை. ஆனால் என்னைப் போன்ற அழகும் செழுமையும் நிறைந்த இளம்பெண்கள் இருக்கிறார்களே!"

"இப்படியும் நடக்கிறதா?"

"ஏன் நடக்கவில்லை? இதோ சவுக்கால் அடித்தானே ரஜ்ஜு பதவியில் இருக்கும் ராட்சஸன். இவன் என்னைக் கொள்ளையடிக்க முயன்றான். உன் புருஷனுக்கு ஒரு கால் இல்லையே! அவனை வைத்துக் கொண்டு ஏன் வதைபடுகிறாய் என்று கேட்டான். அதனால்தான் நான் எனது ஒரு காலை இழக்கத் துணிந்தது."


அசோகமகா சக்கரவர்த்தியின் கண்கள் சிவந்து கனன்றன. மகத சாம்ராஜ்யமே எரியுண்டு, அதன் தீக்கொழுந்துகள் தம்மைத் தாக்குமென போலத் துடித்தார். மௌரிய குலமே தலைகுனிந்து போனதாக உணர்ந்தார். சௌமியாவே மேலும் கர்ஜித்தாள் :

"தேவனாம்பிரிய, உங்கள் சலனம் எனக்குப் புரிகிறது. நீங்கள் அரண்மனைவாசி! பாடலிபுத்திரத்தின் ஓர் அழகிய பகுதியே உங்களுக்குப் புரியவில்லையெனில் பரந்த மகத சாம்ராஜ்யம் எங்கே தெரியப் போகிறது? என்னுடன் விருப்பமிருப்பின் வாருங்கள். சாம்ராஜ்யம் எப்படியெல்லாம் அழுகிக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்ப்பீர்கள்."

"வருகிறேன் தாயே!" என்று ஆவேசம் பொங்கக் கத்தினார் அசோகமகா சக்கரவர்த்தி.

தென்பகுதி நோக்கி சக்கரவர்த்தி,

பாதிப்பு!



ஏதோ
கொஞ்சம் தெரியும்
மூன்றாம் பிறைக் கீற்றைப் போல்
கண்ணே
உன் நெற்றி ஓரத்தில்
லேசாய் ஒரு நரை.

- ஆர். ரத்தினசாமி

நடந்தார். சௌமியா தனது சேரிப் பகுதிக்கு அழைத்துச் சென்றாள். தாழ்குல மக்கள், தங்கள் சக்கரவர்த்தியா இந்த நரகப் பகுதியில் நடந்து வருகிறார் என்று கூனிக்குறுகிக் கால்களில் விழுகிறார்கள்.

பாதையா அது? எங்கும் புழுக்கள் நெளியும் சாக்கடைகள். பன்றிக் குட்டிகளுடன் மனிதக் குட்டிகள். உடையிருந்தும் இல்லாமலும் எலும்புக் கூடுகள். சௌமியா சொன்னாள் :

"மகத பூபதி! இந்த நரகத்தைப் பார்த்திருக்கிறார்களா? கேள்விப்பட்டே இருக்க மாட்டீர்களே! சீழ் பிடித்த வாழ்வில் வாழ்கிற இவர்களும் ஜீவன்கள்தாம்! இவர்களுக்குத் தெரிந்தது பட்டினி; தெரியாதவை பாவ காரியங்கள்.

அதோ பாருங்கள்; நீங்கள் தண்டிக்கப் பட்ட என் புருஷன் ஒரு காலில் தவமிருக்கிறார். அவர் என்ன வேலை பார்த்து-என் வயிற்றைக் கழுவுவார்? இந்தப் பலவீனங்களே உங்கள் அதிகாரிகளை நோக்கி எங்களைப் பலி கேட்கச் செய்கின்றன. இங்கே எவனுக்கு அல்லது எவளுக்கென்று ஒரு தனிமை இல்லை. ஆயினும் வானமிருக்கிறது; மானமிருக்கிறது. உங்களுக்குப் படை தெரியும், வெற்றி தெரியும், பணக்காரர்கள் தெரிவர். பொதுவில் சொர்க்கம் தெரியும். நரகத்தை ஏட்டில் படித்திருப்பீர்கள்; நாட்டிலேயே அது இருப்பதை அறிய மாட்டீர்கள். வேட்டைவலம் புறப்பட்டீர்களே, இந்த வேதனை வலத்தை அறிவீர்களா?"

அசோகரின் தலையில் சம்மட்டிகளின் தாக்குதல்கள். புரியாத இருட்டு; புரிந்த வெளிச்சம்.

"ஐயோ, சௌமியா, போதும், போதும்! இனி இந்த வேட்டைவலம் கிடையாது; • என் காலத்தில் இது நிறுத்தப்படுகிறது."

பரந்து விரிந்த அந்தத் தாழ்ந்த குலத்து மக்களெல்லாம் குழுமி, கைகளைத் தோள்களின் மீது போட்டுத் தலைகுனிந்து நிற்கின்றனர்.

அசோகமகா சக்கரவர்த்தி என்ன நினைத்தாரோ, "சௌமியா! உன் கணவன் காலை வெட்டிய இப்பாவியின் காலை நீ வெட்டுவாயாக!" என்று கூறி வாளையுருவி நீட்டினார்.

முன்னே கூடியிருந்த முகமற்ற மனிதர்களும், பின்னே குழுமியிருந்த முகப்பரிவாரங்களும் மாமன்னருடைய முடிவு கேட்டு 'ஓ...'வென்றிரைந்தனர்.

சௌமியா, அந்த வாளுக்கு முத்தமிட்டு, வெட்டச் சொன்ன காலைப் பற்றிக் கண்ணீரால் கழுவினாள்.

"சௌமியா! என் சகோதரி!" என்று அவளைத் தழுவிய அசோகமகா சக்கரவர்த்தியின் நெற்றிப் பொறியில் ஞான தீபத்தை யாரோ ஏற்றுவது போல் தெரிகிறது.

"இக்கண முதல், மனித உருவில் ஜடங்களாய் வாழும் இவர்களுக்கு நீதான் ரஜ்ஜுகி! தேவையான பொருளைப் பெற்று இவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்! நரகத்தைச் சொர்க்கமாக்கு! எவரேனும் அதிகாரிகள் தலையிட்டால், அவர்கள் தலைகளைக் கொய்யவும் உனக்கு அதிகாரம் வழங்குகிறேன். இன்று முதல் நீ சௌமியா வல்ல; இந்த மக்களின் சௌகரியா!"


ஏழை மக்கள் இறைவனைப் பார்த்ததில்லை. அசோகமகா கடவுளை வணங்கிப் போற்றுகிறார்கள்.

"சௌமியா! கலிங்கப்போர் முடிந்ததும் உன்னை அரண்மனையில் அழைத்துக் கௌரவிப்பேன்!"

"வெற்றியோடு திரும்ப இந்த ஏழைகள் பிரார்த்தனை செய்வர். வெற்றியோடு திரும்புங்கள்."

சௌமியா கரம் கூப்பித் தலைவணங்குகிறாள். அவளது கண்களில் ஆனந்த நீர்த் திவலைகள்.

• சந்திரகுப்தன் காலத்தில் தொடங்கிய இந்த வேட்டைப் பழக்கம், அசோகர் காலத்தில் நிறுத்தப்பட்டது என்பது சரித்திரம்.



"என்னங்க இது, கூட்டத்தில் இப்படித் திரும்பின இடமெல்லாம் உண்டியல் குலுக்கறாங்க?"

"உண்டியல் குலுக்கறதுக்கு ஒரு ரேட் நிர்ணயித்து டெண்டர் விட்டுட்டாங்க, அதான்!"

- கீழை. அ. கதிர்வேல்

புகழ்பெற்ற ஜோதிஷர், மந்திர சாஸ்திர நிபுணர் பண்டித காழியூர் மபத்மநாபன்



காழியூர்
ம. பத்மநாபன்


ஸத்யமேவ ஜயதே

பிரபல ஜோதிஷர் (பண்டித காழியூர் ம. பத்மநாபன்) காழியூர் ஸ்ரீனிவாசாச்சாரியாரின் மூத்த புதல்வரும், அவரால் ஜோதிஷ மந்திர சாஸ்திரங்களில் 45 வருட காலம் நன்கு தேர்ச்சியும், ஆசிர்வாதமும் பெற்றவரால் கீழ்க்கண்ட மகத்தான சக்தி வாய்ந்த யந்திரங்கள் சக்கரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

மஹாசுதர்சன யந்திரம்	(வெள்ளியில்)	ரூ.175/-
ஹனுமத் கவசம்	"	ரூ.175/-
ஸரஸ்வதி கவசம்	"	ரூ.175/-
மஹாலக்ஷ்மி கவசம்	"	ரூ.175/-
தனாகர்ஷண யந்திரம்	"	ரூ.300/-
லக்ஷ்மிநரஸிம்ம கவசம்	"	ரூ.200/-
மஹாலக்ஷ்மி சக்ரம்	"	ரூ.400/-
மஹாசுதர்சன சக்ரம்	"	ரூ.400/-

இவை தவிர இன்னும் அநேகவிதமான யந்திரங்களும் கவசங்களும் விசேஷ பூஜா க்ரமப்படிக்கு தயாரித்து அனுப்பப்படும்.
வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகையையும்.D.D (Bank Draft) மூலம் அனுப்ப வேண்டும். தபால் செலவு தனி ரூ.50/-
கேட்லாக்கும் அனுப்பப்படும்.

மற்றும் சர்வாரிஷ்ட நிவாரிணி விபூதி ரூ.30.00; க்ஷேம ஸம்ரக்ஷணி குங்குமம் ரூ.30.00; விஜய தனாகர்ஷணி மூலிகை ரூ.25.00; வசிகரண அஞ்சனம்ரூ.25.00;சதாமூலிகா தூபம் ரூ.35.00.



எனது தந்தையார் அடியேனுக்கு மந்திரோபதேசம் செய்யும் காட்சி.

கம்ப்யூட்டர் ஜாதகம் தமிழில்		ரூ. [illegible]
கம்ப்யூட்டர் ஜாதகம் ஆங்கிலத்தில்		ரூ. 40.00
ஆயுள் பலனுடன்	...	ரூ.175.00
(ஜனன வருஷம், மாதம், தேதி, நேரம், ஊர் தேவை)		
ஜாதகத்தின் பொதுபலன்களை நேரில் சொல்வதற்கு	...	ரூ.35.00
முகூர்த்தம் அல்லது விவாஹப் பொருத்தம் விவரித்து எழுத	...	ரூ.35.00
ஆரூடம் 3 கேள்விகளுக்கு	...	ரூ. 25.00

முக்கிய கவனிப்பு :


தபால் மூலம் வரும் எல்லா கடிதங்களும் வெகு கண்டிப்பாக பரம ரகசியமாக வைக்கப்படுகின்றன. எனவே எவரும் எம்மாதிரியான அந்திரிக ரகசிய விஷயங்களைப் பற்றியும் பயமின்றி எழுதலாம். மற்றும் இதர விஷயங்களுக்கு மேற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

வீட்டில் கிரக தோஷம், திருஷ்டி தோஷம், சல்லியம், வாஸ்து தோஷம், சங்கா தோஷம் மற்றும் எந்த விதமான தோஷங்களும் பாதியாமல் இருப்பதற்கு சுதர்சன ஹோமம், மஹா சுதர்ஸன சக்கரம், பிரதிஷ்டை செய்து தரப்படும். உள்ளூர் வாசிகளுக்கு மட்டும் செய்யப்படும். விவரம் வேண்டுவோர் நேரிலோ, தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம். சுபமஸ்து!

வேண்டுவோர் கடிதத் தொடர்பு கொண்டு விபரம் அறிந்து பணம் அனுப்பி சகல நன்மைகளும் அடைவீர்களாக.

**பிரபல ஜோதிஷர்
பண்டித காழியூர்
ம. பத்மநாபன்**
"தபோநிதி"
நெ : 5, வித்யோதயா
முதல் மெயின் தெரு,
தபால் பெட்டி
எண் : 1411,
தி. நகர்,
மதறாஸ் - 600 017,
தென் இந்தியா
Phone : 8263814

[redacted]



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 130 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ. 500/-, ரூ. 750/- அல்லது 1000/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ 5000/-, ரூ. 7500 அல்லது 10,000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்குகொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும் :

அத்வைத வித்யசார்யா மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D-76 மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் - 612 001.

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பலாம்.

*****இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு*****

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I

1. ரிக்வேத சருங்கலா - நாகராக்ஷரம் - ரூ. 60/-
2. ரிக்வேத ஸம்ஹிதா நாகராக்ஷரம் 10 மண்டலங்கள் விலை ரூ. 165/-
3. ஸாமவேத ஸம்ஹிதா - கிரந்தாக்ஷரம் - 2 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 185/-, இரண்டாம் பாகம் - ரூ. 210/-)
4. ஸாமவேத அஷ்டப்ராம்மணம் - நாகராக்ஷரம் - 3 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 210/-, இரண்டாம் பாகம் - ரூ. 110/-, மூன்றாம் பாகம் - ரூ. 85/-)
5. ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - கிரந்தாக்ஷரம் - ரூ. 80/-
6. சாந்தி குஸுமாகரம் (2 பாகங்கள்) - ரூ. 170/-

II **கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்துச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள்**

1. போதாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ: 95/-
2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 90/-
3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 55/-
4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 85/-
5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 50/-
6. கல்ப சிந்தாமணி - ரூ. 55/-

III **நாகராக்ஷரம்**

1. மனாசேச்லோக - ராமமந்த்ராசே ச்லோக - ரூ. 25/- (மராத்தி மூலம் தமிழ் பதவுரை)
2. ஸ்ரீ ராதாகிருஷ்ண பூஜாவிதானம் - ரூ. 25/- (ஸம்ஸ்கிருத மூலம் - தமிழ் பதவுரை)
3. நளோதந்தம் - நைஷதகாவ்யத்தின் சுருக்கம் - ரூ. 25/- (ஸம்ஸ்கிருத மூலம் - ஆங்கில பதவுரை)
4. வேதபாட வழிமுறை (syllabus) ரிக், யஜுர், ஸாம - ரூ. 25/-
5. ராமோதந்தம் - நாகராக்ஷரம் - ரூ. 25/-
6. ஸௌபாக்ய யந்த்ரம் - ஆர்ட் பேப்பரில் - ரூ. 25/-


V.P.P. யில் அனுப்புவதில்லை. முழுத் தொகையையும் **M.O. (or) Draft** மூலம் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம். "எமது நூல்கள் பற்றிய விவரமான கேட்லாக் வாங்க விரும்புவோர் ரூ. 3/- தபால்தலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்."

பிரஸிடென்ட் - டிரஷரர் - A.V.M.S.G.D.P.S ஸமிதி, D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் - 612 001.

நேரில் வாங்க விரும்புவோர் கண்டிப்பாக - ராஜா வேதகாவ்ய பாடசாலை, யாகசாலை தெரு. (சக்கரை படித்துறை அருகில்) கும்பகோணம் - 612 001 என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும்.

டீ.வி. சிரிப்புப் போட்டி முடிவு

தலா ரூ. 50/- பரிசு பெறும்
ஐந்து துணுக்குகள் :



"ஜூன் முடியட்டும், ஜூலை முடியட்டும் கதை யெல்லாம் என்கிட்ட வேண்டாம். கரெக்டா சொல்லு! பணத்தை எப்ப திருப்பித் தரப் போற?"

" 'ஜுனூன்' முடியட்டும். கண்டிப்பா கொடுத்துடறேன்."


– சி. ராமநாதன், சென்னை - 49.



டீ.வி. நிலைய அதிகாரி : என்னங்க, பெட்டி படுக்கையுடன் வந்திருக்கிறீங்க?

வந்தவர் : நீங்கதானே கிரிக்கெட் மாட்ச பார்ப்பதற்கு நேயர்களை டெல்லிக்கு அழைத்துச் செல்கிறோம் என்று நேற்று அறிவிப்புச் செய்தீங்க!


– டி. சுந்தரம், சென்னை - 5.



மனைவி : இந்த டீ.வி. டிராமாவுக்கு நடுவுல ஏதோ கேப்ஷன் போடறாங்களே என்னங்க அது?

கணவன் : இந்த டிராமா சீன்ல வர்ற ரூம்ல சோபா செட், அப்ட்ரான் டீ.வி. இதெல்லாம் நாறு டிராமாவுல இடம்பெற்றதற்காக சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் பெயர் கின்னஸ் புக்ல இடம்பெற்றதாக அறிவிப்புச் செய்யறாங்க.

– ஆர். ராஜா, சென்னை - 4.



அவர் : நிலைய இயக்குனர் ஏன் கோவிச்சிக் கிட்டுப் போறாரு?

இவர் : ரொம்பச் செலவில்லாம பத்து நிமிஷத்துக்கு என்ன புரோகிராம் போடலாம்னு கேட்டதுக்குத் 'தடங்கலுக்கு வருந்துகிறோம்' போடலாம்னு யாரோ யோசனை சொல்லிட்டாங்களாம்!

– ராபின் ஸாம், சென்னை - 50.




மழை பெய்து கொண்டிருக்கும் போது டீ.வி.யில் சினிமா பார்த்தோம். திடீரென்று கலரே வரவில்லை. தாத்தா கேட்டார், "என்ன கலர்ப் படம் கலரில்லாமல் வருகிறதே?" என்று.

என் பையன் உடனே சொன்னான் : "தாத்தா ஆன்டெனா மழையில் நனையுதில்லே; அதான் படம் சாயம் போயிடுச்சு!"

– எஸ். இந்திரா, நெய்வேலி - 1.

நினைவலைகள்



FILMS WILL ONE DAY BECOME THE NATIONAL CONSCIENCE AND FILM MAKERS THE LEGISLATORS OF MAN KIND.
— BERNARD SHAW

வாசக அன்பர்களுக்கு ஒரு தன்நிலை விளக்கம் :

எனது கட்டுரைத் தொடரின் முதல் அத்தியாயத்தைப் படித்து விட்டு, "நீங்கள் ஏன் இந்தத் தொடரை உங்களது திரையுலக வாழ்க்கையின் பாதியிலிருந்து ஆரம்பித்திருக்கிறீர்கள்; உங்களது மேடை நாடக அனுபவங்களிலிருந்து ஆரம்பித்திருக்கலாமே" என்று அபிமானி ஒருவர் தனது ஆதங்கத்தை வெளியிட்டார்.

அவருக்கு எனது விளக்கம் : இந்தக் கட்டுரைத் தொடர் வெறும் நினைவலைகளே தவிர எனது சுயசரிதம் அல்ல. எனது வாழ்க்கைச் சரித்திரம் முக்கியமல்ல; எனது வாழ்நாளில் எனக்கு அவ்வப்பொழுது ஏற்பட்ட சில உந்துதல்களும் அதற்குக் காரணமான சம்பவங்களையும் மனிதர்களையும் பற்றி மட்டுமே நான் முக்கியமாக நினைத்து வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள நினைக்கிறேன். சினிமா பத்திரிகைகளில் வரும் வழக்கமான கட்டுரைகளுக்கு அப்பாற்பட்டு நான் நிற்க விரும்புகிறேன்.

எனது எண்ணங்கள் எந்தெந்தத் திசைகளில் செல்கின்றனவோ, அங்கெல்லாம் சென்று மீண்டும் திரும்பி வருகின்ற உரிமையை இந்தக் கட்டுரைத் தொடரில் நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

எப்போதுமே நான் இயக்குகின்ற திரைப் படங்களில் நான் எப்படியெல்லாம் செயல்பட்டேன், என்னவெல்லாம் கஷ்டப்பட்டேன் என்பன போன்ற பல விஷயங் களையும் நான் பத்திரிகைகளுடன் பகிர்ந்து கொள்வதில்லையென்பது வழக்கமாகவே என்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு.

'Don't tell others about labour pains; show them the baby' என்று ஒரு அறிஞர் சொல்லியிருக்கிறார். இந்த தத்துவத்தைத்தான் நான் எனது ஆரம்ப நாட்களிலிருந்து கடைப்பிடித்து வருகிறேன். இதே கொள்கையுடன்தான் இயக்குனர் மணிரத்தினம் அவர்களும் பணியாற்றுகிறார். We totally agree on this issue.

எனது இன்னொரு அபிமானி கட்டுரைத் தொடரைப் படித்துவிட்டு தொலைபேசியில் சொன்னார். கட்டுரையில் ஆங்கிலச் சொற்றொடர்களும், வாக்கியங்களும் அவ்வப்பொழுது உபயோகிப்பதைப் பற்றி சற்று வருத்தப்பட்டுக் கொண்டார்.

இதோ என் பதில் :

சில எண்ணங்களை மனத்தளவிலே ஓடுகின்ற வேகத்தில் சொல்லும்போது எனக்கு எப்படி வருகிறதோ அப்படியே சொல்லி விடுகிறேன். நான் நினைப்பதை உடனே 'Communicate' பண்ண வேண்டும். பாருங்களேன்! இப்பொழுது கூட 'Communicate' என்கிற வார்த்தை அதுவாக வந்து விழுந்து விட்டது. இதற்குச் சரியான தமிழ் வார்த்தையை யோசித்து நிச்சயமாக எழுதிவிட முடியும். ஆனால் என் எண்ணங்களின் வேகத்தை எழுத்து பிரதிபலிக்காது.

1962; அக்கவுண்டண்ட் ஜெனரல் அலுவலகத்தில் நான் பணி புரிந்து கொண்டிருந்த நேரம். 'ஹுசைன் ஆகா' என்றொரு புதிய அக்கவுண்டண்டு ஜெனரல் பொறுப்பு ஏற்கின்ற தினம்; அவருக்கு ஒரு வரவேற்பு விழா; அலுவலக வளாகத்திலேயே ஒரு நாடகம் தயார் செய்து அன்று அரங்கேற்றினேன். பதவி ஏற்க வரும் அவருக்குத் தமிழ் தெரியாதென்பதால் அந்த நாடகத்தை ஆங்கிலத்திலே எழுதினேன். நான் எழுதி, இயக்கி, தயாரித்து நானே முக்கிய கதாபாத்திரமாக நடித்த அந்த நாடகம்தான் 'மேஜர் சந்திரகாந்த்'.

அதிலிருந்து ஒரு Clipping.

மேஜர் சந்திரகாந்த், தனது மகன் இன்ஸ்பெக்டர் 'ஸ்ரீகாந்த்'துடன் பெரிதாக நடந்து முடிந்த விவாதத்திற்குப் பிறகு சொல்வார்:

"Let us agree to disagree my son" என்று.

இதே நாடகத்தை 'சுந்தரராஜன்' மேஜராக நடித்து தமிழாக்கம் செய்யப்பட்ட போது, இந்த ஆங்கிலச் சொற்றொடரை எப்படியெல்லாமோ எழுதிப் பார்த்து, என் மூளைக்கு எட்டிய வரையில் எதுவுமே

இரத்தினச் சுருக்கமாகவும், அதே நேரத்தில் அந்த ஆங்கில வாக்கியத்தில், கேலித்தனத் துடன் உள்ளடங்கிய முழு அர்த்தமும் தொனிக்கின்ற வகையிலே சரியான மொழி பெயர்ப்பு கிடைக்காமல் போகவே, கடைசியில் அப்படியே ஆங்கில வசனமா கவே வைத்துக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

நாடகம் திரைப்படமான போது கூட அந்த ஆங்கில வசனம் அப்படியே வைத்துக் கொள்ளப்பட்டது.

தனித்தமிழ் பிரியர்கள் என்னை மன்னிப்பார்களாக!



• 'மேஜர் சந்திரகாந்த்' படத்தில் மேஜர் சுந்தரராஜன்!

இந்த ஆங்கில "மேஜர் சந்திரகாந்த்" நாடகத்திலிருந்து இன்னொரு Clipping.

கண்பார்வை இல்லாமலிருந்தும் வீட்டிற் குள்ளே கொஞ்சமும் தட்டுத் தடுமாறாமல் அங்குமிங்கும் நடந்து செல்லும் 'மேஜர் சந்திரகாந்த்' பற்றி, அங்கே அந்த இரவிற்கு மட்டும் தஞ்சம் புகுந்த ஒரு கொலையாளி (திரையிலே நாகேஷ் ஏற்றுக் கொண்ட மோகன் பிரபு என்கிற கதாபாத்திரம்) புகழ்ந்து பேசுவான். பூரிப்பிலே மகிழ்ந்து போன அந்த மேஜர் "எனக்கு எல்லாமே கணக்குத் தான்" என்று சொல்லி, கைத்தடியின் உதவி இல்லாமலே அந்த நீளமான பெரிய வரவேற்பறையில் அவனுக்கு மெய்ப்பித்துக் காட்டுவார்...

"இதோபார்... ஒண்ணு, ரெண்டு, மூணு, நாலு, அஞ்சு, ஆறு... இதோ இங்கே ஒரு மேஜை... வலது பக்கம் திரும்புகிறேன்... ஒண்ணு, ரெண்டு மூணு, நாலு, அஞ்சு... எதிரில் சுவர் இருக்கிறது.. மீண்டும்; வலப் பக்கம் திரும்புகிறேன்... ஒண்ணு, ரெண்டு, மூணு, நாலு, அஞ்சு இதோ! இங்கே ஒரு சோபா இருக்கிறது." அதில் அமர்ந்து காட்டு வார்...

"அற்புதம் ஸார்" என்பான் அந்தக் கொலையாளி.

"இன்னும் பார்" என்று சொல் லியபடியே மனதிற்குள்ளாகவே தனது காலடிகளைக் கணக்கிட்டுக் கொண்டு .....இன்னொரு சோபா இருக்குமிடத்தை அடைவார். 'Right about turn' என்று சொல்லியபடியே அங்கே இருக்கும் சோபாவில் உட் காருவதாக நினைத்துக் கொண்டு அமரப் போக..... சோபா இன்னும் இரண்டு அடிகள் தள்ளியிருப்பதால் படாலென்று தரையில் விழுவார்... மேஜராக நடித்த நான் தரையில் விழுந்தேன்...

நாடகம் பார்த்துக் கொண் டிருந்த அத்தனை பேரும் 'ச்சு' என்ற சத்தத்துடன் இருக்கைகளி லிருந்து எழுந்து பரிதாபத்துடன் பார்த்தார்கள். அந்தக் கொலையாளி பதற்றப்பட்டு... மேஜரின் அருகே ஓடிவந்து அவரைத் தூக்கிவிட முயற்சி செய்வான்... நாடகம் பார்த்தவர்கள் அனைவரும் தம் தம் இருக்கைகளில் மெதுவாக உட்கார ஆரம்பித்தார் கள். சிறிது நேர நிசப் தம்... எழுந்து சோபாவில் சரியாக உட்கார்ந்து கொண்ட மேஜர் சொல்வார்...

"தன்னைப் பற்றியே அதிக மாகப் பேசிக் கொண்டிருக்கிற தற் குறிகளுக்கு இயற்கை அவ்வப் பொழுது அளிக்கின்ற தண்டனை இது" என்று!

நாடகம் முடிந்தபிறகு மேடை யிலே பாராட்டிப் பேசிய புதிய அக்க வுண்டண்டு ஜெனரல் சொன் னார்...

"தவறிக் கீழே விழுந்து விட்ட போதும் பாலசந்தர் ஒரு அருமை

கே.பாலசந்தர்

ப்ளீஸ் நம்புங்கள்!



●● ஒருவர் டைரக்டர்; இன்னொருவர் அடிஷனல் டைரக்டர்; ஆறு பேர் டெபுடி டைரக்டர்கள்; மீதியுள்ள இருபது பேரும் அசிஸ்டண்ட் டைரக்டர்கள்! இப்படியாக ஒரு துறையிலுள்ள அத்தனை பேருமே டைரக்டர்கள்தான் என்றால் நம்ப முடிகிறதா? நம்பாதவர்கள் கேரளாவிலுள்ள சிறுசேமிப்புத் துறைக்குச் சென்று பார்க்கலாம். அதில் பணிபுரியும் 28 பேருமே டைரக்டர்கள்தான்! சேமிப்பு சிறிது; செலவு பெரிது!

●● அமைச்சர்கள் மற்றும் முக்கியமான தலைவர்கள் ஆகியோருக்குப் பாதுகாப்பு அதிகாரிகள் இருப்பதில் ஆச்சரியமேதும் இல்லை. அந்தப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கே பாதுகாப்பு அதிகாரிகள் இருப்பார்களோ! இருக்கிறார்கள்; கேரளாவில்! இது தவிர, சப்-இன்ஸ்பெக்டர் பதவியிலிருந்து ஐ.ஜி. பதவி வரையிலான அனைவருக்குமே இங்கு பாதுகாப்பு அதிகாரிகள் இருக்கிறார்கள். வேலிக்கே வேலி!

திருவனந்தபுரத்திலிருந்து : எஸ்.எஸ். மணி

யான வசனத்தை Spontaneous ஆக அந்த இடத்தில் சொல்லி அற்புதமாக நிலைமையை சமாளித்தார்" என்று சொன்னார்...

'ஏற்புரை'யின் போது நான் சொன்னேன், "முதல் தடவையாக இன்று மட்டும் நான் விழவில்லை.. கடந்த 25 நாட்களாகத் தினமும் பல முறை ஒத்திகையின்போது விழுந்து விழுந்து எழுந்திருக்கிறேன்."

பிறகுதான் அவர்களுக்குப் புரிந்தது இப்படித் தவறி விழுவதும் நாடகத்திலே எழுதப்பட்டிருந்த ஒரு Situation என்று.

அப்பொழுது வெளிவந்து கொண்டிருந்த ...'Sport and past time' என்கிற வார இதழில் விமர்சனம் எழுதியிருந்த T.M. ராமசந்திரன் என்கிற கலை விமர்சகர் "Oh! what a fall, Mr.Balachander!" என்று எழுதியிருந்தார்.. எனக்குக் கிடைத்த புகழாரங்களிலேயே இதை மிகச் சிறந்ததாக நான் கருதுகிறேன்.

"Fall"என்பது பாலசந்தருக்குப் புதிதுமல்ல; 'மீண்டும் எழுந்து வருவார்' என்பது அவரது ரசிகர்களுக்குப் புதிதுமல்ல!

* * * * * * * * *

1972 லிருந்து 1994...

22 வருடங்கள்.

இது எனது இரண்டாவது இன்னிங்ஸ்.
Fairly long innings.

இரண்டு வாரங்களுக்கு முன்பு!

அப்போலோ ஆஸ்பத்திரியில் எனது திரையுலக நண்பர் ஒரு பிரபல இயக்குனர் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்கிற விஷயம் கேள்விப்பட்டு அவரைப் பார்க்கப் போயிருந்தேன்... துரு துருவென்று எப்பொழுதும் காணப்படும் அவரை கட்டிலில் அந்த நிலையில் பார்த்தபோது எனது கண்கள் பனித்தன; என் மனது சோர்வுற்றது! 'இவ்வளவுதான் வாழ்க்கை'யென்கிற சலிப்பேற்பட்டது. பூரண குணமடைந்து அவர் சீக்கிரமே வீடு திரும்ப வேண்டுமென்கிற எனது பிரார்த்தனைகளை அவரது 'துணைவியாரிடம் தெரிவித்து விட்டுத் திரும்பினேன்.

ஒரு மருத்துவமனைக்குச் சென்றாலே, அறிவார்த்தமாகச் சிந்திக்கின்ற திறன் போய், வாழ்க்கையின் மீதே வெறுப்பேற்பட்டு, விரக்தி ஏற்பட்டு 'வாழ்வே மாயம்' என்கிற மாதிரி Philosophy பேசுகின்ற நிலைக்கு நான் எப்பொழுதுமே ஆளாகிவிடுவேன்....

Lift ல் இறங்கி வந்து கொண்டிருந்தேன்.
Ground floor.

Lift திறந்தது.

என்னை எதிர்நோக்கியிருப்பவன் போல் ஓர் ஆள் அங்கே நின்று கொண்டிருந்தான். என்னைச் சந்தித்ததற்காகக் கைகொடுத்தான். 'சந்தோஷம்' என்றேன். மேலே நடந்தேன்... கூடவே தொடர்ந்தான்... டிராலியில் காமிரா மாதிரி! காரில் ஏறப்போகும் போது..."ஒரே ஒரு நிமிஷம் ஸார்" என்று கெஞ்சினான்.

"எனது வாழ்க்கை விசித்திரமானது.. என் குடும்பம் என்னை வெறுத்தது; கடவுள் என்னை ஏமாற்றினார்! சுற்றத்தார் என்னை ஆத்திரமூட்டினார்கள். வாழ்க்கை என்னை விரட்டியது! உங்கள் படம் எனக்கு வழி காட்டியது! தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்திலிருந்து நான் மீண்டேன். உங்கள் படம் 'வானமே எல்லை' இன்று என்னை உயிரோடு வைத்திருக்கிறது."

படபடவென்று பேசினான்;

"உங்களுக்கு என்றைக்கும் நான் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்" என்று கூறிவிட்டு, பதிலுக்குக் காத்திராமல் ஆஸ்பத்திரிக்குள் மீண்டும் சென்று விட்டான்.

வாரன் சாலைக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கிறேன்... இப்பொழுது 'அப்போலோ'விலிருந்து வாரன் சாலைக்கு, எனது திரைப்படத்தின் மூலம் அவனுக்கு நான் கொடுத்த அதே இன்ஜெக்ஷனை இப்போது அவன் எனக்குத் திருப்பிக் கொடுத்தான். வாழ்க்கை மீது ஏற்பட்ட வெறுப்பு, விரக்தியெல்லாம் நான் வீட்டிற்கு வருவதற்குள் எங்கேயோ ஓடி ஒளிந்தன!

'கல்கி' தொடருக்கு எழுத உட்காருகிறேன்.

ப்ளீஸ்... படித்து முடித்த மூன்று பக்கங்களை மீண்டும் திருப்புங்கள்...

ஸ்ரீ ராம ஜெயம்

வட இந்திய உல்லாச புனித யாத்திரைகள்

ஸ்ரீ மீனாக்ஷி டிராவெல்ஸ் (டில்லி)

4/24 WEA KAROLBAGH NEW DELHI - 110 005

அஞ்சல் தொடர்பு முகவரி : **POSTAL ADDRESS : I-311 Naraina Vihar, New Delhi - 110 028.**

Telephone : 5726891, 5723735, 5442540, 5715858

பஸ் புறப்படும் நேரமும் கட்டணமும் :

1. டெல்லி - புதுடெல்லி : தினசரி காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை கட்டணம் Rs. 50/-
2. தாஜ்மஹால் - ஆக்ரா - மதுரா : தினசரி காலை 6.00 மணி முதல் இரவு 10 மணி வரை Rs. 150/-
3. ஹரித்துவார் - ரிஷிகேஷ் லக்ஷ்மண் ஜூலா : தினசரி இரவு 9 மணி முதல் மறுநாள் இரவு 8 மணி வரை Rs. 150/ SUNDAY 6.00 a.m., for ARTI AT GANGA Rs. 160/-
4. ஜெய்ப்பூர் : தினசரி காலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை Rs. 250/-
5. ஆக்ரா, ஜெய்ப்பூர், ஃபதேப்பூர் சிக்ரி, பிருந்தாவன், மதுரா, திங்கள் இரவு 9 மணி முதல் புதன் இரவு 9 மணி வரை Rs. 400/-
6. முசூரி - ஹரித்வார் - ரிஷிகேஷ் - லக்ஷ்மண் ஜூலா : வெள்ளி இரவு 9 மணி முதல் ஞாயிறு இரவு 9 மணி வரை. கட்டணம் Rs. 300/-
7. பத்ரிநாத் - கேதார்நாத் - திரியுக் நாராயணன் யாத்ரா - பத்து நாட்கள் Rs. 1700/- (For 32 persons Rs. 45000/- (3x2 Bus)
8. பத்ரிநாத் - ஹரித்வார் - ரிஷிகேஷ் - ஜோஷிமட் : 7 நாட்கள் Rs. 1200/- Tour No : 7 & 8 புறப்படும் தினங்கள் : Sept 16, 26 (டிபன் காப்பி, தங்குமிடம் சாப்பாடு உள்பட)
9. ஜ்வாலாமுகி, சிந்தாபூரணி, சாமுண்டி, கங்கா, ஸ்ரீவைஷ்ணோதேவி ஆலயம், காங்டா அமிர்தஸின் பொற்கோவில், குரு க்ஷேத்திரம் கீதா உபதேசம் Rs. 1300/- (காப்பி, இரண்டு வேளை பிராமணாள் சாப்பாடு, டிபன் உட்பட). செப்டெம்பர் 15th to 20th.
10. சிம்லா, குலு, மணாலி, முசௌரி, ஹரித்வார், ரிஷிகேஷ், ரோஹ்தாங் பாஸ், டில்லி, ஆக்ரா, ஜெய்பூர் Rs. 2250/- October 9th to 19th.
11. ஜெய்ப்பூர், அஜ்மீர், புஷ்கர், ஜோத்பூர், ஜெய்சால்மர், பிகானேர், உதய்பூர், சித்தூர்கட், மவுண்ட் அபு - 10 நாட்கள் - Rs. 2200/- October 15th.

தஞ்சாவூர் : திரு. கேசவன் ஐயங்கார், 1/90 Single Street, Kalyanapuram, Tanjavur - 613 201

மேற்கண்ட சுற்றுலாக்களுக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

சென்னை : திருமதி வேதவல்லி ஸ்ரீனிவாசன், No. 8, B-4,

கேசவ பெருமாள் கிழக்கு தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004.



இது சர்வதேச போன் கால். அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்கள். எம் & ஏ, யு.எஸ்.ஏ.

எழுதும் மேஜை மீதிருக்கும், என்னைப் பார்த்து அடிக்கடி நினைவு படுத்திக் கொண்டிருக்கும் 'Bernard shaw' வின் வாக்கியங்கள் என்னை உற்று நோக்குகின்றன. அதே வாக்கியங்களையே இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் எழுதியிருக்கிறேன்.

'Bernard shaw' சொல்லியிருக்கும் விதத்திலா திரையுலகம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது? தமிழ்த் திரையைப் பற்றி மட்டும் நான் சொல்ல வில்லை... ஹாலிவுட் சினிமாவைப் பற்றியும் தான் சொல்கிறேன்...

சொல்லப் போனால் 'Bernard shaw' அவர்களின் கருத்தை திரைப்படங்களில் முழுமையாகக் கடைப் பிடித்தது மக்கள் திலகம் MGR அவர்கள் மட்டும்தான் என்று கூடத் தோன்றுகிறது. நல்ல சிந்தனைகளையும் நல்ல கோட்பாடுகளையும் தவிர, வேறு எந்த விஷயங்களையும் தனது சினிமாக்களில் அவர் திணித்ததேயில்லை... எனக்குத் தெரிந்தவரை!

அறிஞர் அண்ணா அவர்களும் கலைஞர் அவர்களும் சீர்திருத்தக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதற்கு 'திரைப்படம்' என்கிற மாஸ் மீடியத்தை அற்புதமாகப் பயன்படுத்தினார்கள்... ஏன்? தமிழகத்தில் ஆட்சி மாற்றங்கள் ஏற்படுவதற்குக் கூட 'தமிழ்த் திரை' பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

எல்லாக் கலைகளையும்விட திரைப் படக் கலைதான் எங்களுக்கு முக்கியமானது என்று லெனின் குறிப்பிட்டார்! ஏன்? தங்களது கொள்கைகளை மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும் என்பதற்குத்தான்.

ஒரு திரைப்படம் திரையிலே ஓட வேண்டுமென்றால், அந்த திரைப்படச்சுருளிலே வினாடிக்கு 24 ஃப்ரேம்கள் ஓடுகின்றன... இதைத்தான் "Truth 24 times a second" என்று கோடார்ட் என்கிற இயக்குனர் குறிப்பிட்டார்.

You can make or mar people through this mass medium.

ஆகவே, எத்தனை கவனத்துடன் திரைத் துறைப் பணியாளர்கள் பணியாற்ற வேண்டும் என்பது புரிகிறது?

பல கொலைகளைச் செய்து விட்டு தூக்கு தண்டனை பெற்ற ஆட்டோ சங்கர் திரைப்படங்களைத்தான் தனக்கு inspiration ஆகச் சொல்லியிருக்கிறான் என்று நினைத்துப் பார்க்கும்போது, நாம் வெட்கித் தலை குனியத்தான் வேண்டியிருக்கிறது.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பழிக்குப் பழி போன்ற வன்முறைகளும் உலகெங்கிலும் கட்டுக்கடங்காத அளவுக்குப் போய்க் கொண்டிருக்கிறதென்றால் அதற்குத் திரையுலகம் பெரிய அளவில் பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கிறது.

(நினைவலைகள் தொடரும்)

டாக்டர்கள், ஜாக்கிரதை!

பூனாவைச் சேர்ந்த மருத்துவர் ஆனந்த் ஃபட்கே என்பவர் மஹாராஷ்ட்ராவின் சதாரா மாவட்டத்தில் உள்ள மருத்துவர்கள் சிபாரிசு செய்த சுமார்3500 மருந்துச் சீட்டுகளை ஆய்வு செய்தபின் வெளியிட்டுள்ள கண்டுபிடிப்புகள் :



கிட்டத்தட்ட இரண்டில் ஒரு மருந்துச் சீட்டில் ஓர் அனாவசியமான மருந்து குறிப்பிடப்பட்டிருந்தது.

கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு மருந்துச் சீட்டில் அபாயகரமான மருந்து கொடுக்கப்பட்டிருந்தது.

நான்கில் ஒரு நோயாளிக்குத் தேவையற்ற ஊசிகள் போடப்பட்டிருந்தன.

சாதாரணமாக ஒரு நோயாளிக்கு மூன்று மருந்துகள் கொடுத்தால் போதுமானது. ஆனால் தனியார் மருத்துவமனை நோயாளிகளில் 62 சதம் பேருக்கும் அரசாங்க மருத்துவமனைகளுக்குச் சென்ற நோயாளிகளில் 47.7 சதம் பேருக்கும் மூன்றுக்கும் அதிகமான மருந்துகள் கொடுக்கப்பட்டிருந்தன. மத்திய அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட மருந்துகளும் கொடுக்கப்பட்டிருந்தன.

ஆதாரம் : இந்தியன் எக்ஸ்பிரஸ்
நன்றி : 'பறம்பை நுகர்வோர் குரல்'
தகவல் : நாஞ்சில் க. நாகராஜன்

அருள்மிகு ஆபத்சகாயேஸ்வர சுவாமி திருக்கோயில்

ஆலங்குடி – 612 801. வலங்கைமான் வட்டம்

குரு பரிகார ஸ்தலம்

இத்திருக்கோயில் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள ஞானசம்பந்தரால் பாடல்பெற்ற ஸ்தலமாகும். இக்கோவிலை திருவாரூரை அரசாண்ட முசுகுந்த சக்கரவர்த்தியின் அமைச்சர் 'அமுதோகர் என்பவரால்' கட்டப்பட்டது.

இங்கு சித்திரை பிர்மோற்சவமும், வருடாந்தோறும் குருபகவான் ஒருராசியிலிருந்து மறு ராசிக்கு பிரவேசிக்கும் குருபெயர்ச்சி விழாவும் சிறப்பாக நடைபெறும்.

இத்திருக்கோயிலில் உலக நலன் கருதி, "நித்யபூஜா ஆராதனை கட்டளை" என்ற கட்டளை ஒன்று நிறுவி அதற்காக ரூ.750 கட்டணமாக பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு மேற்படி கட்டளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கட்டளை கட்டணம் ரூ.750/- எழுநூற்று ஐம்பது கும்பகோணத்தில் மாற்றக்கூடியவாறு வரைவோலை எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பக் கேட்டுக் கொள்கிறோம்.

செயல் அலுவலர்

அ/மி ஆபத்சகாயேஸ்வரர் ஆலயம்
73. ஆலங்குடி – வலங்கைமான் T.K

நித்ய பூஜா கட்டளை வைப்பு நிதி ரூ.750/–

கட்டளைக்கு கட்டணம் அனுப்புவோர் தங்கள் திருமணநாள் பிறந்த நாள் அல்லது வியாபாரம் துவங்கிய நாள் தங்களுக்கு உகந்த நாள் எதுவோ அதற்கு ஆங்கில தேதியைக் குறிப்பிட்டு அன்றைய தினம் கட்டளை நடத்திட ஏற்பாடுகள் செய்யும் வகையில் எழுதி அனுப்பக் கேட்டுக் கொள்கிறோம்.

கடந்த குருபெயர்ச்சியில் கீழ்க்கண்ட ராசிநேயர்கள் குருப்ரீதி செய்து கொள்வது உத்தமம்.

ராசிகள் : ரிஷபம், கடகம், சிம்மம், துலாம், விருச்சிகம், மகரம் மீனம்.

குருவருள் பெற்று வளமுடன் வாழ்க.

பரிசு ரூ. 250/-

அந்த இடத்தில் நீங்கள் இருந்தால்?

மாப்பிள்ளைக்குப் பெண்ணையும் பெண்ணுக்கு மாப்பிள்ளையையும் ரொம்ப ரொம்ப பிடித்துப் போனது. இருதரப்புப் பெற்றோருக்கும் பரிபூரண திருப்தி. ஒரே ஒரு விஷயத்தைத் தவிர! அதுதான் வரதட்சணை.

இன்னும் இரண்டே இரண்டு சவரன் வித்தியாசத்தில் திருமணம் நின்று போகும் சூழ்நிலை. மாப்பிள்ளையின் பெற்றோர் வாங்கியே விடுவது என்கிற தீர்மானத்தில் உள்ளனர். பெண்ணைப் பெற்றவர்கள் வசதிக்குறைவால் வாடி நிற்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் நீங்கள் சம்பந்தப்பட்ட அந்த மாப்பிள்ளையாக அல்லது பெண்ணாக இருந்தால் என்ன முடிவு செய்வீர்கள்? கீழுள்ள கூப்பனில் ஆறேழு வரிகளில் பச்சென்று எழுதியனுப்புங்கள். மிகச் சிறந்த முடிவுக்குப் பரிசு ரூ. 250/- ஆறுதல் பரிசுகளும் உண்டு.

முடிவு தேதி : 3.9.94, ஆசிரியர் தீர்ப்பே இறுதி யானது.

''அந்த இடத்தில் எனது முடிவு'' என்று உறையின் மேல் எழுதியனுப்புங்கள்.

பெயர் :.......................................

விலாசம் :.......................................

....

'எதில் முதலீடு செய்வது? எதைத் தவிர்ப்பது?'

மக்களிடம் முதலீடு கோரி பங்கு மார்க்கெட்டுக்கு எத்தனையோ நிறுவனங்கள் வருகின்றன. ''எதில் முதலீடு செய்வது? எதைத் தவிர்ப்பது?'' என்று கொஞ்சம் அச்சமும், கொஞ்சம் குழப்பமுமாகத் தடுமாறுவோருக்கு வழிகாட்ட முற்படுகிறது கல்கி.

NEPC TEXTILES LTD

ஏற்கெனவே நன்கு இயங்கி வரும் நிறுவனங்கள் விரிவாக்கம் செய்யும் போது பங்குகளைக் கூடுதல் விலைக்கு விநியோகிப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இந்த நிறுவனம் புத்தம் புதிதாக ஆரம்பிக்கப்படுகிறது என்றாலும் ரூ. 10 கூடுதல் விலைக்கே பங்குகளை விநியோகிக்கிறது! அதாவது, ஒவ்வொரு பங்கையும் ரூ. 20 செலுத்திப் பெற வேண்டும். இது நியாயமா, முறைதானா என்ற தார்மிகப் பிரச்னை ஒருபுறம் இருக்க, இந்தத் துணிவுக்குக் காரணம், இதே NEPC குரூப் நிறுவனங்கள் வேறு பலவும் மிகச் சிறப்பாக நடந்து வருவதுதான் : NEPC MICON; NEPC AGRO; NEPC TEA; NEPC AIRLINES என்று பல.

புதிய தொழிலகம் கோவை மாவட்டத்தில் பல்லடம் வட்டத்தில் அமையும். பருத்தி, சணல், கத்தாழை போன்ற பல இயற்கைப் பொருள்களிலிருந்து நூலிழைகள் தயாரிப்பதே நோக்கம். தவிர பனியன் போன்ற உள்ளாடைகளுக்கான நூலும் தயாரிக்கப்படும். NEPC குரூப்பின் தலைவர் ரவி பிரகாஷ் தொழில்துறை வட்டாரத்தில் பிரபலமானவர்.

திட்டத்தின் தேவை ரூ. 35.40 கோடி. இதில் சரி பாதியை இதனைத் தொடங்கும் நிர்வாகிகளே ஏற்கின்றனர். பொது மக்களுக்கு வழங்கப்படும் அதே கூடுதல் விலை கொடுத்துப் பெறுகின்றனர். பொது மக்களுக்கு 88,48,250 பங்குகள் வழங்கப்படுகின்றன. தொழிலகம் ஏற்கெனவே பகுதி அளவு கட்டி முடிக்கப்பட்டு இயந்திரங்களும் தருவிக்கப்

பட்டு விட்டன. நவம்பரில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்ப்பு.

இதன் நிர்வாகிகளுடைய பின்னணியைப் பார்க்கும் போது புதிய நிறுவனமும் நன்கு நடக்கும் என்றும், நீண்டகால நோக்கில் பங்குகளின் விலை உயரும் என்றும் நம்பலாம். நல்ல முதலீடு.

MIDEAST INTEGRATED STEELS

இதுவும் ஒரு புதிய நிறுவனமே. MESCO குருப்பைச் சேர்ந்த MID EAST INDIA LTD நிறுவனம் இதனைத் தொடங்குகிறது. ஆண்டொன்றுக்கு 4,64,000 டன் இரும்பு உற்பத்தியாகும். முழுவதும் ஏற்றுமதிக்கே. ஒரிஸ்ஸாவின் கட்டாக் மாவட்டத்தில் தொடங்கப் பெறும் இந்த நிறுவனத்துக்கு சீனாவின் மிகப் பிரபலமான CHINA METALURGICAL IMPORT AND EXPORT CORPORATION தொழில் நுணுக்க உதவியுடன் பண உதவியும் செய்கிறது. இந்தக் கூட்டு முயற்சியில் தயாராகும் இரும்பு முழுவதையும் சீன நிறுவனமே வாங்கிக் கொண்டு விடும். இந்த ரூ. 307 கோடி திட்டத்துக்குப் பல்வேறு நிதி நிறுவனங்களின் கடன் உதவி, மற்றும் தொழில் தொடங்குவோரின் முதலீடு இவை போக, பொது மக்களுக்கு ரூ. 66.65 கோடிக்குப் பங்குகள் விநியோகமாகின்றன. ரூ. 10 பங்குகளை ரூ. 20க்குப் பெற வேண்டும். ஆனபோதிலும் பங்குகளின் மதிப்பு உயர்வது உறுதி. நல்ல விலை கிடைக்கும். எந்தவிதமாகப் பார்த்தாலும் பலன் தரும் முதலீடு.

SAMTEX FASHIONS LTD

ஆண்களுக்கான ஸூட்களும் டிரெஸர்களும் தயாரித்து, நூறு சதமும் ஏற்றுமதி செய்ய உருவாக்கப்பட்ட நிறுவனம். புதுதில்லியின் நோய்டா ஏற்றுமதி வளாகத்தில் இடம்பெறுகிறது. உலகின் மிகப் பெரிய நிறுவனங்களுள் ஒன்றான ஒரு தென் கொரிய நிறுவனத்துடன் கூட்டு முயற்சியில் நிர்மாணிக்கப்படுகிற தொழிலகம். தொழில் நுணுக்கம் மட்டுமின்றி பொருளாதார ரீதியிலும் கைகொடுக்கிறது, தென்கொரிய நிறுவனம். திட்டத்தின் மதிப்பீடு ரூ. 12.60 கோடி.. கடன் பெறும் தொகைகள் போக மூலதனப் பங்குகள் ரூ. 6.90 கோடிக்கு விநியோகமாகின்றன. இதில் ரூ. 380 லட்சத்துக்கான பங்குகளை இந்திய - தென்கொரிய நிர்வாகிகளே ஏற்றுக் கொண்டு விட, மீதி ரூ. 310 லட்சத்துக்குப் பொது மக்களுக்குப் பங்குகள், கூடுதல் விலை இன்றி ஒவ்வொன்றும் பத்து ரூபாய்க்கே வழங்கப்படுகிறது. இதிலும் அயல்நாடுகளில் வாழும் இந்தியருக்கும், யூனிட் டிரஸ்ட் போன்ற மியூச்சுவல் ஃபண்டுகளுக்கும் ஒதுக்கியது போக இந்தியப் பொது மக்களுக்கு 18,60,000 பங்குகளே விநியோகமாகும். பங்குகளுக்கு விண்ணப்பித்துக் கிடைத்தும் விடுமானால் இதுவும் மிக நல்லதொரு முதலீடாக விளங்கும்.

— வி. கோபாலன்

முடி கூடா மன்னர்கள்!

டாக்டர்

தலைமுடி கொட்டறதுக்கும் தண்ணிக்கும் சம்பந்தம் இருக்கறதாகத் தெரியலை. குளோரின் கலந்த மாநகராட்சித் தண்ணீரினால் தலைமுடி பாதிக்கப்படுவதில்லை. முடி கொட்டுறதும் கொட்டற இடத்துலே புதுசா முடி வளர்றதும் இயல்புதான். ஆனால், இலையுதிர் காலம் மாதிரி கொத்துக் கொத்தா கொட்டும் போதுதான் கவனம் தேவை!

எந்த காரணத்துனால முடி கொட்டுதுன்னு முதல்ல கண்டுபிடிக்கணும். ரத்த சோகையை பிளட் டெஸ்டில் கண்டுபிடிச்சுடலாம். நம் நாட்டில் பெரும்பாலான பெண்களுக்கு இது இருக்கு. - இரும்புச் சத்துள்ள உணவு, டானிக் சாப்பிட்டு வர, சோகை குறையும், தலைமுடி கருகருவென்று வளரும்.

தலையில் நோய்த் தொற்று அல்லது காளான் தொற்று இருப்பது மயிர்க் கால்களைப் பிரித்து ஆராய்ந்தால் நமக்கே தெரியும். சிரங்கு இருக்கலாம் அல்லது பொடுகைப் போல் வெண்படலம் (காளான்) அடர்த்தியாகப் பூசியிருக்கலாம். நல்ல ஸ்கின் டாக்டரிடம் ஆலோசனை பெற்று, சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம்.

நம்ம கட்டுப்பாட்டையும், மீறின ஒரு விஷயம் எல்லார் உடம்புலயும் செயல்பட்டுக்கிட்டு இருக்கு - அதுதான் Genetic factor - அதாவது வம்சா வழி பாதிப்பு - இன்னும் கொஞ்சம் விஞ்ஞானமா சொல்லணும்னா மரபுக் கூரமைப்பு.

ஒருத்தர் என்னதான் மாய்ந்து மாய்ந்து தலைமுடியைக் கவனிச்சுக்கிட்டாலும், சத்தான உணவையும் வைட்டமின் மாத்திரையையும் விழுங்கினாலும் அவர் முடி வளரும் அளவுக்குத்தான் வளரும்; கொட்டற 'நேரம்' வந்தா கொட்டத்தான் செய்யும். அப்படி கொட்டுவது என்பது பதினெட்டு வயதிலேயே ஆரம்பிச்சுடுதுன்னு ஆராய்ச்சியாளர்கள் சொல்றாங்க.

பராமரிப்பும் பாதுகாப்பும் அனாவசிய இழப்பை மட்டும்தான் கட்டுப்படுத்தும். மற்றபடி பாட்டன்/முப்பாட்டன், பாட்டி/கொள்ளுப் பாட்டி என்று யார் தலையை நாம் கொண்டிருக்கிறோம் என்பது அதிர்ஷ்டத்தைப் பொறுத்துத்தான்!



அதீதமாக முடி கொட்டுவதை Alopecia ன்னு சொல்வோம். எனது நண்பரின் மனைவிக்குக் கருத்தரித்ததுமே தலைமுடி முழுக்க உதிர்ந்து விட்டது; குழந்தை பிறந்த பிறகு மீண்டும் பழைய அளவுக்கு வளர்ந்து விட்டது! இதற்குக் காரணம் ஹார்மோன் மாறுதல்.

ஆண்களுக்கு ஏற்படுவது போல் பெண்களுக்கு வழுக்கை ஏற்படாமல் பாதுகாப்பதும் ஹார்மோன் அமைப்புதான். ஆனால் ஒரு குறிப்பிட்ட சமூகத்துப் பெண்களுக்கு வழுக்கை ஏற்படுவது வழக்கமாக உள்ளது. இவர்கள் தினமும் ராக்கோடி என்ற தலை ஆபரணத்தைப் பின்னந்தலையின் மத்தியில் வைத்து இழுத்..து ஜடை பின்னுவார்கள். இயற்கைக்கு விரோதமா உடம்பை இப்படி வருத்தும் போது அது எதிர்ப்புத் தெரிவிக்குது!


நேர்மாறாக, உடலைக் கவனிக்கிறேன் பேர்வழி என்று தினமும் காரட் ஜூஸ் சாப்பிடுபவர்கள் கூட இருக்கிறார்கள் - இந்த காரட் ஜூஸில் உள்ள வைட்டமின் ஏ, தேவைக்கு அதிகமா உடம்பில் சேரும் போது, முதலில் ஸ்டிரைக் செய்வது தலைமுடி! அது பொலபொலவென்று உதிர ஆரம்பிக்கும்.



பேன் மருந்தில் உள்ள ரசாயனப் பொருட்களும் ஹேர் டையில் இருக்கும் ஆர்ஸனிக் என்ற நச்சுப் பொருளும் கூட அலர்ஜியை உண்டாக்கி தலைமுடியைப் பாதிக்கும். சுத்தத்துக்காகவும் அழகுக்காகவும் இவற்றைத் திரும்பத் திரும்ப உபயோகிக்கறது எதிர்மறையான விளைவைத் தான் கொடுக்கும். மேலும் ஆர்ஸெனிக்னால காடராக்ட் வரக்கூடும் என்கிற ஒரு பரவலான பேச்சும் அடிபட்டுக்கிட்டிருக்கு.

தலைமுடியை வளரச் செய்ய மருந்தே இல்லையான்னு கேட்பீங்க... 'மினாக்ஸிடில்' அப்படின்னு ஒரு மருந்து... இதை உபயோகிச்ச ஓரளவு தலைமுடியைக் காப்பாத்த முடிஞ்சிருக்கு. ஆனால் இது பிளட் ப்ரஷர்காரங்களுக்குன்னு ஏற்பட்டது. ரத்த அழுத்தத்துக்கு ட்ரீட்மென்ட் குடுக்கப் போக, தலைமுடிக்கும் அது உதவியிருக்கு. அதே போல கிட்னி மற்றும் இதய மாற்று ஆபரேஷனுக்குப் பிறகு 'ஸைக்ளோஸ்போரின்'னு ஒரு மருந்து குடுப்பாங்க. இதுவும் தலைமுடி வளர மறைமுகமா உதவுது. இதுக்கு எல்லாருக்கும் தெரிஞ்ச உதாரணம் சொல்லணும்னா - அமெரிக்காவுல கிட்னி டிரான்ஸ்பிளான்ட்டுக்குப் பிறகு எடுக்கப்பட்ட எம்.ஜி.ஆரின் போட்டோக்களை நினைவுபடுத்தலாம். இப்படி, வேற ட்ரீட்மென்ட் குடுக்கப் போக முடி வளருதேயொழிய அதுக்குன்னு தனி ட்ரீட்மென்ட் கிடையாது. சமீபகாலமா பிளாஸ்டிக் சர்ஜன்கள் தலைமுடி டிரான்ஸ்பிளான்ட் - grafting ஆபரேஷன்கள் செய்யறாங்க. இதுல செலவு, சிரமம் இரண்டும் அதிகம்!

பேசுகிறார்!



இயற்கையோட ஒத்துப்போகிற பழக்க வழக்கங்களே நல்லது. தினமும் தலையை நன்கு அலசணும். வாரத்தில் ஓரிரு முறை சீயக்காய் உபயோகித்துச் சுத்தம் செய்யணும். நெருக்கமான பல் கொண்ட வலுவான சீப்பால் தலையைச் சீவணும். சாதாரண தேங்காய் எண்ணெயே போதும்.

விரல் நுனியில் எண்ணெயை எடுத்து, மயிர்க்கால்களில் தடவி, கொஞ்சம் சூடு பரக்கத் தேய்க்கலாம். மண்டையில் ரத்த ஓட்டம் சுறுசுறுப்பாகி தலைமுடிக்கு டானிக் கிடைக்கும்.

இதுக்கெல்லாம் நேரம் இல்லாமதான் இன்னிக்கு லேடீஸ் கூட கொத்துமல்லி கட்டு மாதிரி தலைமுடியை வெட்டிக்கிடறாங்க. பழைய காலத்துல பெண்களுக்குத் தினமும் தலைசீவிப் பின்னுவது, வீட்டு சீனியர் பெண்களின் பொறுப்பாய் இருந்தது. அன்றைய 'மண்டகப்படி'க்கான நேரமாக அந்த தலை சீவும் நேரம் இருந்தாலும் முடிக்கு நல்ல மஸாஜ் கிடைத்தது. நீள முடியைத் தானே சீவிக் கொள்வதை விட... பின்னாலிருந்து ஒருவர் சீவி விடுவதே சௌகரியமும் கூட!

பழைய காலத்து போட்டோக்களை எடுத்துப் பாருங்கள்; மழமழவென்று படிய வாரிய தலையும், தலையிலிருந்து முகத்துக்கு வழிந்து பளபளக்கும் எண்ணெயுமாக நம் அம்மாக்களோ பாட்டிகளோ நின்று கொண்டிருப்பார்கள்.

இந்த எண்ணெய் முகத்துக்குப் பயந்து தான் இன்றைக்கு 'Oil-free' hair tonic கள் பிரபலமாகி விட்டன. ஆனாலும் முகத்தில் எண்ணெய் வழியாமலிருக்கா என்றால், 'இல்லையே! இல்லையே!' என்று பலர் அலறுவது கேட்கிறது! அதுக்கும் காரணம் இருக்குங்க; அடுத்த வாரம் சொல்றேன்!

- டாக்டர் பி. ஆர். சுப்ரமண்யம்

நீங்கள் கேட்டவை – தராசு

● எம். ராஜேந்திரன், லால்குடி.

? செவ்வாய் கிரகத்தில் மட்டும் மனிதன் வாழக்கூடிய சாத்தியக்கூறு இருந்தால்?

! 'அங்கே அரசியல்வாதிகளை மட்டும் 'பேக்' பண்ணி அனுப்பி விடக்கூடிய சாத்தியக்கூறு இருக்கா?' என்று மனம் தேடும்!

● ஏ. எம். பழனிச்சாமி, கோவை.

? 'தடா சட்டத்தை நாட்டிலிருந்து விலக்க வேண்டும்' என்று சில அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளதே?

! பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து விலக்க முடியும் என்று அந்த அமைப்புகள் உத்தரவாதம் தரவில்லையே? அதைச் செய்தால் 'தடா'வையும் நீக்கி விடலாம்! 'தடா'வை துஷ்பிரயோகம் செய்யக் கூடாது' என்று ஆட்சியிலுள்ளோருக்கு அறிவுரை மட்டுமல்ல; கண்டனக் குரலும் எழுப்பலாம்; அதற்கு மேலும் செய்யலாம்! ஆனால் பயங்கரவாதம் உள்ளவரை 'தடா' தேவை.

● பூங்கோதை குப்புசாமி, சென்னை.

? 'அபுல் கலாம் ஆசாத் தமது சுயசரிதையின் ஒரு பகுதியை இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் வெளியிட வேண்டும் என்று 'சீல்' வைத்து விட்டார் அல்லவா? அப்படி ஆர்.வியும் செய்திருக்கலாம்' என்று எஸ்.ஆர்.பி. கூறியிருக்கிறாரே?

! இதில் ஓரளவு உண்மை இல்லாமல் போகவில்லை. ஆஸாதின் சுயசரிதைப் பகுதி இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு வெளிவந்த போது பட்டேல், நேரு போன்றவர்களின் தலைமுறை மாறி, இந்திரா ஆதிக்கம் மேலோங்கியிருந்ததால் அது சலசலப்பை அதிகம் உண்டாக்கவில்லை. ஆனால் இப்போது ராஜீவ் பற்றி ஆர்.வி. எழுதியதைப் பலராலும் பொறுக்க முடியவில்லை. 'ஆர்.வி. அவர்களுக்கு எழுத உரிமை இருந்தால், எங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க உரிமை உண்டு' என்று இவர்கள் கூறலாம். ஏற்கக் கூடியதே. ஆனால் அநாகரிக விதங்களில் அதை வெளிக்காட்டக் கூடாது.



• தியாக உணர்வு!

● ச. ஜான் ரவி, கோவில்பட்டி.

? தமிழக மந்திரி சபையில் எத்தனையோ அமைச்சர்கள் இருக்க கண்ணப்பனுக்கு மட்டும் ஏன் இவ்வளவு முக்கியத்துவம்?

! இதைத்தான் 'ஸ்டார் வேல்யூ'ன்னு சொல்றாங்க போல! சில பேருங்க 'கிரகச் சேர்க்கை'ம்பாங்க! இன்னும் சிலர் 'போறாத காலம்'னும் சொல்லக்கூடும்!

● ச. ஈஸ்வரன், திருச்சி. ❑

? முற்பட்ட வகுப்பினர் என்பதற்காக உ.பி. மாநிலத் தலைமைச் செயலரை விடுமுறையில் செல்லுமாறு 'முலாயம் சிங் யாதவ் கூறியுள்ளாரே?

• ஊழல் ஒழிப்பு...



• ...இயக்கம்



ஆர்.வி., சி.எஸ்

! இது கன்ஷிராமின் மேலாதிக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு. முற்பட்ட வகுப்பினர் என்ற ஒரே காரணத்துக்காகத் திறமைசாலிகளுக்குக் கல்தா கொடுப்பதால் பிற்படுத்தப்பட்டவர் முன்னேற முடியாது. முற்படுத்தப்பட்டவர்களில் புத்திசாலிகளைத் தட்டிக் கொடுத்து, பிற்படுத்தப்பட்டவர் நலனுக்காக வேலை வாங்குவதன் மூலம்தான் பிற்படுத்தப்பட்டவர்கள் துரிதமாக முன்னேற முடியும். இந்த ராஜதந்திரத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் அல்லது புரிந்து கொள்ள மறுப்பவர்கள் பிற்படுத்தப்பட்டோரின் உண்மையான நலனுக்குப் பாடுபடுபவர்கள் அல்ல.

● ஆர். திருமலை, கச்சனம்.

? திரைப்பட நகரத்துக்கு ஜெயலலிதா பெயர் சூட்டப்பட்டுள்ளது குறித்து?

! இதை எதிர்த்து எம்.ஜி.ஆர். பெயரோ எல்.வி. பிரசாத் பெயரோ சூட்டப்பட வேண்டும் என்று சொல்பவர்கள் ஆதிபரா

சக்தியை விட மானிட ஜன்மங்கள் உசத்தி என்று எண்ணுகிற அசடுகள்! மேலும், 'திரைப்படங்களின் எதிர்காலமே கேள்விக் குறியாக இருக்கும் போது திரைப்பட நகரின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறதோ என்னமோ; பழியோ பாவமோ நாமே சுமக்கலாம்' என்ற தியாக உணர்வும் அம்மையாரிடம் செயல்பட்டிருக்கலாம் அல்லவா?

● ந. இளஞ்சேரன், கொளப்பாடு.

? பரதநாட்டியக் கலைஞர் எஸ்.கே. ராஜரத்தினம் மறைவு குறித்து?

! பரதம் பயில்வோர் பலர் உண்டு; ஆனால் சிறந்த குரு என்று சொல்லக்கூடியவர்கள் வெகு குறைவு. அவர்களிலும் ஒருவர் மறைந்து போனது பேரிழப்பு. எனினும் அவரது வழுவூர் பாணி ஸ்ரீநிதி ரங்கராஜன் போன்ற சிலர் மூலம் நீண்டு நிலைத்து வாழும்.

● எச். மோகன், மன்னார்குடி.

? தஸ்லிமா நஸ்ரீன்?

! இப்போதைக்குத் தப்பி விட்டார். எதிர்காலத்தில் ஆபத்து அணுகாமலே போகலாம்; ஆனால் பயமின்றி வாழ முடியுமா? சந்தேகம் தான்.

● ஏ.ஜி. கல்யாணசுந்தரம், கோவை.

? சிங்கம், புலி, யானை போன்றவற்றைப் படைத்த இறைவன் ஈ, கொசு, எறும்பு போன்றவற்றையும் படைத்தது ஏனோ?

! சிங்கம், புலி, யானை போன்றவற்றை அழித்து ஒழித்த மனிதனைப் படைத்தவரும் கடவுள்தான். இப்போது அந்த விலங்குகளுக்குச் சரணாலயம் அமைக்க நேர்ந்திருக்கிறது. ஆனால் ஈ, கொசு போன்றவற்றை மனிதனாலும் ஒழிக்க முடியவில்லை! மாறாக அவைதாம் மீண்டும் மீண்டும் வலிமை பெற்று மனிதனுக்கு நோய்த் தொற்றுத் தந்து படாதபாடுபடுத்துகின்றன. ஆக, ஒருவேளை இது கடவுளின் கவித்துவ நீதியோ என்னவோ!

• வழுவூர் பாணி




• தப்பி விட்டார்



போன்றவர்களின் ஊழல் எதிர்ப்பு இயக்கம் பற்றி..?



• ஸீல் வைத்தார்!



• ஏன் முக்கியத்துவம்?

● பி. ராஜசேகரன், மதுரை.

? ஆர்.வி., சி.எஸ். போன்றவர்கள் சேர்ந்து ஊழல் எதிர்ப்பு இயக்கத்தைத் தோற்றுவித்திருப்பது பற்றி?

! நல்ல நோக்கத்தோடு செய்யப்படும் எந்த நற்பணிக்கும் ஒரு பயனில்லாமல் போகாது. சேஷனின் முயற்சியால் தேர்தல் களன் அதி தூய்மை அடைந்து விட்டதாகக் கூற முடியாவிட்டாலும் ஓரளவுக்கேனும் முன்னேற்றம் இருக்கத்தானே செய்கிறது? அப்படி, இந்த அமைப்பும் ஒருபுறம் மக்களிடமும் மறுபுறம் சீர்திருத்தங்களுக்காக அரசிடமும் தனது செல்வாக்கைத் தொடர்ந்து செலுத்தி வந்தால் ஒரு மாற்றம் நிகழவே செய்யும். அது ஆரோக்கியமானதாகவும் இருக்கும்.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
ச. ஈஸ்வரன்,
34, மலைக்கோட்டை வடக்குத் தெரு,
திருச்சி - 2.

கண்ணுக்கு மையழகு! கல்கிக்கு?

● கண்ணுக்கு மை அழகு
கவிதைக்குப் பொய் அழகு
கல்கிக்குத் தலையங்கம்
அழகு.
செங்குன்றம்,
பாலசுப்பிரமணியன்.

● நுனிமரத்தில் இருந்து கொண்டு அடிமரத்தை வெட்டி வரும் 'அம்மா' கார்ட்டூன்... சும்மா சொல்லக் கூடாது!
மதுரை - 16,
எல். மீனாட்சி சுந்தரம்.

● விருது பெற்ற பத்மா சுப்ரமணியத்தின் பேட்டி படித்தேன். கல்கிக்கே உரிய பாணியில் கேள்விகளைக் கேட்டதும் அதற்கு பத்மா சுப்பிரமணியம் அளித்த விறுவிறுப்பான பதில்களும் மனநிறைவைத் தந்தன. அழைப்பிதழ் வழங்கிய ஓகாடா கூறிய வார்த்தைகள் உண்மை நிலையை எண்ணி மனம் கனக்கச் செய்தன.
மருங்கூர்,
பால. கிருஷ்ணமூர்த்தி.

● மு. க. நடத்திய மாநாட்டைப் பற்றி விளக்கிய திருபரும், வை.கோ. நடத்திய எழுச்சிப் பயணத்தை விளக்கிய திருபரும் தங்கள் உரையாடல்களின் மூலம் தாங்கள் கண்டுணர்ந்ததைக் கண் முன்னே காட்டி விட்டனர்!
சேலம் - 6,
பொன்குமார்.

● "மு.க. மாநாடும், வை.கோ. நடைப் பயணமும்..." பற்றிய கல்கி திருபர்களின் அரட்டை அரங்கம், பட்டிமன்றம் பார்த்தது போல் படுவிறுவிறுப்பாக இருந்தது!
கவுந்தப்பாடி,
த. குணசேகரன்.

● 'காந்தி சொன்ன காப்பி!' துணுக்கு உண்மையிலேயே என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டது. கோதுமை காப்பித் தூள் தயாரிக்க வீட்டில் சொல்லியிருக்கிறேன்.
இராமேஸ்வரம்,
மு. முருகேசன்.


● நீங்கள் அனுபவத்தில் அறிந்து கொண்ட வாழ்வியல் உண்மை என்ற கேள்விக்குத் தராசின் பதில் ரொம்ப ரொம்பச் சரி.
மணியக்காரன்பாளையம்,
ஏ.ஜி. கல்யாணசுந்தரம்.

● இரண்டாம் பரிசுக் கதையான "புதிய நெருப்பு" சமூகத்தில், சாதியின் பெயரால் காணப்படும் ஏற்றத் தாழ்வு மனப்பான்மைக்குச் சவுக்கடியாக இருந்தது.
மோகனூர், என். மோகன்.

● 'புதிய நெருப்பு' சிறந்த சிறுகதை. 'நச்'சென்று மனதுக்குள் உட்கார்ந்தது.
அல்லிநகரம்,
ருக்மணி செல்வன்.

● கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய் என்பது போல எதிலும் அவசரப்பட்டு முடிவெடுத்து விடக் கூடாது என்பதைப் பளிச் சென்று உணர்த்தியது ஆர். வெங்கடேஷ் எழுதிய "டாட்டா" சிறுகதை.
சேங்காலிபுரம்,
என். எஸ். முகம்.

● 'தராசு'வின் பதிலில் 'துவாக்கோலின் நடுநிலை தவறி விட்டீர்கள். திருச்சி வானொலி



சிறந்தது என ஒரு பக்கமாகச் சரிந்து விட்டீர்கள். கோவை வானொலி கேட்டிருக்கிறீர்களா? வாழ்க்கை மலர், 'மக்கள் மேடை' இலக்கியச் சாளரம், வியாழன் காலை தகவல் மையம், எதிரே சில ஏணிப் படிகள் கேட்டுப் பாருங்கள்.
பொள்ளாச்சி,
கு. வைகுண்டராமன்.

● இந்த வாரக் கல்கியில் வெளியான அத்தனை ஜோக்குகளையும் தூக்கிச் சாப்பிட்டு விட்டது ரசிகன் படத்திற்கு நீர் எழுதியிருந்த விமர்சனம்.
சேலம், கே. ராஜபாலு.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka